41382

FOREIGN EXCHANGE

நாணய மாற்று

DIGITIZED

ட50

X:57
N35
76987

0 | 10
41382

FOREIGN EXCHANGE

By

J. S. PONNIAH, M. A.,

American College, Madura.

7- SEP 1935
MADRAS

X:57
N35
76987

H1882

FOREIGN EXCHANGE

நாணய மாற்று

650

மதுரை
அமெரிக்கன் கலாசாலைப் பேராசிரியர்
ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ.
இயற்றியது.

முதற் பதிப்பு

1935. [ரூ. 1 அ. 8.

X:
N
769

413க
916
332.45
76987
X:57
N35
M. I. P. PROJECT
Microfilmed.
7- SEP 1935
MADRAS

முகவுரை.

'நாணயம்' 'நாணயமாற்று' என்ற எனது இரு நூல்களையும் நான் எழுதத்தொடங்கியகாலம் முதல் அவை முற்றுப்பெறும்வரை விஷய பரிசீலனைசெய்து பலஅரியதிருத்தங்கள் செய்துதந்த சென்னை உயர்தரநீதிமன்றத்து வழக்கறிஞரான எனது நண்பர் ஸ்ரீமான் ஜி. தியாகராஜன் எம். ஏ. பி.எல். அவர்களுக்கும், உரைநடையைப் பிழையறப் பரிசோதித்த மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ் உதவியாசிரியரான ஸ்ரீமான் டி. கே. இராமானுஜ அய்யங்கார் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

மதுரை,
ஏப்ரில் 30, 1395 } ஜே. எஸ். பொன்னையா.

பொருளடக்கம்.

முதற்பாகம்

மூலக் கோட்பாடுகள்

முன்னுரை i

Introductory

1. வெளிநாட்டுப் பற்றுவரவு முறை 1

The Mechanism of Foreign Exchange

2. ஒரு உண்டியற்சீட்டு செய்யும் வேலை 6

The Work of A Bill of Exchange

3. ஒருதேசத்தின் மொத்தப் பற்றும் வரவும் 18

The Debits and Credits of a Country

4. நாணயமாற்று விகிதம் 31

The Rates of Exchange

5. அநுகூலமான நாணயமாற்றும் பிரதிகூலமான நாணயமாற்றும் 44

Favourable and Unfavourable Exchange

இரண்டாம் பாகம்

தங்கத்திட்டத்தின்கீழ் நாணயமாற்று

6. யுத்தத்திற்குமுன் வழங்கிய தங்கத்திட்டம் 53

The Pre-War Gold Standard

7. தங்க ஏற்றுமதி இறக்குமதி எல்லைகள் 59

Gold Export and Import Points

8. பாங்கி வட்டி விகிதம் 68
The Bank Rate
9. வெளிநாட்டு உண்டியல்களை வாங்கலும் விற்றலும் 78
Purchase and Sale of Foreign Exchange
10. யுத்தத்திற்கு முன்னுள்ள விலைநிலை 89
The Pre-War Price Level

மூன்றும் பாகம்
நிலையற்ற நாணயமாற்று

11. யுத்தகாலத்திலும் அதற்குப் பின்னும் உள்ள நாணயமாற்று 99
Exchanges During and After the War
12. மாற்று விகிதத்தை இணைத்தல் 106
The Pegging of Exchanges
13. நாணயமாற்றை நிலைநிறுத்தல் 111
Stabilisation
14. நாணயமாற்றும் உலகப் பொருளாதாரக் குழப்பமும் 118
Exchanges and the World Economic Crisis
15. எதிர்கால நாணயமாற்று 125
The Future of Exchanges

முதற் பாகம்

நாணயமாற்றின் மூலக் கோட்பாடுகள்

(The Fundamental Principles of Foreign Exchange)

Above the war flood which has drowned so many
of the landmarks by which the students of ex-
change were taught to steer there still rise,
serene and stronger than ever, the
pillars on which the chief laws
of this science are engraved.

(*Hartley Withers,*)

நாணயமாற்றாகிய
பெரும் நீர்ப்பரப்பினுட் செல்வோருக்கு
வழிகாட்டியாக நின்ற முக்கிய கோட்பாடுகளாகிய
பல எல்லைக் கற்களை ஐரோப்பிய மகா யுத்தமாகிய
பெருவெள்ளம் வந்து மூழ்கச் செய்திருப்பினும்
அக்கலையின் மூலக்கோட்பாடுகளாகிய
பெரும் தூண்கள் அவ்வெள்ளத்தினுள்
மூழ்காது இன்னும் ஆற்றலுடன்
உயர்ந்துவிளங்குகின்றன.

(ஹார்ட்லி விதர்ஸ்)

7- SEP 1935
MADRAS

முன்னுரை.
(Introductory)

மதுரைக்குப் பதினெட்டுமைல் வடக்கேயுள்ள மேலூர் என்னும் கிராமத்தில் சோமசுந்தரஞ் செட்டியார் என்னும் பெயரிய நெல் வர்த்தகர் ஒருவர் உண்டு. அவ்வூரில் நெற்கதிர் அறுவடையாகுங்காலத்தில் அவர் அவ்வூர்மக்களிடம் நெல்லை விலைக்கு வாங்கி, மூட்டைகளாய்க் கட்டி, மதுரைநகரை யடைந்து, அந்நெல்லை விற்று அதற்குப் பதிலாகத் தம்மூர்மக்கள் வேண்டும் பருத்திக்கொட்டை, கடலை, மண்ணெண்ணெய் முதலிய சரக்குகளை வாங்கி வண்டிகளிற் பாரமேற்றித் தம்மூர் கொண்டுசேர்ப்பார். இத்தகைய வர்த்தகமும் இதைப்போன்ற பிறவர்த்தகங்களும் உள்நாட்டிற் பலவிடங்களிலும் நிகழுவதை எல்லோரும் அறிந்திருப்பர். ஓரிடத்துப் பொருளை அது வேண்டப்படும் பிறவிடத்துக்குக் கொண்டு போய் அதற்குப் பதிலாக அவ்விடத்துப் பொருளைக் கொண்டுவருவது பொருளாதாரத்துறையின் சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். உள்நாட்டு

வர்த்தகமும் வெளிநாட்டு வர்த்தகமும் நடைபெறுவதற்குக் காரணம் இதுவேயாம்.

௨

காசி, கராச்சி முதலிய விடங்களிற் செய்யப்பெறும் அரிய பட்டாடைகளை விற்பனை செய்துவரும் பாலுசாமிஐயர் 'கம்பெனி'யார் சென்னையின்கண்ணுள்ள பிரபல வர்த்தகர்கள். பாலுசாமிஐயர் கம்பெனியார் தம்மிடத்துள்ள எப்பொருளையேனும் காசி, கராச்சி முதலிய நகரங்களுக்குக் கொண்டுபோய் அங்கு அதை விற்று அதற்குப் பதிலாகப் பட்டாடைகளை வாங்கிவந்து விற்பனை செய்பவரல்லர். தமக்கு வேண்டும் ஆடைகள், புடவைகள் முதலியவற்றின் பெயர், தரம், விலை முதலிய விவரங்களைக் குறிப்பிட்டு அந்நகரத்திலுள்ள மொத்த வர்த்தகரான (wholesale) நாராயணதாஸுக்குக் கடிதம் எழுதுவார்கள். தபால், தந்தி, 'ரெயில்வே' முதலிய போக்குவரவுக்குரிய சாதனங்கள் பெருகியிருக்கும் இக்காலத்தில் வர்த்தகர்கள் ஒருவரையொருவர் நேரிற் பார்க்காமலிருந்துகொண்டே தங்கள் வர்த்தகத்தை நடத்திவரச் சாத்தியமாகின்றது.

௩

நாராயணதாஸ் பாலுசாமிஐயர் கம்பெனியார் கேட்டபடி ஐம்பதினாயிரம்ரூபாய் மதிப்புள்ள

பட்டுப்புடவைகளை ரெயில்மார்க்கமாக அனுப்பிவிடுகின்றார். ஆனால் அவர் பாலுசாமிஐயர் கம்பெனியாரிடமிருந்து பணத்தைப் பெறுவதெப்படி? அவர்கள் நம்பிக்கையுள்ளவர்களா யிருப்பினும் தாமதமின்றிப் பணத்தை அனுப்பிவிடுவார்கள் என அவர் எவ்வாறு நிச்சயிக்கக்கூடும்? பொருள்களை விற்றவர்கள் அவற்றை வாங்கியவர்களிடமிருந்து தமக்குச் செல்லவேண்டிய பணத்தைப் பெறுவதற்குச் சிறந்த முறைகள் இலவாயிருப்பின் வர்த்தகம் எப்படி இடையூறின்றி நிகழும்? உள்நாட்டு வர்த்தகத்துக்கே இம்முறைகள் அவசியமாயிருப்பின் வெளிநாட்டு வர்த்தகத்துக்கு அவை இன்றியமையாதன வன்றோ? அத்தகைய முறைகள் யாவை?

௪

குறைந்த நிறையுள்ள பொருள்களைத் தபால் மார்க்கமாக 'வி. பி.' யில் (value payable post) அனுப்புவது வழக்கம்; பொருள்களை வரவழைத்தவர் பணத்தைக் கட்டியபின் அவற்றைப் பெற்றுக்கொள்வார். அதிக நிறையுள்ள பொருள்களை அனுப்புவோர் அவற்றை ரெயில் மார்க்கமாகப் 'பார்சலா'கவும் (Railway Parcel) 'ரசீதை' (railway receipt) வி.பி. யில் தபால்மூலமாகவும் அனுப்புவர். பொருள்களை வாங்கியவர் அவற்றிற்குரிய பணத்

தைக் கட்டியபின்னர் ரசீதைப்பெற்றுக்கொண்டு தமக்கனுப்பப்பட்ட பார்சலை ரெயில்வேஸ்டேஷ னினின்றும் எடுத்துக்கொள்வர். இம்முறையினால் பொருள்களை விற்றவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைத் தபால் இலாக்கா வசூல் செய்து கொடுத்து உதவிபுரிகின்றதல்லவா?

௫

நாம் மேலே விரித்துக்கூறிய சேவையைப் பாங்கிகளும் ஆற்றிவருகின்றன. இதற்குரிய தரகு மிகக் குறைவாக விருப்பதனால் பெருந்தொகைகளை அனுப்பவேண்டுவோர் பாங்கிகள் மூலமாகவே அவற்றை அனுப்புகின்றனர். நாம் முன்னர்க் காட்டிய உதாரணத்தில் நாராயணதாஸ் ஐம்பதினாயிரம்ரூபாய் பெறுமான பட்டாடைகளை ரெயில்வே மார்க்கமாக அனுப்பிய பின்னர் ரசீதையும், பற்றுச்சீட்டையும் (bill) 'இன்சுயர்' செய்திருந்தால் அந்தச் சிட்டையையும், தான் பற்றுவரவு செய்துவரும் காசியிலுள்ள ஒருபாங்கியினிடத்தில், உதாரணமாக இம்பீரியல் பாங்கியில், (The Imperial Bank of India Ltd.)ஒப்புவிப்பார். காசிப்பாங்கி, ரெயில்வே ரசீது முதலான சகல பத்திரங்களையும் (documents) சென்னையிலுள்ள கிளை ஸ்தாபனமாகிய இம்பீரியல் பாங்கிக்கு அனுப்பும். பற்றுச்சிட்

டையிற் குறிப்பிட்ட தொகையைப் பாலுசாமி ஐயர் சென்னைப் பாங்கியிற் கட்டி மேற்கூறிய ரெயில்வே ரசீது முதலியவற்றைப் பெற்றுக் கொள்வார். உள்நாட்டு வர்த்தகத்திற்போலவே வெளிநாட்டு வர்த்தகத்திலும் பாங்கிகள் மேற்கூறியபடி பொருள்களைவாங்கியவரிடமிருந்து அவற்றிற்குரிய தொகையை வசூல் செய்து அப் பொருள்களை விற்றவருக்குச் செலுத்தி உதவி புரிந்துவருகின்றன.

௬

நாராயணதாஸுக்குப் பாலுசாமிஐயர் கம்பெனியார் நெடுங்காலமாக வர்த்தகப் பழக்கமும் நம்பிக்கையுமுடையவர்களாயிருப்பாராயின் அவர் ஒவ்வொரு தடவையும் சரக்குகளை அனுப்பும் போது ரெயில்வே ரசீதையும் பற்றுச்சிட்டையையும் பாங்கி மூலமாய் அனுப்பிக்கொண்டிரார். பாங்கிக்கு ஒவ்வொரு தடவையும் தரகு கொடுக்க வேண்டுமன்றோ? ஆதலின் ரெயில்வே ரசீது சாதாரணத் தபாலில் அனுப்பப்படும்; ஆனால் சரக்குகள் கைக்குக் கிடைத்தவுடனே, அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட தவணையில் பாலுசாமி ஐயர் கம்பெனியார் பணத்தைக் காசிக்கு அனுப்பிவிடுவார். பெருந்தொகையைத் தபால் மூலமாக 'மணியார்டராக' அல்லது ரூபாய் நோட்டுக்களை 'இன்சூயர்'செய்து அனுப்புவதற்கு அதி

கச்செலவு பிடிக்குமாதலால் பாங்கிகள் மூலமாக வே பொதுவாகப் பணம் அனுப்பப்படுகிறது.

எ

பாலுசாமிஐயர் கம்பெனியார் நாராயண தாஸுக்கு ஏப்பிரல்மீ 30உயன்று ஐம்பதினை யிரம்ரூபாய் அனுப்பவேண்டுமானால் அவர்கள் சென்னையிலுள்ள இம்பீரியல் பாங்கியில் (The Imperial Bank of India) அத்தொகையைக் கட்டி ஒரு 'உண்டியல்' (draft) வாங்கி அதைத் தபால்மூல மாக நாராயணதாஸுக்கு அனுப்பிவிடுவார்கள். இம்பீரியல் பாங்கியில் உண்டியலைக் காட்டி நாரா யணதாஸ் தனக்குச் செல்லவேண்டிய ஐம்பதினை யிரம் ரூபாயைப் பெற்றுக்கொள்வார். சென்னைப் பாங்கியும் காசிப்பாங்கியும் மேற்படித் தொகை யைத் தங்கள்தங்கள் கணக்கில் பற்றுவரவு செய்துகொள்ளும். பாலுசாமிஐயர் கம்பெனியார் கட்டிய அன்றையத்தினமே நாராயணதாஸுக் குப் பணம் கிடைக்கவேண்டுமானால் சென்னைப் பாங்கி, காசிப் பாங்கிக்குத் தந்திமூலமாய்ச் செய்தி யைத் தெரிவித்துவிடும். தந்திச்செலவையும் உண் டியலைப் பெறுவதற்குரிய தரகையும் பாலுசாமி ஐயர் கம்பெனியார் பாங்கிக்குக் கொடுக்க வேண் டும். ஏப்பிரல்மீ 30உயன்று சென்னையிலுள்ள இம்பீரியல் பாங்கிக்குக் கைப்பணம் அவசியமாக

இருக்குமானால் (நல்லஇலாபத்துடன் ஒருவருக்குக் கடன் கொடுத்துதவ) பாலுசாமிஐயர் கம்பெனி யாருடைய ஐம்பதினாயிரம்ரூபாய்க்கும் யாதொரு தரகுமின்றி உண்டியல் கொடுக்கப்படும். சென் னைக்கும் காசிக்கும் பற்றுவரவு செய்யும் முறை எவ்வளவு எளிதாக முடிகின்றது! இவ்வளவு எளி தாகவே லண்டனுக்கும் நியூயார்க்குக்கும் அல் லது ஹாங்காங்குக்கும் (Hongkong) ஹாம்பர்க்குக் கும் (Hamburg) பற்றுவரவு நடந்துவருகிறது.

அ

தற்காலப் பாங்கிகள் ஆற்றிவரும் வேறொரு பணியும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. காசியிலி ருந்து சரக்குகள் அனுப்பியபின் அவற்றிற்குரிய பணத்தைப் பாலுசாமிஐயர் கம்பெனியாரிடமி ருந்து நாராயணதாஸ் பெறுவதற்குப் பதினைந்து நாட்கள் அல்லது (தவணைக்கு விற்றிருந்தால்) மூன்றுமாதங்கள்பிடிக்கின்றனவென்றுவைத்துக் கொள்வோம். ஒருகால் நாராயணதாஸுக்குப் பணம் அவசியந் தேவையாயிருப்பின் அவர் அவ் வளவு காலம் காத்திருக்கமுடியாது. இந்நிலையில் நாராயணதாஸ் விற்ற சரக்குகளுக்குரிய முழுத் தொகையையும் பாங்கிகளே கொடுத்துதவ முன் வருகின்றன. பாலுசாமிஐயர் கம்பெனியாரிட மிருந்து எத்தனை நாட்களுக்குப்பின்னர் பற்றுச்

சீட்டுத் தொகையைத்தான் பெறக்கூடுமோ அத்தனை நாட்களுக்குரிய வட்டியைக் கழித்து (discounting the bill) நாராயணதாஸுக்குக் காசியிற் பணத்தைக் கட்டிவிடுகின்றது. குறிப்பிட்ட தவணையில் நாராயணதாஸின் பற்றுச்சீட்டுக்குரிய தொகையைப் பாலுசாமிஐயர் கம்பெனியார் பாங்கியிற் கட்டிக் கணக்கைத் தீர்த்துக் கொள்வர். இங்ஙனமாகச் சரக்கை விற்றவர்களுக்கு வட்டி நீக்கி உடனே பணத்தைக்கொடுத்துதவுவதில் நல்ல இலாபங் கிடைப்பதால் நம்பிக்கையுள்ள வர்த்தகர்களுடைய பற்றுச் சீட்டுக்களைப் பாங்கிகள் போட்டி போட்டு வாங்குவதுண்டு. பற்றுச்சீட்டுக்களை வட்டிநீக்கி வாங்கித் தவணைக்காலம்வரை வைத்திருந்து (holding the bill) பின்னர் அவற்றிற்குரிய தொகையைப் பெற்று இலாபமடையும் உண்டியல் வர்த்தகர்களும் (bill brokers) உண்டு.

௯

உள்நாட்டு வர்த்தகப் பற்றுவரவு செய்து கொள்வதில் வேறொரு அரிய முறையும் உண்டு. பாலுசாமிஐயர் நாராயணதாஸுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் அனுப்பவேண்டுஞ் சமயத்தில் காசியிலுள்ள விஸ்வநாதஞ்செட்டியார் என்பவர் சென்னையிலுள்ள கன்னையா செட்டியாருக்கு ஐம்

பதினாயிரம் ரூபாய் அனுப்பவேண்டியதிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். நாம் முற்கூறியபடி பாலுசாமி ஐயர் சென்னையிலிருந்து ஒரு உண்டியலைக் காசிக்கும், விஸ்வநாதஞ்செட்டியார் காசியிலிருந்து ஒரு உண்டியலைச் சென்னைக்கும் ஆக அனுப்பினால் ஐம்பதினாயிரம்ரூபாய் அங்குமிங்குமாக இருமுறை அனுப்பப்படுகின்றதல்லவா? அதற்குச் செல்லும் செலவும் வேறு. இதை நீக்குவதெங்ஙனம்? விஸ்வநாதஞ்செட்டியாரிடம் நாராயணதாஸ் ஐம்பதினாயிரம்ரூபாயை வாங்கிக்கொண்டு பாலுசாமி ஐயர் கம்பெனியார் அத்தொகையைக் கன்னையா செட்டியாரிடம் கொடுத்துவிடும்படி கடிதம் எழுதிவிட்டால் அல்லது ஒரு உண்டியற்சீட்டு (bill of exchange) அனுப்பிவிட்டால் பணம் அங்குமிங்குமாக இருமுறை அனுப்பப்படும் சிரமம் நீங்குமல்லவா? இவ்வாறு கணக்குத்தீர்க்க விரும்புவார் ஒருவரையொருவர் அறிந்திருத்தல் வேண்டும். அங்ஙனமில்லாதிருப்பவர்களின் பற்றுவரவையும் மேற்கூறிய முறையில் முடித்துக்கொள்வதற்காகப் பாங்கிகளே உண்டியற்சீட்டுக்கள் கொடுத்துதவுவதுமுண்டு. உள்நாட்டு வர்த்தகத்திலிருக்குமாறே வெளிநாட்டு வர்த்தகப் பற்றுவரவுக் கணக்கையுந் தீர்த்துக் கொள்வதற்கு இத்தகைய உண்டியற்சீட்டு முறைகள் உண்டு.

௧௦

நாம் இதுகாறும் எடுத்துக்காட்டிய உதாரணங்களில் உள்நாட்டுவர்த்தகப் பற்றுவரவு முறைகள் விளக்கப்பட்டன. மேல்வருங் கட்டுரையில் வெளிநாட்டுவர்த்தகப் பற்றுவரவு முறைகள் விவரிக்கப்படும். ஆயினும் நாம் ஆங்காங்கே குறிப்பாய்ச் சுட்டியபடி இவ்விருவகை முறைகளிலும் வேறுபாடுகள் கிடையா. உள்நாட்டு வர்த்தகம் நிகழ்வதற்குரிய காரணங்களே பெரும்பாலும் வெளிநாட்டுவர்த்தகம் நிகழ்வதற்குரிய காரணங்களாம். உள்நாட்டு வர்த்தகப் பற்றுவரவைத் தீர்த்துக்கொள்வதற்கு உண்டியற் சீட்டுக்கள் எவ்வாறு உபயோகப்படுகின்றனவோ அவ்வாறே அவை வெளிநாட்டு வர்த்தகப் பற்றுவரவுக் கணக்கிலும் உபயோகப்படுகின்றன.

எனினும் எத்துணைதான் கற்றாலும் எவ்வாற்றால் விளக்கினாலும் வெளிநாட்டு வர்த்தகப் பற்றுவரவில் அடங்கிய சில விஷயங்கள் சிக்கலானவைகளாகவும் எளிதில் விளங்கமாட்டாதவைகளாகவும் இருந்துவருகின்றன. காரணம் என்னை? உள்நாட்டுப் பற்றுவரவில் வழங்கப்பெறும் நாணயம் ஒரேவகைத்து. ஆனால் வெளிநாட்டுப் பற்றுவரவில் வழங்கப்பெறும் நாணயங்களோ பல வகையின. ஆதலால் ஒவ்வொரு தேச நாணயத்திலும் அடங்கிய உலோகமதிப்பு வெவ்வேறாதலின் அவற்றவற்றின் உலோகமதிப்புப்படி கணக்கிட்டு ஒவ்வொரு நாணயத்தையும் பெற்றுக் கொள்ளவேண்டும். மேலும் இக்காலத்தில் நாணயங்களை ஒரு தேசத்தினின்று மறுதேசத்திற்கு அனுப்பும் வழக்கம் பெரும்பாலும் இல்லை. ஏனெனில் ஒருதேசத்து நாணயத்தைப் பிற தேசங்களில் வழங்க இயலாது. ஜெர்மானியரின் 'மார்க்கு' நாணயம் இந்தியாவில் செலாவணியாவதில்லை. அதுபோலவே நமது ரூபாயும் ஜெர்மனி தேசத்திற் செலாவணியாவதில்லை. ஆதலின் ஒரு தேச நாணயம் மறுதேச நாணயத்திற்கு மாற்றப் படவேண்டும். (The currency of one country is to be converted or exchanged into the currency of another) இதைத்தான் நாணயமாற்று (Foreign Exchange) என்கிறோம். ஒவ்வொரு தேசத்திலும் நாணயங்கள் வெவ்வேறாக இருப்பதனாலும், அவற்றின் உலோகமதிப்பு அன்றிக் 'கொள்மதிப்பு' (purchasing power) வேறுபடுவதனாலும் நாணயமாற்றிற் பல இடைஞ்சல்கள் விளைகின்றன. எல்லாத் தேசங்களுக்கும் ஒரேவகை நாணயம் (universal currency system) இருந்துவருமாயின் உள்நாட்டு வர்த்தகப் பற்றுவரவுக்கும் வெளிநாட்டு வர்த்தகப் பற்றுவரவுக்கும் எவ்வித வேற்றுமையும் இராது.

No. 7335. Madras,
Rs. 50,000. 17—8—1934.

THE IMPERIAL BANK OF INDIA, LTD.,

On demand pay NARAYANA Doss or Order Rupees Fifty Thousand for value received.

To *For the Imperial Bank of India Ltd., Madras.*
The Imperial Bank of India Ltd. Sd....................Agent
BENARES. ....Cashier/Acctt.

மாதிரிப் பாங்கிஉண்டியல் (bank draft).

CASH BILL. காசி.
17—8—1934

வே. தா. நாராயணதாஸ்,
பட்டு வியாபாரம், காசி.

உருப்படி	விவரம்.	ரூ.	அ.	பை
	E. & O. E. மொத்தம்			

மாதிரிப் பற்றுச்சீட்டு (bill).

பவஅ ஆடிமீ 28உ (விஸ்வநாதஞ் செட்டியார் வரவு)
நாராயணதாஸ் பற்று ரூ 50,000. இந்த ரூபாய் ஐம்பதினுயிரமும் ஷியார் ஆர்டருக்கு, சென்னையிலுள்ள கன்னையா செட்டியாருக்கு பாலுசாமி ஐயர் கம்பெனியார் நாளதுதேதி முதல் நூற்றுக்கு ரூ 0—6—0 வீதம் வட்டியுடன் அல்லது தரிசனையில் பணம் கொடுத்து நாராயணதாஸ் பற்று எழுதிக் கொள்ளவேண்டியது.

ஒப்பம். நாராயணதாஸ்,
காசி.

மாதிரி உண்டியற்சீட்டு (bill of exchange).

1

வெளிநாட்டுப் பற்றுவரவு முறை.
(The Mechanism of Foreign Exchange)

வெளிநாட்டு வர்த்தகம் மிகப் பழமைவாய்ந்தது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர், பெனிசியர் (Phœnicians), எகிப்தியர், இந்தியர், சீனர் முதலானோர் பற்பல தேசங்களுடன் வர்த்தகஞ் செய்துவந்தனரெனச் சரித்திரத்திற் காணப்படுகிறது. பண்டைக்காலத்து வர்த்தகர்கள் ஒரு நாட்டில் விளையும் அல்லது செய்யப்படும் அரிய பொருள்களை அயல்நாடுகளுக்குக் கொண்டுபோய் அங்கு அவைகளை விற்று அந்நாட்டுப் பொருள்களைத் தம் நாட்டுக்கு ஏற்றிக் கொண்டுவருவார்கள். இவ்வாருய வர்த்தகமுறை உள்நாட்டில் இருவர் நேருக்குநேரே பண்டமாற்றுச் செய்வதை (direct barter) யொக்கும்.

2. பொருளுக்குப் பொருளை மாற்றிக்கொள்வதில் நிகழும் இடைஞ்சல்களைப் போக்கவே மக்கள் பொன், வெள்ளி ஆகிய உலோகங்களைப்

பொதுப்பொருளாகக் கொண்டனர். பின்னர் அவ்வுலோகங்களாலாய நாணயங்களை வழங்கினர். உலோகங்களையும் நாணயங்களையும் பண்டமாற்றுப் பொதுப்பொருளாக வழங்கியதனால் ஒருதேசவர்த்தகர்கள் மறுதேசங்களுக்கு நேரிற் சென்று வர்த்தகஞ்செய்யவேண்டிய சிரமம் நீங்கிற்று. எப்படியெனில் ஒவ்வொருதேச வர்த்தகர்களும் தத்தம் தேசப்பொருள்களைப் பிறதேசங்களுக்குக் கப்பல்மூலமாகவேனும் வேறு போக்குவரவுச் சாதனங்கள்மூலமாகவேனும் அனுப்பிவைத்து அப்பொருள்களின் விலைமதிப்புக்குரிய பணத்தை வெள்ளி தங்கங்களாக அன்றி நாணயங்களாக ஒருவருக்கொருவர் அனுப்பிக் கணக்கு முடித்துக்கொள்ளலாம். பண்டைக்காலத்து வர்த்தகர்கள் பெரும்பாலும் உலோகங்களையே நிறுத்துப்பெற்று கணக்குத்தீர்த்துக்கொண்டனர். சிறுபான்மை நாணயங்களும் அங்கீகரிக்கப்பட்டன.‡ அவ்வாறு செய்தகாலத்து அந்நாணயங்களின் புறமதிப்பாகிய அரசாங்க மதிப்புப்படி (face value or the official valuation of the coin) அவற்றைக் கொள்ளாது அவற்றின் சுயமதிப்பாகிய வர்த்தக மதிப்புப்படியே (intrinsic or commercial value of

‡ இவ்வழக்கம் பண்டு நம்நாட்டிலும் நிகழ்ந்தமை "யவனர் தந்த வினைமாணன்கலம், பொன்னொடுவந்து கறியொடுபெயரும் வளங்கெழுமுசிறி" (அகம். 149) என்பதனாலும்அறியலாம்.

the metal) அவற்றைப் பெற்றுவந்தனர்.* தங்கத்தை அல்லது நாணயங்களை அனுப்பிக் கணக்குத் தீர்த்துக்கொள்ளும் இம்முறையில் ஏற்படும் சங்கடங்களை நீக்கவே உண்டியற் சீட்டுக்கள் உபயோகிக்கப்படலாயின. இதை ஒரு உதாரணத்தினால் விளக்குவாம்.

3. 'க' என்னும் இந்திய வர்த்தகன் 'த' என்னும் ஜப்பானிய வர்த்தகனுக்குப் பதினாயிரம்ரூபாய்பெறுமான பஞ்சை அனுப்புகிறான் என்றும் 'ப' என்னும் ஜப்பானிய வர்த்தகன் ஒருவன் 'ம' என்னும் இந்திய வர்த்தகனொருவனுக்குப் பதினாயிரம்ரூபாய் பெறுமான கண்ணாடிப்பொருள்களை அனுப்புகிறான் என்றும் வைத்துக்கொள்வோம். 'த' இந்தியாவுக்குப் பதினாயிரம் ரூபாயையும் 'ம' ஜப்பானுக்குப் பதினாயிரம் ரூபாயையும் தனித்தனியே அனுப்பித் தத்தம் கணக்கை முடித்துவந்தால் அத்தொகை அங்குமிங்குமாக இருமுறை வீணே அனுப்பப்படுகின்றதன்றோ? மேலும் வெளிநாடுகளுக்குப் பணத்தை அனுப்புவதிற் பல செலவுகளும் சிரமங்களும் விளையும். ஆதலால் நாம் இங்குக் காட்டிய உதா

* இவ்வாசிரியர் எழுதி வெளியிட்டுள்ள 'நாணயம்' என்னும் நூலில் இப்பதங்களின் கருத்துக்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

ரணத்தில் 'ம' 'க' வினிடத்திலும் 'த' 'ப' வினிடத்திலும் முறையே பதினாயிரம் ரூபாயைக் கட்டிவிட்டால் இந்நால்வருடைய பற்றுவரவுக் கணக்கையும் முடித்துவிடலா மல்லவா? இம்முறையைப் பின்வரும் படத்தினால் விளக்கியுங் காட்டலாம்.



4. இதனால் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இருமுறை தங்கத்தை அங்குமிங்கும் அனுப்புஞ் சிரமம் நீங்குகின்றதென்பது தேற்றம். இச் சிறந்த முறையைக் கையாளவேண்டுமானால் 'ம' 'க' விடத்திலும், 'த' 'ப' விடத்திலும் பணத்தைக் கொடுத்துவிடவேண்டுமென அதிகாரப் பத்திரங்கள் அளித்தல் வேண்டும்.*

---

* "The use of bills of exchange simply means the creation of the necessary documents which will enable those payments to be made without the requirement of the actual money going to and fro across the ocean" Flux, *Foreign Exchanges*, P. 23).

5. வெளிநாட்டு வர்த்தகஞ்செய்வார் 'க' 'த' 'ப' 'ம' என்னும் நால்வர்மட்டும் அல்லர். அவ் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தேசங்களும் இரண்டு மட்டும் அல்ல; அவை மிகப்பல. ஆதலால் ஒவ்வொருதேச வர்த்தகர்களும் அயல்தேச வர்த்தகர்களுக்குச் செல்லவேண்டிய தொகை இவ்வளவிவ்வளவு எனத் தெரிந்து ஒருவருக்கொருவர் அதிகாரப் பத்திரங்கள் அளித்துத் தத்தம் கணக்கை முடித்துக்கொள்ளல் கூடாதகாரியமாம். பற்பலதேச வர்த்தகர்களுக்குள்ளும் உள்ள எல்லாப் பற்றுவரவுக் கணக்குகளையும் முடித்துக் கொள்ளுமாறு அதிகாரப் பத்திரங்கள் அளிக்கத் தக்க ஸ்தாபனங்கள் இருப்பின் அவை வெளிநாட்டு வர்த்தகம் நிகழ்வதற்குப் பேருதவியாகவிருக்குமன்றோ? இத்தகைய ஸ்தாபனங்கள் பாங்கிகள். உண்டியற்சீட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு பாங்கிகளின் மூலமாக வர்த்தகர்கள் தங்கள் பற்றுவரவுக்கணக்கை எவ்வாறு முடித்துக்கொள்ளுகின்றனரென்று இனிவருங் கட்டுரையிற் காட்டுவாம்.

2

ஒரு உண்டியற்சீட்டு செய்யும் வேலை.

(The Work of A Bill of Exchange)

உண்டியற்சீட்டுக்களினாலேயே வெளிநாட்டு வர்த்தகப் பற்றுவரவுக்கணக்கு முடித்துக்கொள்ளப்படுகிறதென முற்கூறினோம். இச்சாதனத்திலடங்கிய நயத்தை நன்குணரவேண்டுமானால் வெளிநாட்டு வர்த்தகம் நடத்துவதில் அடங்கிய சில இடர்ப்பாடுகளை முதலில் அறிந்துகொள்வது அவசியம். அவ்விடர்ப்பாடுகள் பின்வருமாறு.

2. 'க' என்னும் இந்தியவர்த்தகன் 'த' என்னும் ஜப்பானிய வர்த்தகனுக்குப் பதினாயிரம் ரூபாய் பெறுமான பஞ்சை ஏற்றுமதி செய்தால் 'த' பதினாயிரம்ரூபாயையும் உடனே கைம்மேற் பணமாகக் கட்டிவிடான். ஏற்றுமதியாக்கப்பட்ட பஞ்சு ஜப்பான்தேசம் போய்ச்சேரவும், சேர்ந்த பின்னர் அது விலையாகவுஞ் சிறிதுகாலஞ் செல்லுமாதலால் சுமார் ஒன்று முதல் மூன்றுமாதத் தவணைக்கே 'த' பஞ்சை இறக்குமதிசெய்வான்.

ஆனால் 'க' தனக்குச் சேரவேண்டிய தொகைக்கு அவ்வளவுகாலங் காத்திருக்க இசையான். சரக்கை ஏற்றுமதி செய்தவுடனே அவனுக்குப் பணந் தேவையாயிருக்கும். ஆனால் பஞ்சு கைக்குக் கிடைத்தபின்னர்தான் 'த' பணத்தைக் கொடுக்க ஒப்புவான். இந்நிலையில் 'க'வுக்கு உடனே பணத்தைக் கொடுத்துதவி அத்தொகையைப் பின்னர் 'த'விடமிருந்து வசூலித்துக்கொள்ளப் பாங்கி முற்படுமாகில் நாம் இங்குக் காட்டிய இடர்ப்பாடு நீங்குமன்றோ?

3. ஏற்றுமதிவர்த்தகர்களும் இறக்குமதி வர்த்தகர்களும் பெரும்பாலும் ஒருவரையொருவர் முன்பின் அறியாதாராயிருப்பதே வெளிநாட்டு வர்த்தகம் நடத்துவதிலடங்கிய இரண்டாம் இடர்ப்பாடு. ஆதலாற்றான் நாம் மேலே கூறியபடி ஏற்றுமதிசெய்த வர்த்தகர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைப் பாங்கி உடனே அவர்களுக்குக்கொடுத்து, பின்னர், அப்பணத்தை இறக்குமதி வர்த்தகர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறது. பாங்கிகள்தான் இத்தகைய சேவையை ஆற்றற்பாலன. ஏனெனில் தற்காலத்திலுள்ள பெரிய பாங்கிகள் உலகத்தின் முக்கிய பட்டினங்களில் எல்லாம் கிளைஸ்தாபனங்களை நிறுவியும் பிறநகரங்களில் நிருபர்களை ஏற்படுத்தியும்

தொழில்செய்துவருகின்றன. ஆதலால் ஆங்காங்குள்ள வர்த்தகர்களின் மதிப்புடைமை, செல்வநிலை முதலியனவற்றைப் பாங்கி நிர்வாக அதிகாரிகள் நன்கு தெரிந்துகொள்ளவல்லனராய் இருப்பதன்றி இறக்குமதிசெய்தவர்கள் குறிப்பிட்ட தவணையிற் பணத்தைக் கொடுத்துவிடுமாறுஞ் செய்கின்றனர்.

4. வெளிநாட்டு வர்த்தகத்தில் அடங்கிய பெருஞ்சங்கடம்—இதுவே மூன்றும் இடர்ப்பாடு—ஒருதேச நாணயத்தை அதன் மதிப்புக்குச் சமமான மறுதேச நாணயத்துக்கு மாற்றுவதாம். பஞ்சை இறக்குமதிசெய்த ஜப்பானிய வர்த்தகன் தனது தேசநாணயமாகிய 'யென்' (Yen) நாணயத்திற் கணக்குத்தீர்ப்பான்; ஆனால் 'யென்' நாணயம் இந்தியாவில் வழங்க இயலாததாகையால் அதை முதலில் ரூபாய்க்கு மாற்றவேண்டும். இவ்வாறு ஒவ்வொருதேச நாணயத்தையும் பிறதேச நாணயங்களுக்கு மாற்றிக்கொடுப்பதற்கும் ஒரு பொது ஸ்தாபனம் வேண்டும். இத்தகைய ஸ்தாபனமும் பாங்கியே. நாம் மேலே கூறியபடி பஞ்சை ஏற்றுமதிசெய்த 'க' வுக்குப் பதினயிரம் ரூபாயையும் பாங்கி கொடுத்துவிடுகிறது; பின்னர் அது அதற்குச் சமமான தொகையை 'த' விடமிருந்து 'யென்' நாணயத்திற் பெற்றுக்கொள்ளு

கிறது. பாங்கிகள் இன்றேல் இவ்வளவு சுலபமான முறையில் நாணயமாற்று நடைபெருது.

5. இங்ஙனமாக ஏற்றுமதிவர்த்தகர்களுக்குச் செல்லவேண்டிய தொகையை உடனே அவர்கள் தேசநாணயத்திலேயே கணக்குத்தீர்த்துவிட்டுப் பின்னர் இறக்குமதிவர்த்தகர்களிடமிருந்து அன்னவர்களின் தேசநாணயத்திலேயே அத்தொகையைப் பாங்கிகள் பெற்றுக்கொள்ளவேண்டுமாகில் பொருள்களை ஏற்றுமதிசெய்தார் அவற்றிற்குரிய தொகையை இறக்குமதிசெய்தாரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்குப் பாங்கிகளுக்கு அதிகாரப்பத்திரங்கள் அளிக்கவேண்டுமன்றோ? இத்தகைய அதிகாரப்பத்திரங்களே உண்டியற்சீட்டுக்கள் ஆம். இதற்கு உதாரணம் ஒன்று காட்டுவாம்.

6. 'மதுரை பேப்பர் ஸ்டோர்ஸ்' வர்த்தகர் (Messrs The Madura Paper Stores) ஜெர்மன் தேசத்து ஹாம்பர்க் நகரிலுள்ள 'லப்ட் மாக் கம்பெனி' (Luft Mack & Co.) யிலிருந்து பதினயிரங் கட்டுகள் (bales) காகிதம் இரண்டுமாதத் தவணைக்குத் தரவழைக்க விரும்புகிறார் என வைத்துக்கொள்வோம். அப்பொழுது பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் லண்டன் பாங்கியொன்று, உதாரணமாக, 'பி. அன்ட். ஓ. பாங்கிங் கார்ப்பொரேஷன்'

(The P. & O. Banking Corporation Ltd.) தாம் வாங்கும் சரக்குகளுக்குரிய தொகையைத் தம் பெயரால் லப்ட் மாக் கம்பெனியாருக்குக் கொடுத்துதவவேண்டுமென்று ஒரு பற்றுவரவுக் கணக்கு வைத்துக்கொள்ள ஏற்பாடுசெய்வார். செய்தபின் காகிதத்தை அனுப்பும்படி பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் லப்ட் மாக் கம்பெனியாருக்குக் கடிதம் எழுதுவார்.

7. கடிதங் கிடைத்தவுடன் லப்ட் மாக் கம்பெனியார் சரக்குகளைக் கப்பலில்ஏற்றி, ஏற்றியதற்காதாரமான ஏற்றுமதிச் சிட்டையையும் (bill of lading), கப்பற்பிரயாணத்தில் நெருப்பு, புயல் முதலிய விபத்துக்களாற் காகிதத்துக்குச் சேதம் நேரிட்டால் அதற்கு ஈடுசெய்வதற்கு ஒப்புக்கொண்ட கம்பெனியாரின் நஷ்ட உத்தரவாதப் பத்திரத்தையும் (insurance policy), பிற பத்திரங்கள் (other documents) எவையேனும் வேண்டியிருந்தால் அவற்றையும் ஜாக்கிரதையாகப் பெற்றுக்கொள்வர். இப்பத்திரங்கள் தாம் விற்ற சரக்குகள் இறக்குமதியாகவேண்டிய துறைமுகம் போய்ச்சேருவதற்கு ஆதாரமானவையன்றோ?

8. சரக்குகளை ஏற்றுமதிசெய்தவுடனே லப்ட் மாக் கம்பெனியாருக்குப் பணம் தேவையாயிருப்பதனால் அவர்கள் தம்மிடமுள்ள பத்திரங்

களை ஆதாரமாகக்காட்டி தமக்குச் சேரவேண்டிய தொகை முழுவதையும் ஹாம்பர்க் நகரிலுள்ள பி. அன்ட். ஓ. கிளைப்பாங்கியிற்* பெற்றுக்கொள்வர். பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகரிடத்துள்ள நம்பிக்கையினாலும் விற்றசரக்குகளின் ஆதாரத்தினாலும் பாங்கி லப்ட் மாக் கம்பெனிக்குப் பணத்தைக் கொடுத்துவிடுகிறது. பணம் ஜெர்மனியின் தேசநாணயமாகிய 'மார்க்'கில் கொடுக்கப்படுமென்பதை யறிக. பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் செலுத்தவேண்டிய தொகையைப் பாங்கி செலுத்திவிட்டபடியால் இனி வ்ப்ட் மாக் கம்பெனியார் செய்யவேண்டுவதெல்லாம் பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் அத்தொகையைப் பாங்கியிற் கட்டிவிடவேண்டுமெனக் கட்டளையிடுவதே †. இதற்காகப்

---

* சிக்குநீக்கலுக்காக பி. அன்ட். ஓ. கிளைப்பாங்கி உதாரணமாகக் காட்டப்பட்டது. உண்மையில் ஹாம்பர்க் நகரில் அக்கிளைப் பாங்கி கிடையாது. ஆதலால் லப்ட் மாக் கம்பெனியார் இத்தொகையை ஒரு ஜெர்மன் பாங்கியில் (அல்லது வேறொரு ஆங்கிலப் பாங்கியில்) பெற்றுக்கொள்வர்; பி. அன்ட். ஓ. பாங்கி இத்தொகையைத் தன் பற்றாகவும் ஜெர்மன் பாங்கியின் வரவாகவும் தன் கணக்கிற் பதிவு செய்துகொள்ளும்.

† உண்டியற்சீட்டுக்குச் சுருக்கமாகச் சொற்பொருள்விரிப்பார் அதை 'அதிற் குறிப்பிட்ட தொகையைக் குறிப்பிட்டவருக்குக் கொடுத்துவிட இடுங் கட்டளை' என்பர். (A bill of exchange is an order to pay) ஆங்கிலச் சட்டத்தில் அதன் இலக்கணம் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது: 'A bill of

பின்வருமாறு ஒரு உண்டியற்சீட்டை எழுதி, அதையும், தாம் விற்ற சரக்குகளுக் காதாரமான பத்திரங்களையும் பாங்கியினிடத்தில் ஒப்புவிப் பார்கள்.

> (லப்ட் மாக் கம்பெனி.)
>
> ஹாம்பர்க், 5-5-1934. பவுண்டு 4500-9-2.
>
> மதுரை பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகருக்கு.
>
> இந்த உண்டியலைப்பார்த்த அறுபதுநாள் தவணையில் பி. அன்ட். ஓ. பாங்கிங் கார்ப்பொரேஷனுக்கு நாலாயிரத்து ஐந்நூறு பவுண்டு ஒன்பது ஷிலிங் இரண்டு பென்ஸ் கட்டிவிடவும்.
>
> பதினையிரங்கட்டுகள் காகிதம் 'சான்டர்பெல்ஸ்' கப்பல்மூலம் அனுப்பியதற்குப் பாங்கியில் 'பணம் பெற்றுக்கொண்டோம்.
>
> பணங்கட்டவேண்டிய இடம்—சென்னை.
>
> நிர். 4452. லப்ட் மாக் கம்பெனி.

9. லண்டன் பாங்கி லப்ட் மாக் கம்பெனியார் எழுதிய (drawer) உண்டியலை உண்டியல் அனுப்பப்படுகிற (drawee) மதுரை பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகருக்குச் சென்னையிலுள்ள தனது கிளைப்பாங்கி மூலமாக அனுப்புவிக்கும். உண்டியலைப் பெற்றவுடன் பேப்பர் ஸ்டோர்ஸ்

exchange is an unconditional order in writing addressed by the person giving it, requiring the person to whom it is addressed to pay on demand or at a fixed future date a certain sum in money to the order of a specified person'.

வர்த்தகர் அதை 'ஒப்புக்கொண்டேன்' (accepted) என அதன்மேல் எழுதித் தம் கையொப்பமிடுவார்.* பின்னர் ஏற்றுமதிச்சிட்டை முதலியனவற்றைப் பெற்றுத் துறைமுகத்திலிருந்து சரக்குகளை எடுத்து அவற்றை விற்று (விற்காவிடினும்) அறுபதுநாள் தவணைக்குள் சென்னைப்பாங்கியில் பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் நமது தேச நாணயத்தில் ரூபாய்அறுபதினையிரத்தையும் கட்டிவிடுவார்.

10. நாம் மேலே காட்டிய உண்டியற்சீட்டின் வேலையைச் சிறிது உற்றுராய்ந்தால் அதன் பயன்கள் நன்கு விளங்கும். அச்சீட்டின் ஆதாரத்தினுற்றான் லப்ட் மாக் கம்பெனியார் தாம் விற்ற சரக்குகளுக்குரிய தொகை முழுவதையும் தம் நகரிலேயே கைம்மேற் பணமாகப் பெற்றுக் கொள்கின்றனர். அச்சீட்டின் ஆதாரத்தினுலேயே பாங்கி அத்தொகையை லப்ட் மாக் கம்பெனிக்கு அறுபதுநாள்வரை கடனுகக் கொடுத்துதவுகின்றது. எனவே பொருள்களை விற்றவர்கள் அவற்றிற்குரிய தொகையைப் பற்றுகப்

* இவ்வாறு ஒப்புக்கொண்டபின்னர்தான் உண்டியலிற் குறிப்பிட்ட தொகையைக் குறிப்பிட்ட தவணையிற் கொடுத்துவிடப் பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் சட்டப்படி கட்டுப்பட்டவர் ஆவர்.

பெற்றுக்கொள்வதற்கு (a means of raising credits) உண்டியற்சீட்டே சாதனமாகிறது.

11. மேலும் நாம் முன்னரே விளக்கியபடி ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குப் பணத்தை அனுப்புவதற்கும் உண்டியற்சீட்டே சிறந்த சாதனம் (a means of remittance) ஆகிறது. பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் உண்டியற்சீட்டை ஒப்புக்கொண்டு அறுபதினாயிரம்ரூபாயைச் சென்னையிற் கட்டிவிடுவதனால் அத்தொகை லப்ட் மாக் கம்பெனிக்குச் செலுத்திவிட்டதாகின்றது. ஏனெனில் முன்னரே பாங்கி இத்தொகையை ஹாம்பர்க்கில் லப்ட் மாக் கம்பெனிக்குக் கொடுத்துவிட்டதன்றோ? இது நிற்க. பி. அன்ட். ஓ. பாங்கி ஜப்பான் பாங்கி ஒன்றிற்கு அறுபதினாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டியதிருந்தால் பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகரால் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்டியற்சீட்டைக் கொடுத்தே அக்கணக்கை முடித்துவிடலாம். இங்கிலாந்திலிருந்து ஜப்பானுக்குப் பணம்அனுப்புவதற்கும் இவ்வுண்டியற்சீட்டே உபயோகப்படுவதைக் காண்க.*

* இவ்விஷயத்தில் உண்டியற்சீட்டு பாங்கிச் செக்கைப் போலப் பயன்படுகிறது. கோபாலனுக்குச் செல்லவேண்டிய நூறு ரூபாய்க்கு இராமன் ஒரு செக்கைக் (cheque) கொடுக்கிறான். இராமன் கோவிந்தனுக்கு நூறுரூபாய் கொடுக்கவேண்

12. இவ்வித உண்டியற்சீட்டில் வேறொரு சிறப்பும் அமைந்துள்ளது. அறுபதுநாட்களுக்குப் பின்னால் பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் தமக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைத் தாம் சரக்கை ஏற்றுமதிசெய்தவுடனே தமக்குப் பி. அன்ட். ஓ. பாங்கி கொடுத்துவிடுவதனால் அவ்வறுபதுநாட்களுக்குரிய வட்டியை லப்ட் மாக் கம்பெனியார் பாங்கிக்குக் கொடுக்கவேண்டும். இங்ஙனமாக அவர்களது உண்டியலுக்குரிய பணத்தைப் பாங்கி கொடுத்துதவும்போது இவ்வட்டியைக் கழித்துக்கொண்டே (discounting the bill) கொடுப்பது வழக்கம். பாங்கி தன்னிடமுள்ள பணத்தைக் குறைந்த காலத்திற்கு வட்டிக்குவிட்டுவைப்பதற்கு உண்டியற்சீட்டு சிறந்த சாதனம். ஏனெனில், பேப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தகர் அறுபதுநாள் தவணையில் அதிற் குறிப்பிட்ட தொகையைக் கட்டிவிடுவார். மேலும் பாங்கிக்குப் பணம் தேவையாயிருக்குமானால் அவ்வுண்டியற்சீட்டை வட்டிக்கழிவுநீக்கி வேறு பாங்கிக்காகிலும் உண்டியல் வர்த்தகர்கள் (bill brokers) எவருக்காகிலும் விற்றுப் பணத்தைப்

டியதிருந்தால் நாணயத்தைக்கொடுப்பதற்குப் பதிலாகக் கோபாலனால் தனக்குக் கொடுக்கப்பட்ட செக்கையே கொடுத்துக் கணக்குத் தீர்த்துவிடலாம். செக்குகள் உள்நாட்டு வர்த்தக நாணயம்; உண்டியற்சீட்டுக்கள் வெளிநாட்டுவர்த்தக நாணயம்.

பெற்றுக்கொள்ளலாம். உண்டியற்சீட்டுக்கள் எப்பொழுதும் எந்த அளவிலும் வாங்கவும் விற்கவும் தக்க சிறந்த பொருள்கள். எனவே கைப்பணம் உடையார் தம் முதலை நல்ல இலாபத்துடன் நஷ்டமின்றி வட்டிக்குவிட்டு வைப்பதற்கு (a means of investment) உண்டியற்சீட்டிற் சிறந்த சாதனம் வேறில்லை.*

13. உண்டியற்சீட்டுக்களின் உபயோகத்தை நாம் மிகைப்படுத்திக் கூறல் அரிது. வெளிநாடுகளினின்று பொருள்களை ஏற்றுமதி செய்வோர் அவற்றிற்குரிய தொகையைப் பற்றாகப் பெற்றுக்கொள்வதற்கும், அப்பொருள்களை இறக்குமதிசெய்தார் அவற்றிற்குரிய தொகையை அனுப்புவதற்கும், பாங்கிகள் தம் பணத்தை வட்டிக்குக் கொடுத்துவைக்கவும் உண்டியற்சீட்டுக்கள் உயரிய சாதனங்களாக அமைகின்றன. இவையின்றேல் வெளிநாட்டு வர்த்தகத்துறையிற் பல வீண்செலவுகளும் பெருஞ்சங்கடங்களும் விளையும். ஹாம்பர்க் நகரிலுள்ள ஜெர்மன் வர்த்தக

* தவணைக்காலம்வரை காத்திருப்பதே போதுமானது; பணம் கைக்கு வந்துவிடும். 'If it had been drawn on a first class name whose acceptance would at once have stamped the bill as gilt-edged all that the most meticulous holder of it is to do is to put it into his portfolio and sleep on soundly (Withers, *Money Changing*).

ரையும் லண்டன் நகரிலுள்ள ஆங்கிலேயப் பாங்கர்களையும் மதுரை நகரிலுள்ள இந்திய வர்த்தகரையும் (இவ்வாறே எல்லாத் தேசத்தினரையும்) ஒன்றாய் இணைத்து அன்னவர் ஒருவருக்கொருவர் ஆதரவாய் இருந்துவரச் செய்வது உண்டியற்சீட்டேயாம். †

† 'The bill of exchange ... is the most wonderful and magical instrument ... that has over helped to turn the wheels of trade and join all the nations together into a great commercial community with common interests and a common desire for peace and amity' (Withers, *Money Changing*, P. 91.).

3

ஒருதேசத்தின் மொத்தப் பற்றும் வரவும்.
(The Debits and Credits of a Country)

ஜெர்மனியிலிருந்து அறுபதினாயிரம் ரூபாய் மதிப்புள்ள காகிதம் இந்தியாவுக்கு ஏற்றுமதியாக்கப்பட்டால் அத்தொகை இந்தியாவின் பற்றும் (debits) ஜெர்மனியின் வரவும் (credits) ஆகும். அவ்வாறே இந்தியாவிலிருந்து அறுபதினாயிரம் ரூபாய் மதிப்புள்ள பருத்தி ஜெர்மனிக்கு ஏற்றுமதியாக்கப்பட்டால் அத்தொகை இந்தியாவுக்கு வரவும் ஜெர்மனிக்குப் பற்றும் ஆகும். இங்ஙனமாக ஒரு தேசத்தின் ஏற்றுமதியும் இறக்குமதியும் சமவிலைமதிப்புடையனவாகஇருப்பின் அதன் பற்று வரவும் சமமாகும்; ஆனால் இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி எண்பதினாயிரம் ரூபாயாகவும் ஜெர்மனியின் காகித ஏற்றுமதி ரூபாய் அறுபதினாயிரமாகவுமே இருக்குமாயின் இருபதினாயிரம் ரூபாய் இந்தியாவுக்கு அதிகவரவாகவும் (credit or active balance) அத்தொகை ஜெர்மனிக்கு அதிகப் பற்றாகவும் (debit or negative balance) இருக்கும்.

2. ஒரு தேசத்தின் பற்றும் வரவும் சமமாக இருத்தல்வேண்டும். அவ்வாறன்றி வரவுக்கு மேற் பற்று அதிகப்படுமாயின் அத்தேசமக்கள் நஷ்டமடைவர். வரவுக்குமேற் செலவு செய்வோன் விரைவில் வறியனாவனன்றோ? ஒருதேசத்தின் பற்றுக்குமேல் வரவு அதிகமாயிருந்தால் அதன் செல்வநிலை நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே போகும். எனவே ஒருதேசத்தின் இறக்குமதியைக் காட்டிலும் அதன் ஏற்றுமதி அதிகமாகவேனும் அல்லது சமமாகவேனும் இருந்துவரல்வேண்டும். இதை 'அநுகூலமான வர்த்தகம்' (favourable balance of trade) எனவும் ஏற்றுமதியைவிட இறக்குமதி மிகுந்திருப்பதைப் 'பிரதிகூலமான வர்த்தகம்' (unfavourable balance of trade) எனவும் கூறுவர்.

3. தற்காலத்தில் ஒவ்வொருதேச அரசாங்கத்தினரும் அவ்வத்தேயத்தின் ஒவ்வொரு துறைமுகத்தினின்றும் பிறதேசங்களுக்கு ஏற்றுமதியாக்கப்படுவனவும் அத்துறைமுகங்கள்வாயிலாய்ப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதியாக்கப்படுவனவும் ஆகிய எல்லா வர்த்தகப்பொருள்களின் பெயர், நிறை, விலைமதிப்பு ஆகிய விவரங்களடங்கிய அறிக்கையை வெளியிடுகின்றனர். எனவே இவ்வறிக்கையிலடங்கிய கணக்கை

ஆதாரமாகக்கொண்டு ஒருதேசத்தின் வர்த்தகம் அநுகூலமானதா அன்றிப் பிரதிகூலமானதா எனத் தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக நாம் இங்கிலாந்தையும் இந்தியாவையும் எடுத்துக் கொள்வோம்.

4. 1932-ம் வருடத்தில் இங்கிலாந்தின் வெளிநாட்டு வர்த்தகநிலை பின்வருமாறு இருந்ததாகக் கணக்கிட்டிருக்கின்றனர்.*

இறக்குமதி	£ 701·7 லக்ஷம்
ஏற்றுமதி	£ 416·0 லக்ஷம்
ஏற்றுமதியைவிட இறக்குமதியின் மிகுதி (excess of imports over exports)	£ 285·7 லக்ஷம்

அதே வருடத்தில் இந்தியாவின் வர்த்தகநிலை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது. †

ஏற்றுமதி	ரூ. 15588 லக்ஷம்
இறக்குமதி	ரூ. 12637 லக்ஷம்
இறக்குமதியைவிட ஏற்றுமதியின் மிகுதி (excess of exports over imports)	ரூ. 2951 லக்ஷம்

* The *Economist*, Commercial History & Review of 1933 P. 4.

† *Ibid*, P. 38.

5. இவ்விருகணக்குகளினின்றும் இந்தியாவின் வர்த்தகம் அநுகூலமானதென்றும் இங்கிலாந்தின் வர்த்தகம் பிரதிகூலமானதென்றும் விளங்குகின்றது! இந்தியாவின் வர்த்தகத்தினால் அதிக வரவும், இங்கிலாந்தின் வர்த்தகத்தினால் அதிகப்பற்றும் காணப்படுவதனால் நமதுதேசத்தின் செல்வநிலை ஓங்கிக்கொண்டும் ஆங்கிலேயரின் செல்வநிலை குன்றிக்கொண்டும் வருகின்றதென அநுமானிக்க இடமுண்டு. ஆனால் இஃது முற்றும் மாறுபாடான முடிபு என்பதற்கு ஐயமில்லை. ஏனெனில் இங்கிலாந்தின் செல்வநிலை உயர்ந்துகொண்டும் இந்தியாவின் செல்வநிலை குறைந்துகொண்டும் வருவது வெளிப்படை. அப்படியாயின் ஏற்றுமதியின் இறக்குமதி மிகுந்தாற் பிரதிகூலமான வர்த்தகம்; அது குறைந்தால் அநுகூலமான வர்த்தகம் என நாம் எடுத்துக்கொண்ட மூலக்கொள்கை பிழைபாடுடையதோவெனின் அதுவும் அன்று. பின்னை நாம் மேற்காட்டிய வர்த்தகக் கணக்கு உண்மைக்கு மாறான முடிபைக் காட்டிநிற்பானேன்? கோட்பாடு குறைபாடுடையதல்ல; கணக்கிலும் பிழையிலது; ஆதலின் உண்மைச் செல்வநிலையைக் காட்டும் காரணங்கள் வேறு இருக்கலாம் என்பது புலனாகின்றது. அவற்றை ஒருதாரணத்தால் விளக்குவோம்.

6. சாத்தனும் கொற்றனும் முறையே இருநூறுரூபாயும் நூறுரூபாயும் சம்பளம்பெறும் இரு அரசாங்க உத்தியோகஸ்தர்கள். இருவரும் சிக்கனமாகச் செலவிடுபவர். ஆயினும் சாத்தன் வருடந்தோறும் சிறிதுசிறிதாகக் கடனிலாழ்ந்து கவலையுடன் வாழ்ந்துவருகின்றான். கொற்றனோ வருடந்தோறும் ஆயிரம்ரூபாய் சேமித்துவைக்கிறான். அதிகச்சம்பளம் பெறுவோன் தரித்திரனாகவும் குறைந்த சம்பளம் பெறுவோன் செல்வனாகவும் விளங்குவதன் காரணங்கள் என்ன? சாத்தன் பெருங்குடும்பி. ஐந்துபிள்ளைகளைப் போஷித்தும் அவர்களுக்குக் கல்வி பயில்வித்தும் வருகின்றான். அவனைச் சார்ந்துள்ள பெற்றோர் இருவர்; சுற்றத்தார் அறுவர். வேறு வருவாயோ ஒன்றும் இலது. எனவே சாத்தன் இப்படிப்பட்ட குடும்பப் பாரத்தைக் கடனில்லாது நிர்வகிக்க இயலாது உழல்கின்றான். ஆனால் கொற்றனின் வாழ்க்கையோ கஷ்டத்திற்குள்ளானதன்று. குடும்பப் பாரம் யாதொன்று மற்றவன். தனது பிதிரார்ஜித நிலங்களிலிருந்து வரும் ரூபாய் ஐந்நூறையும் தன் மனைவி உபாத்தினியாகவிருந்து சம்பாதிக்கும் ரூபாய் ஐந்நூறையும் ஆக ரூபாய் ஆயிரத்தையும் அப்படியே அவன் பாங்கியிற் போட்டுவைத்து வருகின்றான். காரியம் இவ்வாறாயின் தோற்றத்தால் அதிகச்சம்பளம் பெறுவோன் வறியோனாகவும் குறைந்த சம்பளம் பெறுவோன் செல்வனாகவும் விளங்குவதில் வியப்பென்னை?

7. நாம் இங்கு எடுத்தாண்ட உதாரணம் இந்தியா இங்கிலாந்து ஆகிய இவ்விரு தேசங்களின் உண்மைச் செல்வநிலையை நன்கு விளக்கிக் காட்டும். வர்த்தக ஏற்றுமதியால் (export of merchandise) இந்தியா அதிகவரவுடையதாகவும் இங்கிலாந்து குறைந்தவரவுடையதாகவும் விளங்குகின்றது. ஆனால் துறைமுகங்களில் எடுக்கப்படும் இவ்வர்த்தக ஏற்றுமதி இறக்குமதிக் கணக்கிற் குட்படாத வேறு சில ஏற்றுமதி இறக்குமதிகளும் ஒவ்வொரு தேசத்திற்குமுண்டு; அவற்றால் இங்கிலாந்துக்கு அதிகவரவும் இந்தியாவுக்கு அதிகப் பற்றும் ஏற்படுகிறது. இங்கிலாந்து முதலாளி தேசமாகவும் இந்தியா கடன்பட்ட தேசமாகவும் விளங்குவதற்கு இதுவே காரணம்.

8. வர்த்தக ஏற்றுமதி இறக்குமதிகளை வெளிப்படையான ஏற்றுமதி இறக்குமதிகள் (visible exports and imports) எனவும் அவ்வாறல்லாதவற்றை மறைவான ஏற்றுமதி இறக்குமதிகள் (invisible exports and imports) எனவும் கூறுவர். இங்கிலாந்துக்கு மறைவான ஏற்றுமதிகள் அதிகம்; ஆதலின் மறைவான வரவுகளும்

அதிகம்: இந்தியாவுக்கு மறைவான இறக்குமதிகள் அதிகம்; ஆதலின் மறைவான பற்றும் அதிகம். இத்தகைய மறைவான பற்றுவரவுகள் யாவை? அவற்றைச் சில உதாரணங்களால் விளக்குவோம்.

9. நியூ யார்க் (New York, U. S. A.) நகரிலுள்ள லக்ஷாதிபதிகளில் ஒருவரான மார்கனது குமாரத்தியை லிவர்ப்பூல் பிரபுவின் குமாரர் மணந்துகொள்ளுகிறார் என வைத்துக்கொள்வோம். அப்பெண்மணி இங்கிலாந்துக்குச் செல்லும்போது தன் பெற்றோர் அளித்த ஸ்திரீதனத்தை (dowry) ஆங்கில நாணயமாகிய சாவரனுக்கு மாற்றிக்கொண்டு போகவேண்டுமன்றோ? எனவே அப்பெண்மணி தனக்கு ஸ்திரீதனமாய் அளிக்கப்பட்ட இருபதினாயிரம் டாலர்களையும் (dollars) நியூ யார்க் நாஷனல் பாங்கியிற் கட்டி ஒரு உண்டியலை (draft) வாங்கி லிவர்ப்பூல் சென்றதும் அந்நகர்ப் பாங்கியில் உண்டியலிற் குறிப்பிட்ட தொகையைப் பவுண் ஷிலிங் பென்ஸில் பெற்றுக்கொள்ளுவர். அத்தொகை நியூ யார்க் பாங்கிக்குப் பற்றும் (debit) லிவர்ப்பூல் நகரப் பாங்கிக்கு வரவும் (credit) ஆகக் கணக்கிற் பதிவு செய்துகொள்ளப்படும். பாங்கிகளால் நடத்தப்படும் இப்பற்று வரவினால் அமெரிக்கா இரு

பதினாயிரம் டாலர் மதிப்புள்ள பொருள்களை (இவ்விடத்தில் ஒரு மணமகள்) இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்ததைப் போன்றிருக்கின்றதல்லவா?

10. மேலும் இங்கிலாந்துதேசத்தின் மறைவான ஏற்றுமதிகளில் அத்தேசத்தின் கல்வித்திறமை, நாட்டுவளம், மக்கட்பழக்க வழக்கங்களின் பெருமை முதலியன முக்கியமானவையாம். ஒவ்வொரு வருடமும் கல்வி பயிலுவதற்காகவும், பொழுதுபோக்குக்காகவும், மிகுதியான பேர் இந்தியாவிலிருந்தும் பிறதேசங்களிலிருந்தும் இங்கிலாந்துக்குச் செல்லுகின்றனர். இவ்வாறு ஒரு தேசத்தினின்று மறுதேசத்திற்குச் செல்வோர் அயல்நாடுகளில் தமக்குச் செலவுக்குவேண்டுந் தொகையைத் தத்தம் சொந்ததேசப் பாங்கிகளிற் கட்டி உண்டியலாக (draft) அன்றி உண்டியற் கடிதங்களாகப் (letters of credit)* பெற்றுக்கொள்வர். இவை அவ்வத்தேயப் பாங்கிகளின் மூலமாக, அவ்வத்தேய நாணயங்களிற் பட்டுவாடா செய்யப்படும். நாடு பார்க்க வருவோரால் (tourist expenditure) இங்கிலாந்தின் வரவு 1933ல் சுமார் $1\frac{3}{4}$ கோடி பவுண்டு. இனி, மறைவான இறக்குமதிகளுக்குச் சில உதாரணங்கள் தருவாம்.

* மாதிரி உண்டியற் கடிதம் ஒன்று இக்கட்டுரையின் இறுதியிற் காட்டப்பட்டுளது.

11. இந்திய அரசாங்கத்திற் பெரும் உத்தியோகங்களை வகிக்கும் ஆங்கிலேயர் பலர் உளர். அவர்கள் தங்கள் சம்பளத்தில் ஒரு பாகத்தை இங்கிலாந்துக்கு அனுப்பிவருகின்றனர். இது இந்தியாவுக்குப் பற்றும் இங்கிலாந்துக்கு வரவும் ஆகின்றது. அங்ஙனமாகவே இந்திய உத்தியோகங்களினின்று ஒழிவுபெற்றுத் தம் வாணாளைத் தம் தேசத்திற் செலவிடும் ஆங்கிலேயரின் உபகாரச் சம்பளமும் (pensions) இந்தியாவின் பற்று ஆகும். உபகாரச் சம்பள வகைக்காகவும் பிற வகைகளுக்காகவும் இந்திய அரசாங்க வருமானத்திலிருந்து வருடந்தோறும் சுமார் 47 கோடி ரூபாய் இங்கிலாந்துக்கு அனுப்பப்படுகிறது. இது நாம் இங்கிலாந்துக்குச் செலுத்த வேண்டிய கடன் (Home Charges). இப்பணத்தை இந்திய அரசாங்கத்தார் இங்கிலாந்து பாங்கி மூலமாக உபகாரச் சம்பளம் பெறுவோருக்குப் பட்டுவாடாச்செய்ய ஒழுங்குகள் செய்திருக்கின்றனர். இவ்வாங்கில உத்தியோகஸ்தர்கள் மூலமாக இந்தியா வருடந்தோறும் 47 கோடி ரூபாய் பெறுமான சேவைப்பொருள்களாகிய (services) அரசியல் நிர்வாகத்தையும், பாதுகாப்பையும் இறக்குமதி செய்கின்றதாம்! அவை இங்கிலாந்தின் ஏற்றுமதிகள். *

12. ஆங்கிலேயரால் இந்தியாவுக்கும் பிற தேசங்களுக்கும் ஏற்றுமதியாக்கப்படும் சேவைப் பொருள்கள் வேறு பலவும் உண்டு. ஆங்கிலேயரின் கப்பல்கள், வர்த்தகக்குழாங்கள், தொழிற்சாலைகள், பாங்கிகள், நஷ்டஈடுசெய்யும் 'இன்ஷூரன்ஸ் கம்பெனிகள்' முதலானவை பிறதேசத்தினருக்குப் புரியும் சேவைக்குப் பிரதிபலனைப் பெறும் இலாபம் எல்லாம் இங்கிலாந்தின் மறைவான வரவாகும். இவ்வாற்றால் வருடந்தோறும் ஆங்கிலேயர் சுமார் நூற்றுமுப்பதுகோடிரூபாய் சம்பாதிக்கின்றனர்.

13. மேலும், ஆங்கிலேயர் பிறநாடுகளுக்குத் தாம் கொடுத்த கடனுக்கு வட்டியாக வருடந்தோறும் சுமார் 280 கோடி ரூபாயும் பெற்றுவருகின்றனர்! இத்தொகையும் அவர்களது மறைவான வரவு. சென்ற வருடத்தில் இந்திய அரசாங்கத்தார் இங்கிலாந்து தேசத்தினின்று சுமார் 14 கோடி ரூபாய் கடன் வாங்கினார்கள். அத்

* "India has to remit goods every year in large quantities to England to meet the drain on it that is caused by the pensions of retired Indian Civil servants and military officers ... Here England exports protection and government to India, and India sends her products to pay the bill." (Withers, *Money Changing*, P. 83).

தொகை இந்தியாவுக்கு அனுப்பப்படும்போது அது இந்தியாவுக்கு வரவும் இங்கிலாந்துக்குப் பற்றும் ஆகிறது. ஆனால் ஆறுமாதத்திற்கொரு முறை அக்கடனுக்குரிய வட்டியையும் பின்னர்க் குறிப்பிட்ட தவணையில் அசலையும் நாம் திருப்பிச் செலுத்தும்போது பணம் இந்தியாவினின்றும் வெளிப்போவதனால் அது இந்தியாவுக்குப்பற்றும் இங்கிலாந்துக்கு வரவும் ஆகிறது.

14. இங்ஙனமாக நாம் மேலே விளக்கிக் காட்டிய மொத்தப் பற்றுவரவுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

ஒரு தேசத்தின் மொத்தப்பற்று வரவு.

பற்று.	வரவு.
(1) வர்த்தக இறக்குமதி.	(1) வர்த்தக ஏற்றுமதி.
(2) வெள்ளி, தங்கம் ஆகிய விலையுயர்ந்த உலோகங்களின் இறக்குமதி.	(2) வெள்ளி தங்கம் ஆகிய விலையுயர்ந்த பொருள்களின் ஏற்றுமதி.
(3) நாணயங்கள், நோட்டுக்கள் இறக்குமதி. (உதாரணம்: ஆங்கிலேயரின் சாவரன்கள்)	(3) நாணயங்கள் நோட்டுக்கள் ஏற்றுமதி.
(4) வெளிநாட்டுப் பாங்கிகளில் வாங்கப்படும் கடன்கள்.	(4) வெளிநாட்டுப்பாங்கிகளிடமிருந்து வரவு.
(5) வெளி நாடுகளுக்குக் கொடுக்கப்படும் கடன்கள் (exports of securities, bonds).	(5) வெளிநாடுகளிலிருந்து திரும்பிவரும் கடன்கள் (purchasing of securities).
(6) வெளிநாடுகளில் வாங்கிய கடன்களுக்குச் செலுத்தவேண்டிய வட்டி.	(6) வெளிநாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்காகக் கிடைக்கும் வட்டி.
(7) கப்பல்கள், பாங்கிகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் முதலியவற்றின் சேவைக்காகக் கொடுக்கப்படும் கூலி.	(7) தேசீயக் கப்பல்கள், பாங்கிகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் முதலியவை சம்பாதிக்கும் இலாபம்.
(8) பிறநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களின் சம்பளங்கள், உபகாரச் சம்பளங்கள்.	(8) பிறநாடுகளுக்குச் சென்று அரசுபுரிதல், பாதுகாத்தல், சேவைசெய்தல், முதலிய பணிகளை இயற்றியோர் அனுப்பும் பணம், உபகாரச்சம்பளங்கள்.
(9) வெளிநாடுகளில் யாத்திரீகர்கள், மாணவர்கள் முதலானோர் செலவிடுவது.	(9) வெளிநாட்டு யாத்திரீகர்கள், மாணவர் முதலானோரால் வரவு.
(10) அயல்நாட்டினரை மணந்துகொள்ளும் பெண்களுக்குப் பெற்றோர் அளிக்கும் ஸ்த்ரீதனம்.	(10) பிறதேசப் பெண்கள் கொண்டுவரும் ஸ்த்ரீதனம்.
(11) பரோபகாரச் சங்கங்களுக்காக வெளிநாடுகளுக்கனுப்பப்படும் நிதி. (இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ மிஷன் ஸ்தாபனங்கள் போல்வன).	(11) பரோபகாரச் சங்கங்களுக்காக வெளிநாடுகளிலிருந்துவரும் உபகாரநிதி.

மாதிரி உண்டியற் கடிதம்.*

ஒருதேசத்திலிருந்து மறுதேசத்துக்குப் பிரயாணஞ் செய்வோர் தம் தேசப் பாங்கிகளிற் பணத்தைக்கட்டி உண்டியற் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு, அவற்றைத் தாம் போகும் நகரிலுள்ள பாங்கிகளிடத்திலாவது நிருபர்களிடத்திலாவது காட்டி அவற்றிற் குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொள்வர். மாதிரிக்காகக் கீழே ஒரு உண்டியற் கடிதம் காட்டப்பட்டிருக்கிறது.

The American Express Company Inc.
Travellers Letters of Credit.

New York, 10th May 1930.

No. X 19375. £ 400—0—0.

To all our correspondents.

Dear Sirs,

The bearer of this letter, Mr. HOWARD SMITH, whose signature appears at the foot of this letter is hereby authorized to draw drafts at sight on the AMERICAN EXPRESS CO., INC., LONDON, for pounds four hundred only......

This Letter of Credit is in force for six months from this date and expires on the 10th November 1930......

The American Express Co., Inc.,
(Sd.) F. P. SMALL, PRESIDENT.

Signature of Mr. Howard Smith.

---

* Taken from "*Foreign Exchange in India*" by N. S. Aiyar.

4

நாணயமாற்று விகிதம்.

(Rates of Exchange)

வெளிப்படையானவும் மறைவானவுமான ஏற்றுமதி இறக்குமதிகளுக்காக ஒரு தேசத்திலிருந்து மற்றைத் தேசங்களுக்குப் பணம் (உண்டியல்கள்) அனுப்பப்படவேண்டுமென முன்னர்க் கூறினோம். இனி இவ்வாறு அனுப்பப்படும் பணம் என்ன விகிதத்திற் கணக்கிடப்படுகின்றதென்பதை ஆராய்வாம்.

2. உள்நாட்டில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு உண்டியல் அனுப்பப்பட்டால் அதே தொகையே செலுத்தப்படுகிறது. மதுரையிலிருந்து நூறுரூபாயை மணியார்டராக அல்லது உண்டியலாகச் சென்னைக்கு அனுப்பினால் சென்னைத் தபாலாபீஸ் அல்லது பாங்கி நூறுரூபாயை உண்டியலிற் குறிப்பிடப்பட்டவருக்குச் செலுத்திவைக்கும். மாற்றுவிகிதம் ஒருரூபாய்க்கு ஒருரூபாயாக இருக்கின்றதென்னலாம். மதுரையில்

வழங்கும் ரூபாயும் சென்னையில் (இந்தியாவின் எல்லாப்பாகங்களிலும்) வழங்கும் ரூபாயும் ஒரே நிறையும் மதிப்பும் உடையதாயிருப்பதால் மாற்று விகிதம் 1 : 1 சம்பந்தத்திலிருக்கிறது.

3. ஆனால் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஒருரூபாயை அனுப்பினால் மாற்றுவிகிதக் கணக்கு வித்தியாசப்படும். நமது ரூபாய் இங்கிலாந்திற் செலாவணியாவதில்லை. ஆதலால் அது இங்கிலாந்துதேச நாணயத்துக்கு மாற்றப்பட வேண்டும். ரூபாய்க்கும் பவுண்டுக்கும் மாற்று விகிதம் 1:18 பென்ஸ் எனக் குறிப்பிட்டிருக்கின்றனர். எனவே, ஒருரூபாயை இங்கிலாந்துக்கு அனுப்பினால் அது அங்கு 18 பெ. மதிப்புடையதாகக் கணக்கிடப்படும்.

4. ஐரோப்பிய மஹா யுத்தத்திற்குமுன் மேனாடுகளிற் பெரும்பாலன தங்கநாணயங்களை வழங்கின. ஆயினும் அந்நாணயங்களின் நிறையில் ஒவ்வொன்றுக்கும் வேறுபாடிருந்ததால் அவை ஒவ்வொன்றிலுமடங்கிய தங்கமதிப்புப் படியே அவற்றின் மாற்றுவிகிதம் கணக்கிடப்பட்டது. ஆங்கிலேயரின் பவுண்டுநாணயத்திலடங்கிய தங்கநிறை அமெரிக்கரின் டாலர்நாணயத்திலடங்கிய தங்கத்தைக் காட்டிலும் 4·866 மடங்கும் பிரஞ்சுக்காரரின் பிராங்கைக்காட்டிலும் 25·22

மடங்கும் அதிகம். எனவே இந்நாணயங்களில் அடங்கிய நாணயசாலை மதிப்பாகிய (mint par) தங்கமதிப்புக்குச் சமமாக அவற்றின் மாற்றுவிகிதம் கணக்கிடப்பட்டது. யுத்தத்திற்குமுன் வழங்கப்பெற்ற முக்கிய நாணயங்களின் மாற்றுவிகிதம் பின்வருமாறு:—

தேசம்	நாணயம்	பவுண்டுக்கு மாற்றுவிகிதம்	குறிப்பு
அமெரிக்கா (நியூயார்க்)	டாலர்	4·86$\frac{2}{3}$	இவ்விரண்டு தேசங்களின் நாணயங்களிலும் அடங்கிய தங்கம் ஒரே நிறையுள்ளதென்பது விளக்கம்.
கானடா (மான்ட்ரீல்)	டாலர்	4·86$\frac{2}{3}$	
பிரான்சு (பாரீஸ்)	பிராங்கு	25·22$\frac{1}{2}$	லத்தீன் ஐக்கிய நாடுகளிலும் அவற்றைச் சார்ந்தபிறநாடுகளிலும் ஒரே நிறையுடைய தங்கநாணயங்கள் வழங்கப்பெற்றனவென்பது விளங்கும்.
பெல்ஜியம் (பிரஸல்ஸ்)	பிராங்கு	25·22$\frac{1}{2}$	
இத்தாலியா (மிலான்)	லயர் (Lire)	25·22$\frac{1}{2}$	
ஹாலந்து (ஆம்ஸ்டர்டம்)	பிளாரின் (Florin)	25·22$\frac{1}{2}$	
ஸ்பெயின் (மாடிரிட்)	பெஸட்டாஸ் (Pesetas)	25·22$\frac{1}{2}$	
கிரீஸ் (ஆதன்ஸ்)	டிராக்மே (Drachmæ)	25·22$\frac{1}{2}$	

தேசம்	நாணயம்	பவுண்டுக்கு மாற்றுவிகிதம்	குறிப்பு
நார்வே, ஸ்வீடன், டென்மார்க் தேசங்கள்	குரோனர் (Kroner)	18·159	இங்குக் காட்டிய எல்லாத் தேசங்களின் நாணயங்களையும்விட ஆங்கிலேயரின் பவுண்டு நாணயமே அதிக நிறையுடையதென்பது விளங்கும்.
ஜெர்மனி (பெர்லின்)	மார்க்கு	20·43	
துருக்கி (கான்ஸ்டான்டிநோபிள்)	பியாஸ்டரிஸ் (Piastres)	110	

5. இவ்வட்டவணையில் மற்றைத் தேசநாணயங்கள் எத்தனை சேர்ந்தால் ஒருபவுண்டுக்குச் சமமாகும் என நாம் கணக்கிடுவதால் பவுண்டு நிலையான எண்ணாகவும் (ஒன்று) பிறநாணயங்கள், $4{\cdot}86\frac{2}{3}$, $25{\cdot}22\frac{1}{2}$, 110 என மாறிவரும் (movable or variable) எண்களாகவும் விளங்குகின்றன. ஆதலின் இதை மாறும் விகிதம் (movable exchange) எனக் கூறுவர். இவ்விகிதங்கள் உயர்ந்தால் பவுண்டுக்கு மாற்றாகப் பிறநாணயங்கள் அதிகம் கிடைக்குமென்பதும்; குறைந்தால் அவை குறைவாகக் கிடைக்குமென்பதும் எளிதில் அறியலாகும். எனவே ஆங்கிலேயருக்கு மாறும் விகிதம் உயரும்போது இலாபமும், குறையும்போது நஷ்டமும் ஏற்படும்; உதாரணமாக ஒருபவுண்

டுக்கு மாற்றாக 4·866 டாலர் கிடைப்பதை விட 4·87 டாலர் கிடைப்பது இலாபம்.*

6. நாம் மேலே காட்டிய அட்டவணைப்படி உலகத்தின் முக்கிய நாணயங்களின் மாற்றுவிகிதம் ஆங்கிலேயரின் பவுண்டு ஸ்டெர்லிங்குடன் கணக்கிடப்படுகிறது. ஆனால் நாம் கீழே காட்டியிருக்கிற அட்டவணைப்படி சில நாணயங்களின் மாற்றுவிகிதம் சற்று வேறுவிதமாகக் கணக்கிடப்படுகிறது. தம் இரகசியங்களைப் பிறர் அறிந்துகொள்ளாவண்ணம் பாங்கர்கள் இங்ஙனஞ் செய்கின்றனரோவென ஓர் ஆசிரியர் பரிகாசமாகக் கூறுகிறார்.

தேசம்	தேச நாணயம்	மாற்றுவிகிதம் கணக்கிடப்படும் நாணயம்	மாற்றுவிகிதம்
ஜப்பான் (Kobe)	யென்	யென்	1யென் = 24·58 பென்ஸ் (sterling per yen.)
மலேயா நாடுகள் (Manilla)	டாலர்	டாலர்	1 டாலர் = 24·066 பெ.

* The higher the quotation, the lower the cost of the foreign currency: வேறுவிதமாய்க் கூறினால், "high rates are for us, low rates against us".

தேசம்	தேச நாணயம்	மாற்றுவிகிதம் கணக்கிடப்படும் நாணயம்	மாற்றுவிகிதம்
இந்தியா (Madras Bombay Calcutta)	ரூபாய்	ரூபாய்	1 ரூபாய்=18 பெ.
சீனா (Shanghai)	டேல்	டேல்	சீனரின் நாணயம் வெள்ளி நாணயமானதால் அதிலடங்கிய வெள்ளி மதிப்புப்படி மாற்று விகிதம் கணக்கிடப்படும். செப்டம்பர் 1931ல் 1 டேல் 1 ஷிலிங் 2⅞ பெ. ஆக இருந்தது.

7. இவ்வட்டவணையிற் காட்டப்பட்ட தேச நாணயம் ஒன்றிற்கு எத்தனை ஸ்டெர்லிங் (sterling per unit) கிடைக்கும் என நாம் கணக்கிடுவதனால் பவுண்டு ஷிலிங் பென்ஸ் எண்கள் மாறியும் பிற நாணயங்களின் தொகையைக்காட்டும் எண்கள் நிலையாகவும் இருப்பதைக் காணலாம். எனவே இதை மாறாத விகிதம் (fixed exchange) என்பர். இவ்விகிதம் உயர்ந்தால் ஒருபவுண்டுக்கு மாற்றாகப் பிறதேசநாணயங்கள் குறைவாகவும், அது குறைந்தால் அவை அதிகமாகவும் கிடைப்பதைக் காணலாம்; எனவே ஆங்கிலேயருக்கு இவ்விகிதம் உயரும்போது நஷ்டமும், குறையும்போது

இலாபமும் ஆம்.* உதாரணமாக ஆங்கிலேயர் 1927க்கு முன் 16 பென்ஸுக்கு மாற்றாக ஒரு ரூபாயைப் பெறுவர்; ஆனால் இப்பொழுதோ அத்தொகையைப் பெறுவதற்கு அவர்கள் 18 பென்ஸ் கொடுக்கவேண்டும்.

8. வெளிநாட்டு நாணயமாற்றுவிகிதக் கணக்கில் வேறொரு பின்னலும் உண்டு. வெளிநாட்டுவர்த்தகத்தில் உபயோகிக்கப்படும் உண்டியற்சீட்டுக்கள் இருவகைப்படும். அவை தரிசன உண்டியற்சீட்டுக்கள் (sight bills, demand drafts) தவணை உண்டியற்சீட்டுக்கள் (time bills) என்பனவாம். தரிசனஉண்டியல்களுக்கு உடனே பணங் கட்டவேண்டும்; தவணை உண்டியல்களுக்கு அவற்றிற் குறிப்பிட்ட நாட்களுக்குள் (ஒருவாரம் முதல்

* The higher the quotation, the higher the cost of the foreign currency. ஆதலால் குறைந்த விகிதத்தில் உண்டியலை வாங்குவதும், உயர்ந்த விகிதத்தில் விற்பதும் (buy low and sell high) ஆங்கிலேயருக்கு இலாபம். ஆனால் இவ்விதிக்கு மாறாக இருப்பதே இந்தியருக்கு இலாபம்: பணத்தை இங்கிலாந்துக்கு அனுப்புவதானால் உயர்ந்த விகிதம் இலாபம்; பணத்தை இங்கிலாந்திலிருந்து பெறுவதானால் குறைந்த விகிதம் இலாபம்: இவ்விதிகள் மாறா மாற்றுவிகிதக் கணக்குக்கே (fixed exchange) பொருந்துவன என்பதைக் கவனிக்க. மாறும் மாற்றுவிகிதக்கணக்குக்கு (movable exchange) இவ்விதிகளை மாறாக அமைத்துக்கொள்க.

சுமார் மூன்றுமாதம் வரை) பணங் கட்டலாம். ஆதலால் தரிசனஉண்டியற்சீட்டுக்களை வாங்கும் அல்லது விற்கும் விகிதத்தைத் தரிசனவிகிதம் **(short exchange)** எனவும், தவணைஉண்டியற்சீட்டுக்களை வாங்கும் அல்லது விற்கும் விகிதத்தைத் தவணைவிகிதம் **(long exchange)** எனவும் கூறுவர். உண்டியல்களுக்குப் பாங்கிகள் பணங்கொடுக்கும்போது அவை உண்டியல்களை வாங்குகின்றன **(buying exchange)** எனவும் பணத்தைப் பெற்றுக்கொண்டு உண்டியல்களைக் கொடுக்கும்போது அவை அவற்றை விற்கின்றன **(selling exchange)** எனவும் கூறுவது வழக்கம்.

9. உண்டியல்களுக்குப் பாங்கிகள் பணங்கொடுக்கும்போது வட்டியைக் கழித்துக்கொள்ளுமென முன்னர்க் கூறினேம். உண்டியல் அனுப்பப்படுவோர் **(drawee)** உண்டியலிற் குறிப்பிட்ட தவணைக்குப்பின்னரே பாங்கியிற் பணங்கட்டுவாராதலால் குறைந்தகாலத் தவணைஉண்டியல்களுக்கு வட்டிக்கழிவு குறைவாகவும் நீண்டகாலத் தவணை உண்டியல்களுக்கு அது அதிகமாகவும் இருக்கும் என்பது வெளிப்படை. உதாரணமாக, பவுண்டு-ரூபாய் தரிசனஉண்டியலுக்குரிய வட்டிக்கழிவு $\frac{1}{32}$ பெ. ஆனல் மூன்றுமாதத்தவணை உண்டியலுக்குரிய வட்டிக்கழிவு $\frac{3}{32}$ பெ. ஆகவும்

ஆறுமாதத் தவணைஉண்டியலுக்குரிய வட்டிக்கழிவு $\frac{3}{16}$ பெ. ஆகவும் இருக்கலாம்.*

10. ஆனல் பாங்கியில் நாம் பணத்தைக் கட்டித் தவணைஉண்டியலை வாங்கினல் **(when the bank sells exchange)** நீண்டதவணைக்குக் குறைந்த விகிதமும் குறைந்ததவணைக்கு உயர்ந்த விகிதமும் கொடுக்கவேண்டும். ஏனெனில் நாம் பாங்கியிற் கட்டுகிற பணம்குறிக்கப்பட்டதவணைக்குப்பின்னரே உண்டியலிற் குறிப்பிடப்பட்டவருக்குச் செலுத்தப்படும்; அதுவரைக்கும் அப்பணத்துக்குரிய வட்டி பாங்கிக்கு இலாபமாகும். ஆதலால் தந்திஉண்டியலுக்குரிய விகிதம் அதிகமாகவும், தரிசனஉண்டியலுக்குரிய விகிதம் சற்றுக் குறைவாகவும், ஒருமாதத் தவணைஉண்டியலுக்குரிய விகிதம் இன்னுஞ் சற்றுக் குறைவாகவும் மூன்றுமாதத் தவணைஉண்டியலுக்குரிய விகிதம் அதைவிடச் சற்றுக் குறைவாகவும் இருக்கும். தந்தி உண்டியலுக்குரிய விகிதம் அதிகமாயிருப்பினும் அவ்வுண்டியலைவாங்குவோனுக்கு அதனல் நஷ்டமில்லை. ஏனெனில் அவ்வுண்டியல் வாங்கும் நாள்வரை பணம் அவன் கையிலேயே இருப்பத

* "A buyer will give less pence for a bill payable at three months' date than for one payable at sight". (W. E. Spalding)

ஞல் அதற்குரிய வட்டியை அவனே இலாபமாக அடைகிறான். இது நிற்க.

11. சென்ற ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின் நாணயமாற்று விகிதங்களில் மிகவும் ஏற்றத்தாழ்வுகள் இருந்தமையின் தவணைஉண்டியல்களை விற்பதிலும் வாங்குவதிலும் பெரும் நஷ்டங்கள் விளைந்தன. ஆதலால் தவணைஉண்டியல்களை வாங்குவதும் விற்பதுமாகிய வழக்கம் குன்றிவருகிறது. இப்பொழுது பெரும்பாலும் தந்திஉண்டியல்களே (cable or telegraphic transfers, T.T.) வழங்கப்படுகின்றன. மேலும் நாணயமாற்று நிலையற்றிருந்த அக்காலத்தில் வேறொரு வழக்கமும் எழுந்தது. அது உண்டியல்களை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாதங்களுக்குமுன்னரே எதிர்காலஉண்டியல்களாக (forward exchange) வாங்கிக்கொள்வதாம். உதாரணமாக, ஒருவன் மேமாதத்தில் 75 பவுண்டுஸ்டெர்லிங் இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டுமானால், மார்ச்சுமாதத்திலேயே ஒருஉண்டியலை நடப்புவிகிதப்படியாவது (at the current rate of exchange) அன்றி உண்டிய விற்குறிக்கப்படும் நாளில் நிலைபெறும் எதிர்கால விகிதப்படியாவது வாங்கிக்கொள்வான். நடப்பு விகிதப்படி வாங்கும்போது விகிதத்தின் ஏற்றத்தாழ்விலுண்டாம் இலாபநஷ்டம் பாங்கியைச் சாரும்;* எதிர்கால விகிதப்படி வாங்கினால் அது உண்டியல் வாங்குபவனைச் சாரும்.

12. நாம் மேலே விவரித்தபடி நாணயமாற்று விகிதக் கணக்கு மிகப்பின்னல்வாய்ந்தது. முதலாவதாக: வழங்கப்படும் நாணயங்கள் தங்க நாணயங்களாக இருப்பின் அவை ஒவ்வொன்றிலும் அடங்கிய நாணயசாலை மதிப்புக்குச் சமமாக (mint par) அவற்றின் மாற்றுவிகிதத்தை நிர்ணயிக்கவேண்டும். மாற்றப்படும் நாணயம் வெள்ளி நாணயமாக இருப்பின் (உதாரணம், டேல்) அந் நாணயத்திலடங்கிய வெள்ளிக்கு அவ்வப்போதுள்ள உலோகமதிப்புக்குச் சமமாக அதன் மாற்று விகிதத்தை நிர்ணயிக்கவேண்டும்: தங்க

* எதிர்காலஉண்டியலை விற்பதில் நஷ்டம் நேரிடாதபடி பாங்கி பின்வரும் முறையைக் கையாளும். மாற்றுவிகிதம் 18 பெ. ஆக இருக்கும்போது 1000 ரூபாயைப் பெற்றுக் கொண்டு 75 பவுண்டுக்கு உண்டியலை விற்றபின் மாற்று விகிதம் 16 பெ. ஆக மாறிவிட்டால் பாங்கிக்கு 125 ரூபாய் நஷ்டமாகும். ஆதலால் 18 பெ. விகிதத்தில் எதிர்கால உண்டியலை விற்றவுடனே, ஏறக்குறைய அதே விகிதத்தில் அதே தவணைக்கு அதே தொகைக்கு எதிர்காலஉண்டியலொன்றை வாங்கி ஈடாக (cover) வைத்துக்கொண்டால் மாற்றும்விகிதம் 16 பெ. ஆக மாறினபொழுது இவ்வுண்டியலை வாங்கியவகையிற் பாங்கிக்கு 125 ரூபாய் இலாபம் கிடைக்கும். இங்ஙனமாக உண்டியலை விற்றவகையில் ஏற்பட்ட நஷ்டம் அதை வாங்கிய வகையிலிருந்து ஈடு செய்யப்படும்.

மாற்றுத்திட்டத்திலுள்ள (gold exchange standard) வெள்ளிநாணயங்களின் மாற்றுமதிப்போ அயல் நாட்டு நாணயங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது; ஆதலின் அவற்றின் மாற்றுவிகிதத்தை அவ்வாறு குறிப்பிட்ட விகிதப்படிதான் கணக்கிட வேண்டும். இங்குக் காட்டிய விதிகள் எல்லாத் தேசங்களும் தங்கத்திட்டத்தைக் கைக்கொண்டிருக்கும் காலத்திற்கே பொருந்துவன; தங்கத் திட்டம் நீங்கியகாலத்து நாணயமாற்றுவிகிதம் எவ்வாறு கணக்கிடப்படும் என்பதை மேலே விவரிப்போம்.

13. இரண்டாவதாக: சில நாணயங்களின் மாற்றுவிகிதம் ஒரு பவுண்டுக்கு இவ்வளவு (foreign units to one pound sterling) எனக் கணக்கிடப்படுகிறது; ஆனால் வேறுசில நாணயங்களின் மாற்றுவிகிதமோ அவற்றிற்கு இவ்வளவு பவுண்டு ஸ்டெர்லிங் (sterling to yen or rupee etc) எனக் கணக்கிடப்படுகிறது.* இவ்விருவிதக் கணக்குள் முதலிற் காட்டப்பட்டது மாறும் மாற்றுவிகிதம்

*இஃது ஆங்கிலேயரின் கணக்கு. ஆனால் அமெரிக்கர் பிரஞ்சுக்காரர் முதலானோர் தத்தம் தேசநாணயங்களுக்கும் பிற நாணயங்களுக்கும் மாற்றுவிகிதம் இவ்வளவிவ்வளவு என நிர்ணயித்துக்கொள்வர். உதாரணமாக நியூயார்க்-பாரீஸ் மாற்று விகிதம் (New York on Paris) ஸெண்ட்ஸுக்கு இவ்வளவு

(movable exchange) எனவும் இரண்டாவது காட்டப்பட்டது மாறா மாற்றுவிகிதம் (fixed exchange) எனவும் வழங்கப்படும். இவ்வேறுபாட்டால் எழும் சிக்கல்களும் பல.

14. மூன்றாவதாக: ஒவ்வொரு நாணயத்தையும் வாங்குவதற்கும் விற்பதற்கும் உண்டியல்களின் காலவரையறைக்கேற்றவாறு விகிதம் மாறுபடும்; ஆதலின் தந்திஉண்டியல்கள், தவணை உண்டியல்கள் எதிர்காலஉண்டியல்கள் இவை ஒவ்வொன்றுக்கும் விகிதக்கணக்கு எம்முறையிற் கணக்கிடப்படுகின்றதோ அம்முறையில் (whether fixed or movable exchange) மாற்று விகிதத்தை நிர்ணயிக்கவேண்டும்.

15. நாம் மேலே பொழிப்பாகக் காட்டிய பின்னல்களேயன்றி வேறொருபின்னலும் நாணயமாற்றுக்கணக்கில் உண்டு. அஃது மாற்றுவிகிதம் சிலசமயங்களில் உயருவதனாலும் சிலசமயங்களிற் குறைவதனாலும் எழுவதாம். இதை இனிவருங் கட்டுரையில் விவரிப்பாம்.

பிராங்குகள் (cents per francs) எனக் கணக்கிடப்படுகிறது. ஆஸ்திரேலியாவிலும் நியூஜிலாந்திலும் ஆங்கிலேயரின் பவுண்டு நாணயங்களே வழங்கப்பெறுகின்றமையால் அத்தேசங்களின் மாற்றுவிகிதம் நூறுஆஸ்திரேலிய அல்லது நியூஜிலந்து பவுண்டுகளுக்கு எவ்வளவு ஆங்கிலேயப் பவுண்டுகள் (London on Australia 130¼) எனக் கணக்கிடப்படுகிறது.

5

அநுகூலமான நாணயமாற்றும் பிரதிகூலமான நாணயமாற்றும்
(Favourable and Unfavourable Exchange)

மதுரையிலிருந்து சென்னைக்கு நூறுரூபாய் மணியார்டராக அல்லது பாங்கி உண்டியலாக நாம் அனுப்பும்போது பணம் ரெயில் மார்க்கமாக நெல் அனுப்பப்படுவதுபோல் அனுப்பப்படுகிறதென்பது கருத்தல்ல. மதுரையிற் கட்டப்பட்ட பணம் மதுரைத் தபாலாபீஸ் அல்லது பாங்கியில் வைத்துக்கொள்ளப்படுகிறது; சென்னைத் தபாலாபீஸ் அல்லது பாங்கியில் உள்ள பணமே மணியார்டர் அல்லது பாங்கி உண்டியலிற் குறிப்பிடப்பட்டவருக்குச் செலுத்தப்படுகிறது. வெளிநாட்டுப் பற்றுவரவும் இங்ஙனமே. இந்தியாவிலிருந்து அனுப்பப்படுகிற பணம் இந்தியாவிலேயே வைத்துக்கொள்ளப்படுகிறது; இங்கிலாந்திலுள்ள பணமே உண்டியலிற் குறிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

பணம் அங்குமிங்கும் அனுப்பப்படுவதில்லை; அதிகாரப்பத்திரங்களாகிய உண்டியல்களே அனுப்பப்படுகின்றன. இச்சிறிய உண்மையில் நாணய மாற்றுவிகிதத்தில் நிகழும் ஏற்றத்தாழ்வுகளின் காரணங்கள் அடங்கிக்கிடக்கின்றன.

2. இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்படும் உண்டியல்களும் (demand for bills) இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படும் உண்டியல்களும் (supply of bills) சமமான தொகைக்கே இருக்குமானால் ஒரு தேசத்திலுள்ள பணத்தைக்கொண்டே அடுத்த தேசத்திலிருந்து அனுப்பப்பட்ட உண்டியல்களுக்குரிய பணத்தைக் கொடுத்துவிடலாம். இந்தியாவின் பற்று 600 கோடி ரூபாயாகவும் வரவு 600 கோடி ரூபாயாகவும் இருந்தால் இங்கிலாந்தினின்று இந்தியாவுக்குப் பணத்தை அனுப்பத் தேவையில்லையன்றோ? அப்படியானால் உண்டியல்களின் விலை ஸ்திரமாக நிலைபெறும். மாற்றுவிகிதம் அவ்வத் தேய நாணயங்களின் தங்கமதிப்புக்குச் சமமாக இருக்கலாம் (exchange will be at par).

3. ஆனால் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டிய உண்டியல்களைவிட இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படும் உண்டியல்கள் மிகுதியாகவிருந்தால் (பற்றைவிட

வரவு மிகுந்தால்) இங்கிலாந்திலுள்ள பாங்கிகள் இந்தியாவிலுள்ள பாங்கிகளுக்குத் தங்கத்தை அனுப்பிவைக்க நேரும். இவ்வாறு தங்கத்தை அனுப்பச் செலவுபிடிக்குமாதலால் இந்தியாவுக்குப் பணம் அனுப்ப விரும்புவோர் அதிகத்தரகு கொடுத்தாலன்றி இங்கிலாந்திலுள்ள பாங்கிகள் அவர்களுக்கு உண்டியல்களை விற்கா. எனவே ரூபாய்-உண்டியல்களின் விலை (price of rupee bills) உயரும். உதாரணமாக $18\frac{1}{16}$பெ. ஆக இருந்த ஒரு ரூபாய் உண்டியல் $18\frac{1}{8}$பெ. ஆக உயரலாம். எனவே ஒவ்வொரு ரூபாய் உண்டியலுக்கும் ஆங்கிலேயர் தங்கள் நாணயத்தில் $\frac{1}{16}$ பெ. அதிகங் கொடுக்க நேரும். இதை வேறுவிதமாய்க் கூறினால் ரூபாயின் மாற்றுமதிப்பு உயரும்; (rupee appreciates) பவுண்டின் மாற்றுமதிப்புக் குறையும் (pound depreciates) என்னலாம். எனவே நாணயமாற்றில் ஆங்கிலேயருக்கு நஷ்டமும் இந்தியருக்கு இலாபமும் ஏற்படும். வேறு விதமாய்க் கூறினால் நாணயமாற்று ஆங்கிலேயருக்குப் பிரதிகூலமாகவும் (unfavourable) இந்தியருக்கு அநுகூலமாகவும் (favourable) இருக்குமெனலாம்.

4. ஆனால் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்படும் உண்டியல்கள் (இந்தியாவின் பற்று) மிகுந்தால் ரூபாயின் மாற்றுமதிப்புக்

குறையும்; அப்பொழுது பவுண்டின் மாற்றுமதிப்பு உயரும். நாணயமாற்று ஆங்கிலேயருக்கு அநுகூலமாகவும் இந்தியருக்குப் பிரதிகூலமாகவும் மாறும்.

5. நாம் மேற்கூறியவற்றாற் பெறப்படும் உண்மை, ஒரு தேசத்தின் வெளிப்படையானவும் மறைவானவுமான ஏற்றுமதி இறக்குமதிகளால் அத்தேசத்தின் வர்த்தகநிலை அநுகூலமாக இருக்குமானால் அநுகூலமான நாணயமாற்றும், அது பிரதிகூலமாக இருக்குமானாற் பிரதிகூலமான நாணயமாற்றும் இருக்கும் என்பதாம். ஒரு தேசத்தின் வரவு மிகுந்தால் அத்தேசத்திற்குப் பிறநாட்டார் தங்கத்தை அனுப்புவாராதலாலும் அதன் பற்று மிகுந்தால் அத்தேசத்தினின்று தங்கம் வெளிப்போமாதலாலும் நாணயமாற்று, முறையே, அநுகூலமாகவும் பிரதிகூலமாகவும் விளங்குகின்றது எனக் கொள்க.*

* இவ்வாறு கொள்வது மரபு. பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலுள்ள தங்கக்கோட்பாட்டினர் (bullionists) என்னும் ஒருசிலர் தங்கம் தேசத்திற்குட் புகுவது அநுகூலம், அது வெளிப்போவது பிரதிகூலம் என வாதித்தனர். இக்கோட்பாட்டுக்கு மறுப்பாக ஒருதேசத்திற்குள் தங்கம் வருவதனால்மட்டும் அதன் செல்வநிலை உயர்ந்து விடாது; வர்த்தகப் பெருக்கினாலேயே அதன் செல்வநிலை ஓங்கும் என வர்த்தகக் கோட்பாட்டினர் (mercantalists) என்னும் வேறொருசாரார் வாதித்தனர்.

6. ஆயினும் சிறிது ஊன்றி ஆராய்ந்தால் ஒரு தேசநாணயத்தின் மாற்றுமதிப்பு உயரும்போது (high exchange) அது அத்தேசத்திலுள்ள எல்லோருக்கும் அநுகூலமானதல்லவென்றும், அது குறையும்போது எல்லோருக்கும் பிரதிகூலமானதல்லவென்றும் புலனாகும். உதாரணமாக ரூபாய்-பவுண்டு மாற்று விகிதம் 16 பென்ஸாக இருக்கும்பொழுது ஒருவன் இந்தியாவிலிருந்து நூறுபவுண்டுக்குப் பருத்தியை ஏற்றுமதிசெய்தால் அவனுடைய உண்டியற்சீட்டுக்கு ரூ. 1500 கிடைக்கும். ஆனால் மாற்றுவிகிதம் 18 பெ. ஆக உயர்ந்துவிட்டால் அவனுக்கு ரூ. 1333-5-4 தான் கிடைக்கும். எனவே உயர்ந்த மாற்றுவிகிதம் ஏற்றுமதி வர்த்தகர்களுக்குப் பிரதிகூலமானது. ஆனால் இறக்குமதி வர்த்தகர்களுக்கோ அது அநுகூலம். எவ்வாறெனில் இங்கிலாந்திலிருந்து 100 பவுண்டு பெறுமான கண்ணாடிப் பொருள்களை இறக்குமதிசெய்த இந்தியன் ரூபாய்-பவுண்டு மாற்றுவிகிதம் 16 பெ. ஆக இருக்கையில் ரூ. 1500 கட்டுவான். ஆனால் அவ்விகிதம் 18 பெ. ஆக உயரும்போது ரூ. 1333—5—4 தான் கட்டுவான். அங்ஙனமாகவே இங்கிலாந்துக்குப் பணம் அனுப்புவோருக்கு உயர்ந்த விகிதம் இலாபம்; குறைந்த விகிதம் நஷ்டம்; மாற்று விகிதம் 16 பெ. ஆக இருந்தால் நூறு பவுண்டு

அனுப்புவதற்கு ரூ. 1500 கொடுக்கவேண்டும்; 18 பெ. ஆக இருந்தால் ரூ. 1333—5—4 தான் கொடுக்கவேண்டும். ஆதலின் உயர்ந்த மாற்று விகிதமாவது குறைந்த மாற்று விகிதமாவது எப்பாலாருக்கும் ஒருங்கே அநுகூலம் என்றாவது பிரதிகூலம் என்றாவது கொள்ளல் கூடாது.

7. மேலும் ஒருதேசத்தின் நாணயமாற்று எப்பொழுதும் அநுகூலமாகவாவது அன்றி எப்பொழுதும் பிரதிகூலமாகவாவது இருந்துவராது. ஒரு தேச நாணயத்தின் மாற்றுமதிப்பு உயர்ந்தால் ஏற்றுமதிவர்த்தகர்கள் நஷ்டமடைவார்கள்; இறக்குமதி வர்த்தகர்கள் இலாபமடைவார்கள். ஆதலால் நாளடைவில் அத்தேசத்தின் ஏற்றுமதி குன்றி இறக்குமதி மிகும்; அதாவது வரவைவிடப் பற்று அதிகப்படும். பற்று அதிகப்பட்டால் தேசத்தைவிட்டுத் தங்கம் வெளிப்போமாதலால் நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறும். இவ்வாற்றால் உயர்ந்த மாற்றுவிகிதத்தையுடைய தேசத்தின் நாணயமாற்றுக்குறைந்தும் குறைந்த விகிதத்தையுடைய தேசத்தின் நாணயமாற்று உயர்ந்தும் தானே சரிப்படுத்திக்கொள்ளப்படும். நாம் இங்குக் காட்டியபடி நாணயமாற்றுச் சமநிலைக்கு வரவேண்டுமானால் எல்லாத் தேசங்களும் அந்நியோந்நியமாகக் கொடுக்கல் வாங்கலும் வர்த்

தகமும் நடத்திவரவேண்டும்; அன்றியும் அவற்றின் நாணயத்திட்டங்களிலும் ஒற்றுமை யிருக்க வேண்டும். இவற்றை மேல்வரும் கட்டுரையில் தெளிவுற விளக்குவாம். இது நிற்க.

8. இறுதியாக இக்கட்டுரையில் விளக்கிய மூலவுண்மையைப் பொழிப்பாகக் கூறுதும். ஒரு தேசத்தின் பற்றும் வரவும் சமமாயிருந்தால் உண்டியற்சீட்டுக்களை அனுப்பியே கணக்கு முடித்துவிடலாமாதலால் நாணயமாற்று விகிதம் சமநிலையில் இருக்கும். அதிக வரவு இருக்குங் காலை ஒருதேச நாணயத்தின் மாற்று மதிப்பு உயர்ந்தும் அதிகப் பற்று இருக்குங்காலை அம் நாணயத்தின் மாற்றுமதிப்புக் குறைந்தும் விளங்கும். பொருளாதார நிலையிற் குழப்பமில்லாத காலத்து நாணயமாற்று விகிதத்தின் ஏற்றத் தாழ்வுக்கு முக்கிய காரணம் இதுவேயாம். மேலும் எல்லாத் தேசங்களிலும் தங்கத்திட்டம் நிலைபெற்றுவருமேல் இவ்வேற்றத்தாழ்வும் ஓர் வரம்புக்குட்பட்டிருக்கும். ஆதலால் மேல்வருங் கட்டுரைகளில் தங்கத்திட்டத்தையும் அத்திட்டத்தின்கீழ் இயங்கிவந்த நாணயமாற்றையும் விவரிப்போம்.

இரண்டாம் பாகம்

தங்கத்திட்டத்தின்கீழ் நாணயமாற்று.
(Exchanges under the Gold Standard)

The preliminary condition of the smooth working of the gold standard is economic, financial and psychological equilibrium.

(*Paul Einzig*)

தங்கத்திட்டம் இடையூறின்றி இனிது இயங்குவதற்கு
முன் நிபந்தனையாக எல்லாத்தேசங்களின் பொரு
ளாதார நிலையிலும், கொடுக்கல் வாங்கலிலும்
மக்கள் மனோலயத்திலும் சமநிலை
யிருத்தல் வேண்டும்.

பால் ஐன்ஜிக்

6

யுத்தத்திற்குமுன்வழங்கியதங்கத்திட்டம்.

(The Pre-War Gold Standard.)

தங்கநாணயத்திட்டம் (அல்லது தங்கத்திட்டம்) என்பது ஒரு தேச நாணயத்துக்கும் தங்கத்துக்கும் குறிப்பிட்ட ஒரு விலைமதிப்பை வரையறுத்து அவ்விலைமதிப்பு நிலைபெற்றுவரச் செய்யலாம்.* உதாரணமாக, இங்கிலாந்தில் தங்கத்திட்டம் வழங்கிய காலமெல்லாம் ஒரு அவுன்ஸ் நிறையுள்ள 22 மாற்றுத் தங்கம் 3 பவுண்டு 17 ஷிலிங் 10½ பென்ஸ் ஆகவே இருந்துவந்தது.

2. சென்ற ஐரோப்பிய மஹா யுத்தத்திற்கு முன் உலகத்திலுள்ள எல்லா முக்கிய தேசங்களிலும் அவ்வத்தேசச் சட்டப்படி குறிப்பிட்ட நிறையும் மாற்றும் அடங்கிய தங்கநாணயங்கள் செலா

* 'When a country adopts the gold standard it makes its currency worth a stated amount of gold' (Sir Arthur Salter, *Recovery*, P. 59.) இவ்வத்தியாயத்திலுள்ள கருத்துக்கள் இவ்வாசிரியரின் 'நாணயம்' என்ற நூலில் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

வணியிலிருந்து வந்தன. தங்கத்திட்டத்தின் முக்கியநோக்கம் தங்கநாணயங்களிலடங்கிய தங்கமும் உலோகமாக விற்கப்படும் தங்கமும் சமவிலை மதிப்புடையதாயிருக்கச் செய்வதாதலின், ஒவ்வொரு தேச அரசாங்கமும் (அன்றித் தலைமைப் பாங்கியும்) தங்கத்தைக் கொணர்ந்து நாணயம் செய்துதரக் கேட்பாருக்குச் செலவின்றி நாணயத்தைப் பதிப்பித்துக்கொடுத்தும், நாணயத்தைக் கொடுத்துத் தங்கத்தைக் கேட்பாருக்குத் தடையின்றித் தங்கத்தைக் கொடுத்தும் வந்தன. மேலும், ஒவ்வொரு தேசத்திலும் வழங்கப்பெற்ற தாள்நாணயங்களும் தங்கத்துக்கேனும் தங்கநாணயங்களுக்கேனும் தடையின்றி மாற்றியும் கொடுக்கப்பட்டன. அன்றியும், வெளிநாட்டுக் கடன்களைத் தீர்ப்பதற்காகத் தங்கத்தை ஏற்றுமதி செய்வதற்கும், வெளிநாட்டார் தம் கடன்களைத் தங்கமாகத் திருப்பிச் செலுத்தும்போது அதை இறக்குமதி செய்வதற்கும் எவ்விதத் தடையும் இடப்படவில்லை. இங்ஙனமாக, நாணயஞ்செய்து கொள்ளும் உரிமையைக் குடிகளுக்கு வழங்கிச் (open mint) செலவின்றி நாணயத்தைப் பதிப்பித்துக்கொடுத்தல் (free coinage), தாள்நாணயங்களுக்கு மாற்றாகத் தங்கத்தைத் தடையின்றிக் கொடுத்தல் (free convertibility), தங்க ஏற்றுமதி இறக்குமதிகளுக்குத் தடையிடாதிருத்தல் (free

market for gold), ஆகிய இம்மூன்று முறைகளினாலும் நாணயமும் தங்கமும் சமமான விலைமதிப்புடையனவாக நிறுவப்பெற்றுவந்தன. இது நிற்க.

3. எல்லாத் தேசங்களும் தங்கநாணயங்களை வழங்கவும், தாள்நாணயங்களுக்கு மாற்றாகத் தங்கத்தை, அன்றித் தங்கநாணயங்களை அளிக்கவும் வேண்டுமானால் அவற்றுக்குப் போதிய அளவு தங்கம் எப்பொழுதும் கிடைத்துவரவேண்டும். அதிர்ஷ்டவசத்தினால் சென்ற நூற்றாண்டு முழுவதும் நாணயஞ் செய்வதற்கு வேண்டும் தங்கம் குறைவின்றிக் கிடைத்துவந்தது.*

* சென்ற நூற்றாண்டில் பொருள் உற்பத்தி நூற்றுக்கு 3 விகிதமாகவும், தங்கவுற்பத்தி 2·8 விகிதமாகவும் உயர்ந்து வந்தன என ஆசிரியர் கேசல் கணக்கிட்டுள்ளார். இங்ஙனமாகப் பொருள் உற்பத்தியும் தங்கவுற்பத்தியும் ஏறக்குறையச் சமமாக இருந்தமையால் நாணயஞ்செய்வதற்குவேண்டும் தங்கம் குறைவின்றிக் கிடைத்தது என்பர் ஒரு சாரார். ஆயினும், இந்நூற்றாண்டில் உள்நாட்டு வர்த்தகமும் வெளிநாட்டு வர்த்தகமும் மிக மிகப் பெருகிவந்தமையால் எல்லாக் கொடுக்கல்வாங்கல்களிலும் எல்லாத் தேயத்தினரும் தங்கநாணயங்களையே வழங்கியிருப்பரேல் நாணய உபயோகத்துக்குரிய தங்கம் குறைவுபட்டிருக்கும் எனவும், இக்குறை, செக்குகளையும் உண்டியற்சீட்டுக்களையும் வழங்கினமையினாலேயே நீக்கப்பட்டது எனவும் வேறொரு சாரார் கூறுவர். எனவே, தங்கவுற்பத்தி மிகுந்துவந்ததனால் மட்டும் அன்று, தாள்நாணயங்களையும், உண்டியற் சீட்டுகளையும் வழங்கியதனாலும் தங்கத்திட்டம் இடையூறின்றி இயங்கிற்றெனக் கொள்ளவேண்டும்.

4. குறைவற்ற தங்க உற்பத்தியிருந்தகனுலும், தாள்நாணயங்களை வழங்கினதனுலும் மட்டும் தங்கத்திட்டம் இனிது இயங்கிற்றெனக் கொள்ளக்கூடாது. உற்பத்தியாக்கப்பட்ட தங்கமெல்லாம் சில தேசங்களுக்குள்மட்டும் சென்றுவிட்டால் மற்றத் தேசங்கள் தங்க நாணயங்களை வழங்கவாவது தாள்நாணயங்களுக்கு மாற்றுகத் தங்கத்தை அளிக்கவாவது இயலாது. உதாரணமாக, சென்ற நூற்றுண்டில், மேற்கு ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, பிரான்சு, ஹாலந்து, ஜெர்மனி முதலிய நாடுகளுக்குச் செலுத்தவேண்டிய தம் கடன்களைத் தீர்க்க மற்றைத் தேசங்கள் தம்மிடமுள்ள தங்கத்தை அனுப்பிக் கணக்குத் தீர்த்தன. அதனுல் கடன்பட்டதேசங்களில் தங்கம் குறைவுபட்டது. மேற்கூறிய முதலுடைய தேசங்களிலோ தங்கம் மிகுதிப்பட்டது. இங்ஙனமாகத் தங்க வியாபகத்தில் (Distribution of Gold) எழுந்த வித்தியாசத்தினுல் தங்கத்திட்டம் பிழைபட்டொழியும் நிலைமையில் இருந்தது. இக்குறையைப் போக்க எண்ணி, இங்கிலாந்தும், அதிக வரவுடைய பிற முதலுடைய தேசங்களும் தம்மிடத்து வந்த தங்கத்தைக் கடன்பட்ட தேசங்களுக்கே மீண்டும் கடனுக அனுப்பிவைத்தன. இத்தகைய தடையற்ற கொடுக்கல் வாங்கலினுல் (free lending and borrowing) எல்லா நாடுகளிலும் தங்கவியாபகம் சமநிலை எய்திற்று. தங்கத்திட்டமும் இனிது இயங்கலாயிற்று.

5. அதிகக் கடன்பட்ட தேசங்கள் தாம் கடனுகப்பெற்ற தங்கத்தைக்கொண்டு முதலுடைய தேசங்களிற் செய்யப்பட்ட இயந்திரக்கருவிகளை வாங்கி, அவற்றின் உதவியினுல் உணவுப்பொருள்களையும் கைத்தொழிலுக்காதாரமான மூலப்பொருள்களையும் மிகுதியான அளவில் விளைவித்துத் தாமும் உபயோகித்து, எஞ்சியவற்றை முதலுடைய தேசங்களுக்கே ஏற்றுமதிசெய்து, தம் கடனையும் தீர்த்துவந்தன. இத்தகைய வர்த்தகம் முதலுடைய தேசங்களுக்கும் கடன்பட்ட தேசங்களுக்கும் ஒருங்கே அநுகூலமானதாயிருந்ததனுல் ஒரு தேசத்திலிருந்து மறுதேசத்துக்கு அனுப்பப்பட்ட ஏற்றுமதிப் பொருள்களுக்கு எவ்விதமான வரிகளும் விதிக்கப்படவில்லை. இங்ஙனமாக எல்லாத் தேசங்களும் ஐக்கியமுறையிற் பொருள் மாற்றுச் செய்தமையால் வரியற்ற வர்த்தகத் திட்டத்தினுலும் (free trade) தங்கத்திட்டம் நிலைபெறலாயிற்று எனக் கொள்ளவேண்டும்.

6. நாம் மேலே விளக்கிக் காட்டியபடி தேவைக்குத்தக்கவாறு தங்கவுற்பத்தி மிகுந்தும், தாள்நாணயங்கள் அதிக அளவில் வழங்கப்பட்டும், முதலுடைய தேசங்கள் தம்மிடம் வந்த

தங்கத்தை அதை இழந்த தேசங்களுக்குக் கடனாகக் கொடுத்துதவியும், வரியற்ற வர்த்தகம் நிலைபெற்றும் வந்தமையினாலேயே தங்கத்திட்டம் இயங்கிற்று என நாம் முடிவாகக் கூறவேண்டும். எனவே, தங்க உற்பத்தி குறைந்தாலும், தங்க ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு அரசாங்கத்தார் தடையிட்டாலும், முதலுடைய தேசங்கள் கடன் கொடுக்கவும், கடன்பட்ட தேசங்கள் கடன் பெறவும் மறுத்தாலும், அன்றி, வர்த்தக ஏற்றுமதி இறக்குமதிகளுக்குத் தடைவரிகள் இடப்பட்டாலும் தங்கத்திட்டம் இயங்காதென்பது எளிதில் உணரப்படும். தங்கத்திட்டம் இனிது இயங்குவதற்கு எல்லாத் தேசங்களின் பொருளாதார நிலையிலும், கொடுக்கல் வாங்கலிலும், மக்கள் மனோபாவத்திலும் சமநிலையிருத்தல் வேண்டும் எனப் பால் ஐன்சிக் எடுத்துக்காட்டிய கூற்றின் உண்மை இதனால் நன்கு புலனாகின்றதன்றோ? *

* 'The preliminary condition of the smooth working of the gold standard is economic, financial, and psychological equilibrium' (Paul Einzig, *International Gold Movements*, P. 123).

7

தங்க ஏற்றுமதி இறக்குமதி எல்லைகள்.
(Gold Export and Import Points.)

சென்ற ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்த காலம்வரை தங்கத்திட்டம் எவ்வாறு இயங்கி வந்ததென முன் கட்டுரையிற் காட்டப்பட்டது. இத்தங்கத் திட்டத்தால் எய்தப்பெற்ற பயன்களுள் நிலைபெற்ற நாணயமாற்று (stable exchanges) முதன்மையானது. இதுபற்றி இக் கட்டுரையிற் சிறிது கூறுவோம்.

2. தங்கத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருந்த எல்லாத் தேசங்களின் நாணயங்களுக்கும் தங்கத்துக்கும் நிலையான விலைமதிப்பு வரையறுக்கப்பட்டிருந்ததால் ஒவ்வொரு தேசத்தின் தங்கநாணயமும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எப்பொழுதும் ஒரே விலைமதிப்புடையதாய் விளங்கிற்று. உதாரணமாக, ஆங்கிலேயரின் பவுண்டு நாணயத்துக்கு,அதனாற் குறிக்கப்பட்ட தங்கத்தை இங்கிலாந்திலேனும், அன்றிப் பிறதேசங்களிலேனும் பெற்றுக்கொள்ளலாம்.

3. இங்ஙனமாக, எல்லாத் தேசங்களின் நாணயங்களும் நிலையான விலைமதிப்பையும் மாற்று மதிப்பையும் உடையனவாக விளங்கினமையால் வெளிநாடுகளுக்கு உண்டியல்களை அனுப்புவதில் ஒரு பெரிய அநுகூலம் விளைந்தது. உதாரணமாக, லண்டன் பாங்கி, தன்னிடம் பற்று வரவு செய்யும் தாம்ஸனுடைய உண்டியலை நியூயார்க்நகரத்திலுள்ள ஸ்மித் என்பவனுக்கு அனுப்பிவைப்பதற்கு மிகவுயர்ந்த தரகு கேட்குமாகில், அவ்வுயர்ந்த தரகைப் பாங்கிக்குக் கொடுப்பதை விடத் தங்கத்தை அனுப்பிவிடுவது இலாபமாக இருந்தால், தாம்ஸன் பாங்கியில் அல்லது உலோக வியாபாரிகளிடம் தங்கத்தை வாங்கி, நியூ யார்க்குக்கு அனுப்பிவிடுவான். இத்தங்கத்தைப்பெறும் ஸ்மித் அதைத் தன் தேச நாணயசாலைக்குக் கொண்டுபோய் டாலர் நாணயங்களாக மாற்றிக் கொள்வான்.

4. இரு தேசங்களிலும் குறிப்பிட்ட விலைப்படி அரசாங்கத்தார் தங்கத்தைப் பெற்றுக் கொண்டு, நாணயங்களைச் செலவின்றிப் பதிப்பித்துக் கொடுத்தனராகையாலும், தங்க ஏற்றுமதி இறக்குமதிகளுக்குத் தடையிடாதிருந்தனராகையாலும், தங்கத்தை அனுப்பிக் கடனைத் தீர்த்துக் கொள்வது சாத்தியமாகவும் இலாபமாகவும் இருந்தது.

5. ஆதலால் ஒரு தேசத்திலிருந்து மறு தேசத்துக்கு அனுப்பப்படும் உண்டியல்களின் விலை அத்தேசத்திற்குத் தங்கத்தை ஏற்றுமதிசெய்வதற்காகும் செலவுக்கு மேற்போகாதென்பது பெறப்படும். ஆதலின் ஒருவன் பாங்கியில் வாங்கும் உண்டியல்களின் மிக உயர்ந்த விலையைத் தங்க ஏற்றுமதி எல்லை (gold or specie export point), சுருக்கமாக ஏற்றுமதி எல்லை (export point), என வழங்கினர். இது நிற்க.

6. நியூயார்க்கிலுள்ள ஸ்மித் என்பவனிடமிருந்து தாம்ஸன் பணத்தைப்பெற விரும்பினால் லண்டன் பாங்கியொன்றில் தனது உண்டியற் சீட்டை விற்கலாம். இவ்வுண்டியற் சீட்டை வாங்கிக்கொள்வதற்குப் பாங்கி கேட்கும் வட்டமானது தங்கத்தை நியூயார்க்கிலிருந்து இறக்குமதிசெய்து சாவரன்களாக மாற்றிக்கொள்வதைவிட அதிகமாயிருப்பின், தாம்ஸன் உண்டியற் சீட்டை விற்கமாட்டான்; தங்கத்தையே அனுப்பிவிடுமாறு ஸ்மித்தைக் கேட்டுக்கொள்வான். ஆதலின், ஒருவன் பாங்கிக்கு விற்கும் உண்டியலுக்குரிய வட்டம் தங்கத்தை இறக்குமதி செய்வதற்கு ஆகும் செலவுக்கு மேற்போகாதென்பது பெறப்படும். எனவே இதைத் தங்க இறக்குமதி எல்லை (gold or specie import

point); சுருக்கமாக இறக்குமதி எல்லை (import point), என வழங்கினர்.

7. இங்ஙனமாக, வர்த்தகர்கள் விற்கும் உண்டியல்களுக்குரிய வட்டம் அவர்கள் தங்கத்தை இறக்குமதிசெய்வதற்கு ஆகும் செலவுக்கு மேற்போகாமலும், அவர்கள் வாங்கும் உண்டியல்களுக்குரிய தரகு தங்கத்தை ஏற்றுமதி செய்வதற்கு ஆகும் செலவுக்கு மேற்போகாமலும் இருந்தமையால் நாணயமாற்று விகிதத்தின் ஏற்றத்தாழ்வுகள் (fluctuations in exchange rates) இவ்விரண்டு எல்லைகளுக்கும் உட்பட்டு நின்றன. ஆதலின் குழூஉக்குறியாக இவற்றைத் தங்க எல்லைகள்* (gold or specie points) எனவும் வழங்கினர்.

8. தங்கஎல்லைகள் என்னும் தொடர்மொழியின் கருத்தை வேறு விதமாகவும் விரித்துக்கூறலாம். உண்டியலை வாங்கும் விலையானது ஏற்றுமதி எல்லைக்குமேல் உயருமானால் அத்தேசத்தினின்று தங்கம் வெளிப்போம்; அவ்வுண்டியலை விற்கும் விலையானது இறக்குமதி எல்லைக்குமேல்

*இவற்றை முறையே தங்கம் வெளிப்போம் எல்லை (outgoing specie point), தங்கம் உட்புகும் எல்லை (incoming specie point), எனவும் நாணயமாற்றின் மேல்எல்லை (the upper limit of exchange) கீழ் எல்லை (the lower limit of exchange) எனவும் வழங்கலும் உண்டு.

குறையுமானால் அத்தேசத்திற்குள் தங்கம் வரத் தொடங்கும். †

9. ஆனால் ஒரு தேசத்தின் பற்று வரவிற் காணப்படும் மிகையும் குறையும் சிற்சில மாதங்களில்மட்டுமே நிகழ்வனவாகவும், வருடக்கடைசியில் அதன் மொத்தப் பற்றும் வரவும் ஏறக்குறையச் சமமாகவும் இருக்குமாகில், பற்று மிகும்போது தங்கத்தை ஏற்றுமதிசெய்வதும், வரவு மிகும்போது தங்கத்தை இறக்குமதிசெய்வதும் அவசியமன்று. ஏனெனில் ஒருமுறை ஏற்றுமதிசெய்த தங்கத்தையே மீண்டும் இறக்குமதி செய்வது வீண் சிரமமும் செலவும் தரும்.

10. ஆதலால் உண்டியல்களின்விலை இயல்பாக ஏற்றுமதி எல்லைக்குமேல் உயரவேண்டிய காலத்து பாங்கர்கள் அதை அவ்வாறு உயர

†இவ்வாறு கூறுவது கோட்பாடு; ஆனால் ஒவ்வொருதேச நாணயத்திற்கும் இவ்வெல்லைகள் எவையெனத் திட்டமாகக் கணக்கிடல் மிகவும் அரிது. மேலும், யுத்தத்திற்கு முன்னும் பின்னும் மாற்றுவிகிதங்கள் இவ்வெல்லைகளைக் கடந்துநின்ற பொழுதும் தங்கம் உட்புகாதும் வெளிச்செல்லாதும் இருந்த காலங்களும் உண்டு. இவையனைத்தையும் ஈண்டு விவரித்தாற் பெருகும். இவற்றை விரிவாய் அறிய விரும்புவோர் பால் ஐன்ஜிக் என்பவரின் 'International Gold Movements' நூலைப்பார்க்கவும். (பக்கங்கள் 69-89; 145-149).

விடாது அதைச் சற்றுக் குறைப்பர்; அது இயல்பாய் இறக்குமதி எல்லைக்குமேல் குறையவேண்டிய காலத்து அதை அவ்வாறு குறையவிடாது அதைச் சற்று உயர்த்துவர். இவ்வாற்றால் ஒரு முறை ஏற்றுமதி செய்த தங்கத்தையே மீண்டும் இறக்குமதி செய்ய நேரிடும் சிரமம் ஒழியும். நாம் முற்கூறியபடி எதிர்கால உண்டியல்களை விற்றலாலும் வாங்கலாலும் இப்பயன் எய்தப்பெறும்.

11. இங்ஙனமாக, நாணயமாற்று விகிதங்களைச் சற்றுக் கூட்டியுங் குறைத்தும் தகுந்தபடி நிமிர்த்திவிடுவதனால் (ironing out the fluctuations) அவ்வப்போதுள்ள தங்க ஏற்றுமதி இறக்குமதிகளின் அவசியத்தை ஒருவாறு நீக்கி விடலாம். ஆனால், ஒரு தேசத்தின் பற்றேனும் வரவேனும் வருடந்தோறும் மிகுந்து அன்றிக் குறைந்துவருமாயின் தங்க ஏற்றுமதி இறக்குமதிகளைத் தடுத்தல் இயலாது.

12. எல்லாத் தேசத்தினரும் தங்கத்திட்டத்தைக் கைக்கொண்டிருக்கும்பொழுது உண்டியல்களின் விலையின் ஏற்றத்தாழ்வுகள் தங்க ஏற்றுமதி இறக்குமதி எல்லைகட்குட்பட்டு நிற்குமாகையால் வர்த்தகர்களுக்கும் முதலுடையவர்களுக்கும் பாங்கர்களுக்கும் மிகப்பல அநுகூலங்கள்

விளையும். நிலைபெற்ற நாணயமாற்றிருந்தாற்றான் வர்த்தகர்கள் தத்தம் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் விலைகளைத் திட்டமாகக் கணக்கிட்டு, அச்சமின்றி அவற்றை வாங்கவும் விற்கவுஞ் செய்வர்; முதலுடையவர்களும் வெளிநாடுகளுக்குத் தடையின்றிக் கடன் கொடுக்க முற்படுவர்; பாங்கர்களும் உண்டியல்களை விற்பதிலும் வாங்குவதிலும் நஷ்டமடையார். ஆதலால் தங்கத் திட்டத்தால் எய்தப்பெறும் பெரும்பயன்களில் நிலைபெற்ற மாற்றுவிகிதம் (stable exchanges) ஒன்றெனக் கண்டுகொள்ளலாம்.*

---

*உதாரணமாக, ரூபாய்-பவுண்டு மாற்றுவிகிதம் 18 பென்ஸ் ஆக இருக்கும்போது 1000 பவுண்டுக்குக் காகிதத்தை ஒருவன் இறக்குமதிசெய்தபின், திடீரென அவ்விகிதம் 16 பென்ஸாகக் குறைந்துவிட்டால், புதுவிகிதப்படி உண்டியலை அனுப்புவதில் அவன் ரூ. 1666—1C—8 நஷ்டமடைவான். அன்றி, மாற்றுவிகிதம் 20 பெ. ஆக உயர்ந்துவிடின் அவன் ரூ. 1333-5-4 இலாபமடைவான். அங்ஙனமாகவே, ரூ. 10,000 பெறுமான பருத்தியை ஏற்றுமதிசெய்த ஒருவனுக்கு மாற்றுவிகிதம் உயர்ந்தபொழுது நஷ்டமும், குறைந்தபொழுது இலாபமும் உண்டு. ஆதலால் மாற்றுவிகிதத்தின் ஏற்றத்தாழ்வுகளால் இயல்பான வர்த்தகம் பெரிதும் இடருறும்; அக்காலை வர்த்தகம் சூதாட்டமாக மாறும் எனக்கூறுவர். அங்ஙனமாகவே, வெளிநாடுகளுக்குக் கடன் கொடுக்கும்போது குறைந்த மாற்றுவிகிதமும், அதனைத் திரும்பப்பெறும்போது உயர்ந்த மாற்றுவிகிதமும் இருந்தால் இலாபமாம்; கடன் கொடுக்கும்போதிருந்த விகிதத்தைவிடக் கடனைத் திரும்பப் பெறும்போதுள்ள விகிதங் குறைந்துவிடின் நஷ்டம் விளையும். ஆகலின் கொடுக்கல்வாங்கலுக்கும் நிலையான மாற்றுவிகிதம் நன்மை பயக்கும்.

13. இவ்வுண்மையை வேறொரு உதாரணத்தின் மூலமாகவும் விளக்கிக்காட்டலாம். சீனர் டேல் என்னும் வெள்ளி நாணயத்தை வழங்கிவருகின்றனர். ஆனால் அந்நாணயத்தில் அடங்கிய வெள்ளி, நிலையான விலைமதிப்புடையதன்றாகையால் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதன் மாற்று விகிதத்தை வெள்ளிக்கும் தங்கத்துக்கும் அவ்வப்போதுள்ள நடப்பு விலைமதிப்புப்படியே கணித்து வருகின்றனர். ஆதலின் உண்டியல்களின் விலைகள் அடிக்கடி மாறுபடுகின்றன. இதனால் சீன வர்த்தகர்கள் தம் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் விலைகளைத் திட்டமாய்க் கணக்கிட்டு அறியமாட்டாதவர்களாய்ப் பெரிதும் இடருறுகின்றனர்.* இது நிற்க.

* வெள்ளிக்கும் தங்கத்துக்கும் அவ்வப்போதுள்ள விலைமதிப்புப்படி மாற்றுவிகிதம் கணக்கிடப்படுகின்றதாகையால் பிறநாடுகளுக்கு அனுப்பப்படும் உண்டியல்களின் உயர்ந்த விலை, சீனர் தமது டேல்நாணயங்களுக்கு மாற்றாகத் தங்கத்தைப்பெற்று அதை அந்நாடுகளுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏற்படும் செலவுக்குமேற் போகாது. எனவே, இதை வெள்ளி ஏற்றுமதி எல்லை (silver export point) என்னலாம். அங்ஙனமே, சீனர் தங்கள் உண்டியல்களை விற்கும் விலையானது தங்கத்தைப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அதற்கு மாற்றாக வெள்ளியைப்பெறும் விலைக்குக் குறையாது. எனவே, இதை 'வெள்ளி இறக்குமதிஎல்லை' (silver import point) என்னலாம். "Shipments of silver sold abroad at the market rate determine the limits of the exchange". (Nogaro, *Modern-Monetary Systems*, P. 131.)

14. பிரான்சு தேசத்தில் வழங்கப்பெறும் பிராங்குத் தாள்நாணயங்களே அதன் சார்பு நாடான மடகாஸ்கரிலும் வழங்கப்பெறுகின்றமையால் இந் நாணயமாற்றில் எழும் ஏற்றத் தாழ்வுகள் தாள் நாணயங்களை அங்குமிங்கும் அனுப்பும் செலவுக்கு மேற்போகாது இருந்து வருகின்றன.*

15. ஆதலால் எல்லாத்தேசங்களிலும் ஒரே விதத்தாள்நாணயம் வழங்கப்பெறுமேல் உண்டியல்களை வாங்கும் விலையானது அத்தாள்நாணயங்களை இன்ஷியூர் செய்து அயல் தேசங்களுக்கு அனுப்புஞ் செலவுக்கு மேற்படாது என்பதும், உண்டியல்களை விற்கும் விலையானது அத்தேசங்களினின்று தாள்நாணயங்களை இன்ஷியூர்த் தபால்மூலம் பெற்றுக்கொள்ளும் விலைக்குக் குறையாது என்பதும் நாம்இதுகாறும் கூறியவற்றால் உணரப்படும். ஆதலின் இவற்றைத் தாள் நாணய ஏற்றுமதி இறக்குமதி எல்லைகள் (paper export and import points) என வழங்கலாம்.

*'A country which has a paper currency can have a stable exchange with another country which has a circulation of the same paper currency...the cost of sending insured notes is much less than the cost of sending gold' (Nogaro).

8

பாங்கி வட்டி விகிதம்.

(The Bank Rate.)

தங்கத்திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் ஒரு தேசத்தின் கடன் எப்பொழுதும் மிகுந்து வருமாயின், அதன் நாணயமாற்று விகிதம் தங்க ஏற்றுமதி எல்லைக்குமேல் உயர்ந்தவுடன், தங்கம் அத்தேசத்தினின்று வெளிப்போம். அதன் பயனாகத் தொழின்முயற்சிகள் இடர்ப்பட்டு, வேலையில்லாத்திண்டாட்டம் எழும்.* இவ்வாறான குறைகள் எழாவண்ணம் அத்தேசம் தன்னிடமிருந்து வெளிப்போந்த தங்கத்தையாவது, அன்றி அத்தங்கத்தின் விலைமதிப்புக்குச் சமமான இயந்திரக் கருவிகள்முதலிய பொருள்களையாவது பிறதேசங்களிலிருந்து கடனாகப் பெற்று, அவற்றின் உதவியால் விளைபொருள்களைப் பெருக்கி, அவற்றை ஏற்றுமதிசெய்து, அதன்மூலம் தனது கடனைத்

*இக்கருத்துக்கள் 'நாணயம்' என்ற நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

தீர்த்து, நாணயமாற்றைச் சமநிலைக்குக் கொண்டு வரும்.

2. சென்ற நூற்றாண்டில், பொருளாதார நிலையில் தாழ்வுற்றிருந்த அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா முதலான தேசங்களே, நாம் மேற்கூறியவாறு, முதலுடைய தேசங்களிலிருந்து கடனைப் பெற்றுப் பிரதிகூலமான நாணயமாற்றை அநுகூலமான நாணயமாற்றாகத் திருத்தியமைத்து வந்தன. ஆனால் முதலுடைய தேசங்களின் நாணயமாற்றே எப்பொழுதும் அநுகூலமாகவே இருந்துவந்தது.

3. ஆயினும், சில சமயங்களில், பிறநாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள் குறிப்பிட்ட தவணையில் திரும்பி வாராமையினாலும், இது போன்ற வேறு பிறகாரணங்களினாலும், முதலுடைய தேசங்களின் ஏற்றுமதி குறைந்து, அவற்றின் நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறிற்று. முதலுடைய தேசங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்து விளங்கிய இங்கிலாந்து தேசத்தின் நாணயமாற்றும் சிலசமயங்களில் இங்ஙனமாகப் பிரதிகூலமாக மாறிற்று. அப்பொழுது அது என் செய்யும்?

4. ஒப்புயர்வில்லாச் செல்வம் படைத்து எல்லாத் தேசங்களுக்கும் கடன் கொடுத்துவந்த

இங்கிலாந்து தேசம் வேறு எந்தத் தேசத்திற் கடன்வாங்கக்கூடும்? நேரே கடன்வாங்குதல் அதன் மதிப்புக்குக் குறைவும் ஆகும். ஆதலால் நாணயமாற்றுப் பிரகூலமாக மாறினபொழுது, அதை அநுகூலமாக மாற்றுவதற்காக இங்கிலாந்து ஒரு உபாயத்தைக் கையாடிற்று. அவ்வுபாயம் இங்கிலாந்து பாங்கியின் வட்டி விகிதத்தை உயர்த்தியதாம்.

5. முதற்றரமான உண்டியற்சீட்டுக்களின் ஆதாரத்தின்மேல் இங்கிலாந்து பாங்கி கடன் கொடுக்கும் விகிதமே பாங்கி வட்டி விகிதம் (rate of discount, or Bank Rate) எனப்படும். இவ்விகிதமானது அத்தேசத்திலுள்ள மற்றைப் பாங்கிகளும் (other joint stock banks) உண்டியற் கடைகளும் (discount houses) கடன்கொடுக்கும் விகிதத்தைவிடச் சற்று ஏற்றமாகவே இருந்துவருகிறது. ஆதலால் பணமுடையில்லாத சாதாரண காலங்களில் இங்கிலாந்து பாங்கியிற் பொதுவாக எவரும் கடன்பெறார்.

6. ஆனால், அத்தேசத்தின் பற்று மிகுந்து, பணமுடை எழும்போது உண்டியல் வர்த்தகர்களும் பாங்கர்களும் இங்கிலாந்துபாங்கியிற் கடன் பெற முயலுவர். அவர்கள் அனைவருக்கும் தங்கத்

தைக் கடனாக வழங்கினால், தாள்நாணயத்துக்கு ஆதாரமாக வைக்கப்பட்டிருக்கும் தங்க இருப்புக் குறையுமாதலால் இங்கிலாந்து பாங்கி உடனே தனது வட்டி விகிதத்தை உயர்த்தும். தாள் நாணய வெளியீடும், தேசப்பாங்கிகளின் மிச்சப் பணமும் (balances) இங்கிலாந்து பாங்கியின் அதீனத்தில் இருந்துவருகின்றமையால் அப்பாங்கி தனது வட்டி விகிதத்தை உயர்த்தியவுடன் மற்றெல்லாப் பாங்கிகளும் தத்தம் வட்டிவிகிதங்களையும் உயர்த்தும்.

7. வட்டிவிகிதம் உயர்த்தப்பட்டால் பாங்கிகளிற் பெறப்படும் கடன்களின் அளவு குறைதல் இயல்பு. மேலும், கடன் கொடுப்பதற்குரிய வட்டி விகிதம் உயர்த்தப்பட்டவுடன், பணத்தை டிபாசிட்டுகளாகப் போட்டுவைப்பதற்குரிய வட்டி விகிதமும் உயர்த்தப்படும். ஆதலால், உயர்ந்த வட்டியின் மூலமாக இலாபத்தைப் பெற விரும்புவோர்களுடைய பணமும் பாங்கிகளுக்குச் செல்லும். இங்ஙனமாக, இங்கிலாந்து பாங்கி தனது வட்டி விகிதத்தை உயர்த்தும்பொழுது தேசத்திலுள்ள எல்லாப் பாங்கிகளிலும் கொடுக்கப்படும் கடன்களின் அளவு குறைதலும், டிபாசிட்டுக்கள் மிகுதலும், ஆகிய இவ்விரண்டு காரணங்களினாலும், அதன் இருப்புத்தொகை (balances) மிகுந்து,

முடிவில் அதன் தங்க இருப்பும் அதிகப்படும்.

8. அன்றியும், இங்கிலாந்து பாங்கி தன் வட்டி விகிதத்தை உயர்த்தியவுடன் பிறநாட்டுப் பாங்கிகள் அவ்வுயர்ந்த வட்டி விகிதத்தின் மூலம் இலாபத்தைப் பெறும்பொருட்டுத் தங்களுடைய மிச்சப்பணங்களை அப்பாங்கிக்கு அனுப்பிவைக்கும். பள்ளத்தில் தண்ணீர் பாய்ந்தோடுவதுபோல மற்றைப் பாங்கிகளின் பணம் அதிக வட்டி கொடுக்கிற இங்கிலாந்து பாங்கிக்குச் செல்வது இயல்பு.* 'வட்டி விகிதத்தை ஏழாக உயர்த்தினால் சந்திரனிலிருந்தும் தங்கம் வந்துவிடும்'† என்ற பாங்கர்களின் பழமொழியும் இதுபற்றியே எழுந்தது.

*நாம் முற்கூறியபடி, தங்க ஏற்றுமதி இறக்குமதிகளுக்குத் தடையிடாதிருக்குங் காலத்திலேதான் இத்தகைய நிகழ்ச்சி காணப்படும். ஆனால் இங்கிலாந்துபாங்கி தன் வட்டிவிகிதத்தை உயர்த்தும்பொழுது, பிறநாட்டார், தம் பாங்கிகளிலிருந்து செல்லும் தங்கத்துக்குத் தடையிட்டாலும், அல்லது பிறநாட்டுப் பாங்கிகள் போட்டியினால் தம் வட்டிவிகிதங்களையும் ஏககாலத்தில் (simultaneously) உயர்த்தினாலும், அல்லது இங்கிலாந்து பாங்கி தன் மதிப்பை இழந்துவிட்டாலும், அல்லது இழந்துவிட்டது எனப் பிறநாட்டார் அஞ்சித் தம் தங்கத்தை அங்கு அனுப்புவதற்கு மலைப்பெய்தினாலும், இம்முறை பயன்படாதொழியும் என்பது உணரப்படும்.

† Walter Leaf, *Banking*, P. 34.

9. இங்ஙனமாக, இங்கிலாந்துபாங்கி தன் வட்டிவிகிதத்தை உயர்த்திப் பிறநாடுகளிலுள்ள தங்கத்தைத் தன்பால் இழுத்துக்கொண்டது மிக வியக்கத்தக்க செயல்களுள் ஒன்றாகும். ஆயினும், உற்று நோக்கினால், இம்முறைக்கும் பிறநாடுகள் நேரே கடன் வாங்கும் முறைக்கும் அதிக வேறுபாடில்லை என் விளங்கும். நூற்றுக்கு 4 ஆக இருந்த வட்டி விகிதத்தை 7 ஆக உயர்த்தி, இங்கிலாந்து பாங்கி பிறநாடுகளிலுள்ள பணத்தை டிபாசிட்டுகளாகப் பெறும்போது, அது அப்பணத்துக்கு நூற்றுக்கு 3 விகிதம் அதிக வட்டி கொடுப்பதாகுமன்றோ? ‡ எனவே, தன் நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறியபொழுது, அதை அநுகூலமாக மாற்றுவதற்கு இங்கிலாந்து தேசமும் பிறநாடுகளிலிருந்தே மறைமுகமாகக் கடன்களைப் பெறுகிறதென்பது நன்கு விளங்கும்.

10. ஆயினும், இம்முறையில் அடங்கிய ஒரு நயம் மிகவும் புகழத்தக்கது. பிறநாடுகளிலுள்ள

‡ வட்டி விகிதத்தை உயர்த்துவதும் குறைப்பதும் நாணயமாற்றைக் கிரமப்படுத்துவதற்கு மட்டும் அன்று. அரசாங்கத்தார் குறைந்த வட்டியிற் கடன்பெற வேண்டுமானால் அவர்களுக்கு அநுகூலமாக இங்கிலாந்து பாங்கி சில வேளைகளில் வட்டி விகிதத்தைக் குறைப்பதுண்டு.

பாங்கிகள் தம் பணத்தை இங்கிலாந்துபாங்கிக்கு அனுப்பும் என நாம் கூறும்பொழுது, அவை, எப்பொழுதும் அதைத் தங்கமாகவே அனுப்பும் என்பது கருத்தல்ல. தங்கமாக அனுப்புதலும் சிறுபான்மை உண்டு. ஆனால் பெரும்பாலும் அவை தமது டிபாசிட்டுக்களை இங்கிலாந்து பாங்கிக் கணக்குக்கு மாற்றிக்கொள்வதே (exchange of bank deposits) வழக்கம்; அன்றியும்,அவை ஆங்கிலேயரின் உண்டியற் சீட்டுக்களை விலைக்கு வாங்கலும்உண்டு (purchase of sterling). ஆதலால் இங்கிலாந்து பாங்கி தனது வட்டி விகிதத்தை உயர்த்தி நாணயமாற்றை அநுகூலமாக்கும்போது அது தங்கத்தைப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் அவசியத்தையும் சிரமத்தையும் நீக்குகின்றது.*

*நாம் முன்னரே கூறியபடி, உண்டியற் சீட்டுக்களை வழங்குவதனால் தங்கத்தை அங்கும் இங்கும் அனுப்பும் சிரமமும் அவசியமும் சிறிது குறைகிறது. பாங்கிவட்டி விகிதத்தை உயர்த்துவதனாலும் குறைப்பதனாலும் அது முற்றும் குறைகிறது. இவ்வுண்மைகளைத் தெளிவாக விளக்கிக் காட்டிய ஸர் சார்ல்ஜ் மார்கன்-வெப் என்பவரின் மொழிகள் போற்றத்தக்கன. 'In so far as the bills of exchange balanced, gold was being economised...While the operation of Free Trade brought the residual balancing payments of gold to small dimensions, it was possible by the supplementary action of the Bank Rate to abolish them altogether' (*The Rise and Fall of the Gold Standard,* P. 73.)

11. இனி, இங்கிலாந்துபாங்கி, தன் வட்டி விகிதத்தைக் குறைக்கும்பொழுது என்ன நிகழும் என ஆராய்வோம். வட்டி விகிதம் குறைக்கப்பட்டால் உள் நாட்டிற் கொடுக்கப்படும் கடன்கள் அதிகப்படும்; பாங்கிகளிற் போட்டு வைக்கப்படும் (டிபாசிட்) தொகைகளும் குறையும். இவ்வாற்றால் பாங்கிகளின் தங்க இருப்புக் குறையும். மேலும், இங்கிலாந்து பாங்கியின் குறைந்த வட்டி இலாபமற்றதாக விளங்குவதால் பிறநாட்டார் தமது பணங்களை அதினின்றும் வாங்கி இலாபமுள்ள உயர்ந்த வட்டி கொடுக்கும் பிற பாங்கிகளுக்கு அனுப்புவர். ஆதலால் தங்கம் இங்கிலாந்தை விட்டு வெளிப்போம்.

12. தமது தேசத்தின் தலைமைப் பாங்கியில் தங்க இருப்பு அளவுக்கு மிஞ்சிப் பெருகிய பொழுதே ஆங்கிலேயர் வட்டி விகிதத்தைக் குறைப்பர். எனவே, வட்டி விகிதத்தைக் குறைப்பது அவர்கள் பிறநாடுகளுக்குக் கடன் கொடுப்பதை ஒக்கும் என்பது பெறப்படும்.*

* By the lowering of the Bank Rate, investment at home would have to be made on less favourable terms, and investment overseas would be accordingly stimulated. On the other hand, the raising of the Bank Rate retarded investment overseas and stimulated it at home...This control over investment gave to Britain complete control over the Balance of Trade' (Sir Charles Morgan Webb, *op. cit.* P. 72).

13. இங்ஙனமாகப் பாங்கி வட்டி விகிதத்தை உயர்த்துவதனாலும் குறைப்பதனாலும் ஆங்கிலேயர் தமது நாணயமாற்றில் எழுந்த கேடுகளைப் போக்கியதுமன்றி எல்லாத்தேசங்களிலும் தங்கத்திட்டம் செவ்வனே இயங்கிவருமாறும் செய்தனர்.‡

14. சென்ற நூற்றாண்டு முழுவதும் ஆங்கிலேயர் தமது செல்வப் பெருக்கினால் பிறநாடுகளுக்கெல்லாம் கடன்களை வழங்கி வந்தனராகையாலும், அந்நாடுகளில் உள்ள வர்த்தகர்களின் எல்லா உண்டியற் சீட்டுக்களையும் ஒப்புக்கொள்ளல் (accepting), அவற்றை வட்டிக்கழிவு நீக்கி வாங்கல் (discounting), முதலிய சேவைகளை ஆற்றி வந்தனராகையாலும், இங்கிலாந்து பாங்கி தன் வட்டி விகிதத்தைக் குறைத்தவுடன் அன்றி உயர்த்தியவுடன் பிறநாட்டுப் பாங்கிகளும் தத்தம் வட்டி விகிதங்களையும் குறைத்தும் உயர்த்தியும் வந்தன. இங்ஙனமாக, எல்லா நாடுகளின் வர்த்தகத்தையும், கொடுக்கல் வாங்கலையும் ஆங்கிலேயர் தம் ஆட்சிக்குட்படுத்திவந்தமையினாலேயே இங்கிலாந்துபாங்கி தன் வட்டி விகிதக் கருவியினால் உலக நாணயமாற்றைக் கிரமப்படுத்திவந்தது. இத்தகைய முறையை இங்கிலாந்து பாங்கி இழக்கும்போது நாணயமாற்றிற் குழப்பமும் ஒற்றுமையின்மையும் எழும் என்பதில் ஐயமென்ன?

‡ தங்கத்திட்டம் தானே இயங்கும் ஆற்றல்வாய்ந்தது என்பதும், அத்திட்டத்தின்கீழ் நாணய மாற்று நிலைபெற்றிலங்கும் என்பதும் நாம் மேற்காட்டிய நியாயங்களைச் செவ்வனே கற்றறியாதாருடைய கோட்பாடுகளாம். நாணயமாற்றைக் கிரமப்படுத்தித் தங்கத்திட்டத்தை இயங்கச் செய்தவர்கள் ஆங்கிலேயரே என நாம் நன்குணரவேண்டும்.

9

வெளிநாட்டு உண்டியல்களை வாங்கலும் விற்றலும்.

(Purchase and Sale of Foreign Exchange.)

தமது உயரிய செல்வ நிலையினாலும் சீரிய பாங்கியமைப்பினாலும் ஆங்கிலேயர் இங்கிலாந்து பாங்கியின் வட்டி விகிதக் கருவியைக்கொண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கொடுக்கப்படும் பாங்கிக் கடன்களைக் கடிதிற் குறைத்தும் பெருக்கியும் நாணயமாற்றில் ஏற்பட்ட மாறுதல்களைக் கிரமப்படுத்திவந்ததைக் கண்ட ஜெர்மானியர் தாமும் அவ்வாறே செய்ய நினைத்துத் தமது தலைமைப் பாங்கியாகிய ரீஷ்பாங்கிக்கு (Reich bank) வட்டி விகிதத்தை யுக்தப்படி உயர்த்தவும் குறைக்கவும் அதிகாரங் கொடுத்தனர்.

2. ரீஷ்பாங்கியும் அவ்வாறே செய்யத் தொடங்கிற்று. ஆனால் நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறியகாலத்தில் ரீஷ்பாங்கி தனது வட்டி விகிதத்தை உயர்த்தியும் அதனி

டத்துப் பிறர்க்கு நம்பிக்கை ஏற்படாமையால் வெளிநாடுகளிலிருந்து ஜெர்மனிக்குள் தங்கம் வரவில்லை; ஆனால் அதற்கு மாறாக நாணயமாற்று அநுகூலமாக மாறியகாலத்தில் அப்பாங்கி தனது வட்டி விகிதத்தைச் சற்றுக்குறைத்தவுடன் மிகுதியான தங்கம் ஜெர்மனியினின்றும் வெளிப்போகத் தொடங்கிற்று. ரீஷ்பாங்கியின் தங்க இருப்பு மிகக் குறைந்தபொழுது தங்கத்தை வெளிப்போகவிட்டால் தாள்நாணய வெளியீடு குறைக்கப்பட்டு அதுகாரணமாகப் பணமுடை எழுந்தது. எனவே வட்டிவிகிதத்தைக்குறைப்பது நஷ்டமாகுமாதலால் நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறியபொழுதும் பாங்கி வட்டி விகிதம் குறைந்தும் இருப்புத்தங்கம் வெளிச்செல்லாதும் இருக்கவேண்டும் என ஜெர்மானியர் விரும்பினர். இதற்காக அவர்கள் பின்வரும் உபாயங்களைக் கையாண்டனர்.

3. நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறியபொழுதும் ஜெர்மானியர் ரீஷ்பாங்கியின் வட்டி விகிதத்தைக் குறைவாகவே வைத்துக்கொண்டு உள்நாட்டுச் செலாவணிக்காகப் பாங்கிக் கடன்களைக் கேட்டவர்களுக்குத் தங்கத்தை அளிக்காது தாள்நாணயங்களை வழங்கினர். ஆனால் வெளிநாட்டுக் கடன்களைத் தீர்க்கத் தங்கத்தைக்

கேட்டவர்களுக்கோ தங்கத்தை நூற்றுக்கு ஒன்று விகிதம் அதிக விலையில் (one per cent premium on gold) விற்றனர். மேலும், ரீஷ்பாங்கியில் தாள்நாணயத்தை டிபாசிட் (இட்டுவைப்பு) செய்தவருக்குக் குறைந்த வட்டியையும் தங்கத்தை டிபாசிட் (இட்டுவைப்பு) செய்தவருக்கு நூற்றுக்கு ஒன்று விகிதம் அதிக வட்டியையும் கொடுத்தனர். இவ்வாற்றால் ரீஷ்பாங்கியிலுள்ள தங்க இருப்புச் சற்று உயர்ந்தது; ஆயினும் வெளிநாட்டுக் கடன்களைத் தீர்ப்பதற்கு வேண்டுமளவில் அத்தங்க இருப்பு உயரவில்லை.

4. பாங்கி வட்டி விகிதத்தை உயர்த்தல், தங்கத்தை அதிக விலைக்கு விற்றல், அல்லது அதிகவட்டி கொடுத்து வாங்கல், ஆகிய இம் முறைகளினால் ஜெர்மானியர் பெரும்பயன் பெற்றிலராதலால் அவர்கள் இறுதியில் வேறொரு முறையைக் கையாண்டனர். அதை விளக்க ஒருநாரணமும் தருவோம்.

5. தன் வருவாய் மிகுந்த காலத்தில் ஒருவன் ஒரு வீட்டை அல்லது நிலத்தை அல்லது கடன் பத்திரங்களை (securities) வாங்கிவைப்பானகில் அவற்றின்மூலம் அவன் பெறும் வருமானம் அவனுக்கு இலாபமாகும். அவனுக்கு நஷ்டமேற்பட்டால் அவன் அப்பொருள்களை விற்றுத் தன் கடனையுந் தீர்த்துவிடலாம். அதுபோலவே ஜெர்மானியரும் தம் ஏற்றுமதிப்பெருக்கினால் தம் தேசத்துக்குள் தங்கம் வந்த காலத்தில் பாங்கி வட்டிவிகிதத்தைக் குறைத்துத் தங்கத்தை வெளிப்போக்கிவிடாது, வந்த தங்கத்தைக்கொண்டு வெளிநாட்டு உண்டியல்களை (foreign exchange) வாங்கி அவற்றைத் தம் தலைமைப்பாங்கியில் இருப்பாக (reserve) வைத்தனர். இத்தகைய முதற்றரமான உண்டியல்கள் எப்பொழுதும் தங்கத்துக்கு மாற்றிக்கொள்ளத்தக்கனவாக இருந்தமையால் இறுதியில் தாள்நாணய வெளியீட்டுக்கு இருப்பாக வைக்கவேண்டிய தங்கத்துக்குப் பதிலாகவும் இவ்வுண்டியல்களையே அவர்கள் வைக்கத் தொடங்கினர்.

6. இவ்வாறு செய்ததனால் ஜெர்மானியருக்கு இருவகையில் இலாபங் கிடைத்தது. முதலாவதாக:—வெளிநாட்டாரின் முதற்றரமான உண்டியல்களைத் தங்கத்துக்குப் பதிலாகத் தாள்நாணய வெளியீட்டுக்கு இருப்பாக வைத்ததனால் அவ்வுண்டியல்களுடைய வட்டி இலாபமாயிற்று. இரண்டாவதாக:-பிரதிகூலமான நாணயமாற்று எழுந்தபோது அவர்கள் அவ்வுண்டியல்களை விற்று நாணயமாற்றை அநுகூலமாகத் திருத்தியமைத்துக் கொண்டனராதலால் தங்கத்தைப்பிற

நாடுகளுக்கு அனுப்புஞ் செலவும் அவர்களுக்கு இலாபமாயிற்று. இம்முறை ஒரே கல்லால் இரண்டு பறவைகளை எறிந்து தவீழ்த்துவதைப் போன்றதன்றோ? இம்முறை இலாபந்தருவதாயிருந்தமையால் ஆஸ்திரியா ஹங்கேரி, ருஷியா, ஜப்பான் முதலான தேசங்களின் தலைமைப் பாங்கிகளும் இதனைக் கைக்கொண்டன.

7. நாம் மேற்காட்டிய முறையில் அடங்கிய மூலக்கருத்தாவது:-ஒரு தேசத்திலுள்ள தலைமைப் பாங்கி வெளிநாட்டு உண்டியல்களை வாங்கித் தனது தாள்நாணய வெளியீட்டுக்கு ஆதாரமாக வைக்கும்போது அது அத்தேசத்தின் நாணயச் செலாவணியையும் பாங்கிக் கடன்களையும் (bank credits) அதிகப்படுத்துகின்றது. அங்ஙனமாகவே அத்தலைமைப் பாங்கி அவ்வுண்டியல்களை விற்கும் போது அது அத்தேசத்தின் நாணயச்செலாவணியையும் பாங்கிக் கடன்களையும் குறைக்கின்றது.* எனவே ஒரு தேசத்தின் நாணயமாற்று அநுகூலமாக இருக்கும்போது அத்தேசத்துத் தலைமைப் பாங்கியில் இருப்பாகவைக்கப்படும் உண்டி-

* 'Any increase in the Bank's holding of securities will pro tanto increase the supply of money and any decrease will reduce it' (Withers, *The Meaning of Money*, P. 246).

யல்களின் அளவு அதிகப்படும் எனவும், பிரதிகூலமாக இருக்கும்போது அவ்வுண்டியல்களின் அளவு குறையும் எனவும் விளங்கும். தலைமைப் பாங்கியிலுள்ள தங்கத்தின் அளவைக் கூட்டுவதனாலும் குறைப்பதனாலும் நாணயமாற்றைக் கிரமப்படுத்துவது போலவே உண்டியல்களின் அளவைக் கூட்டுவதனாலும் குறைப்பதனாலும் நாணயமாற்றைக் கிரமப்படுத்திக் கொள்ளலாம் என்ற உண்மையும் இதனால் விளங்குகின்றதன்றோ? ‡

8. இனி, நமது தேசத்தின் நாணயமாற்று எங்ஙனம் நடைபெறுகிறது என்பதுபற்றிச் சிறிது கூறுவோம். நாம் இப்பொழுது வழங்கும் நமது பிரதான நாணயமாகிய வெள்ளி ரூபாயும் (silver token) தாள்நாணயமும் மதிப்புக்குன்றியனவாகையால் இவை உள்நாட்டில் மட்டுமே செலாவணியாகத்தக்கன. வெளிநாட்டுப் பற்று வரவுக்கெல்லாம் நாம் உண்டியற் சீட்டுக்களையும் தங்கத்தையுமே அளிக்கவேண்டும்.

‡ இவ்வுண்டியல்களை வாங்குவதனாலும் விற்பதனாலும் முறையே தங்கத்தை இறக்குமதிசெய்வதும் ஏற்றுமதிசெய்வதும் ஆகிய செலவுகள் நீங்குகின்றமையால் நாணயமாற்று விகிதத்தின் ஏற்றத் தாழ்வுகள் மிகக் குறைவாக இருக்கும் என்பதையும் உற்றுநோக்குக.

9. இதற்கு 1893-முதல் 1931-வரை நமது அரசாங்கத்தார் கைக்கொண்ட முறை பின்வருமாறு. வெளிநாட்டுக் கடன்களைத் தீர்க்கத் தங்கம் வேண்டுமெனக் கேட்டவர்களுக்குமட்டும் (பெரும்பாலும் பாங்கிகளுக்கு) அவர்களிடமிருந்து ரூபாயைப் பெற்றுக்கொண்டு, அதற்குப்பதிலாக, ரூபாய்க்கும் தங்கத்துக்கும் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டிருந்த ஒரு மாற்றுவிகிதப்படி தங்கத்தை அளித்தனர். அங்ஙனமாகவே வெளிநாட்டார் நமக்குச் செலுத்த வேண்டிய கடன்களுக்காகத் தங்கத்தை அளித்தபோது தங்க நாணயங்கள் நம் தேசத்தில் வழங்கப்பெறுமையால், அத்தங்கத்துக்குப் பதிலாக, அரசாங்கத்தார், தங்கத்துக்கும் ரூபாய்க்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்த அதே மாற்றுவிகிதத்தில் நமக்கு ரூபாயை வழங்கினர். இங்ஙனம் ரூபாய்க்கு மாற்றாகத் தங்கமும், தங்கத்துக்கு மாற்றாக ரூபாயும் அளிக்கப்பட்டமையால் இம்முறைக்குத் தங்கமாற்றுத்திட்டம் (gold exchange standard) எனப் பெயர் வழங்கப்பட்டது. *

---

* இத்திட்டம் வந்த வரலாறும் இயங்கும் முறையும் இவ்வாசிரியரால் 'நாணயம்' என்ற நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

10. ஆனால் 1931-ம் வருடத்திலிருந்து இங்கிலாந்து தங்கத்திட்டத்தை நீக்கியதனால் நமது ரூபாய், இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள மாற்றுவிகிதத்தில் (ரூபாய்=18 பென்ஸ்), ஆங்கிலேயரின் தாள்நாணயம் ஆகிய ஸ்டெர்லிங்கிக்கும், பிறநாட்டார் நாணயங்கள் முதலில் ஸ்டெர்லிங்கிக்கும், பின்னர் ரூபாய்க்கும், மாற்றிக் கொடுக்கப்படுகின்றன. ஆதலால் இதை ஸ்டெர்லிங் மாற்றுத்திட்டம் (sterling exchange standard) என்பர்.

11. இந்தியாவின் நாணயமாற்றுப் பெரும்பாலும் அநுகூலமானதாகவே இருந்துவருகிறது. ஆயினும் சில வருடங்களில் விளைபொருள்களின் ஏற்றுமதி குறைவதனால் நாணயமாற்றுப் பிரதிகூலமாதலும் உண்டு. அப்பொழுது நமது கடன்களைத் தீர்க்க நாம் அரசாங்கத்தாரிடம் ரூபாயைக் கொடுத்து, அதற்கு மாற்றாகத் தங்கத்தைப் பெற்று, அத்தங்கத்தைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். இவ்வாறு ஏற்றுமதி செய்வதில் அடங்கும் சிரமத்தையும் செலவையும் நாம் நீக்கவேண்டுமானால் தங்கத்தை அல்லது உண்டியல்களை வெளிநாட்டுப் பாங்கிகளிலேயே, உதாரணமாக இங்கிலாந்து பாங்கியிலேயே, இருப்பாக வைத்துக்கொள்ளலாம். (இம்முறை

ஜெர்மானியர் தமது தலைமைப் பாங்கியில் வெளிநாட்டு உண்டியல்களை வாங்கி இருப்பாக வைத்துக்கொள்ளும் உபாயத்தைப் போன்றதே.) நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறியவுடன், நாம் அவ்வாறு இருப்பாக வைத்துள்ள தங்கத்தை அல்லது உண்டியல்களை விற்று, அல்லது அவற்றை மற்றைப் பாங்கிகளின் கணக்குக்கு மாற்றி, நம் நாணயமாற்றை அநுகூலமாகத் திருத்தியமைத்துக் கொள்ளலாம்.

12. வெளிநாட்டுப் பாங்கிகளில் தங்கத்தை இருப்பாக வைப்பதினால் வட்டிகிடையாது. ஆனால் உண்டியற் சீட்டுகளை இருப்பாக வைப்பதனால் வட்டி கிடைக்கும். ஆதலால் தங்கத்துக்குப் பதிலாக ஒரு சிறு பாகமேனும் உண்டியற் சீட்டுக்களாக வைக்கப்படலாம். ஆதலாற்றான் இங்கிலாந்து பாங்கியில் நமது கணக்கில் ஸ்டெர்லிங் உண்டியல்களும் இருப்பாக வைக்கப்பட்டுள்ளன. நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறும்பொழுது அவ்வுண்டியல்கள் விற்கப்படுகின்றன. ஜெர்மானியர் தமது தலைமைப் பாங்கியில் வெளிநாட்டு உண்டியல்களை இருப்பாக வைப்பதற்கும், இந்திய அரசாங்கத்தார் நமது கணக்கில் இங்கிலாந்து பாங்கியில் ஸ்டெர்லிங் உண்டியல்களை இருப்பாக வைப்பதற்கும் அதிக வேறுபாடில்லை.

இம்முறையைத் தழுவி, ஐரோப்பிய யுத்தத்திற்குப்பின், அநேக தேசங்கள், தத்தம் தலைமைப் பாங்கிகளிலும் இங்கிலாந்து பாங்கியிலும் வெளிநாட்டு உண்டியல்களை இருப்பாக வைத்துவந்தன.

13. தங்கத்துக்குப் பதிலாகப் பிறநாட்டு உண்டியல்களை இருப்பாக வைப்பது ஒரு சிறந்த முறை. இம்முறையினால் தங்கத்தை அங்குமிங்கும் அனுப்பும் சிரமும் செலவும் நீங்குகின்றன. மேலும், தாள்நாணய வெளியீட்டுக்கு ஆதாரமாக வைக்கவேண்டிய தங்கத்துக்குப் பதிலாக இவ்வுண்டியல்கள் இருப்பாக வைக்கப்பட்டால் தங்க உற்பத்தி குறைவுபட்டாலும் நாணயச் செலாவணி குறைவுபடாது. இதனாற்றான் எல்லாத் தலைமைப்பாங்கிகளும் இவ்வாறு செய்தலும் அவசியம் என 1921-ம் வருடத்தில் ஜினிவாவில் கூடிய நாணய மகாநாட்டிலும் தீர்மானிக்கப்பட்டது.

14. எல்லாத் தலைமைப் பாங்கிகளும் ஒத்துழைத்தால் இத்தகைய திட்டம் மிகவும் அநுகூலமானதே. ஆனால் இதை இங்ஙனம் கைகூடிவரச் செய்வதில் மிகப் பல இடர்ப்பாடுகள் உள்ளன. அவற்றுள் ஒன்றைமட்டும் இங்குக் காட்டுவோம். 1914-ல் யுத்தம் ஆரம்பித்ததும் ஆங்கிலேயர் தங்கத்திட்டத்தை நீக்கினர். அப்பொழுது

ஸ்டெர்லிங் உண்டியல்களை இருப்பாக வைத்திருந்த தலைமைப் பாங்கிகளிற் சில அவ்வுண்டியல்களை விற்றன. அவ்வாறு விற்றதில் ஸ்டெர்லிங் கணக்குப்படி தங்கவிலை உயர்ந்திருந்ததனால் 3 பவுண்டு ஸ்டெர்லிங் உண்டியல்களுக்கு 2 பவுண்டு தங்கமே கிடைத்தது. இதனால் நூற்றுக்கு $33\frac{1}{3}$ விகிதம் ஸ்டெர்லிங் உண்டியல்களை வைத்திருந்த பாங்கிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. 1931-ம் வருடத்திலும் இங்கிலாந்து தங்கத்திட்டத்தை நீக்கியபொழுதும் இவ்வாறே நஷ்டம் ஏற்பட்டது. எனவே, யுத்தம் அல்லது வேறு குழப்பம் எழும் காலத்தில் வெளிநாட்டு உண்டியல்களை இருப்பாக வைத்திருப்பது பெரும் நஷ்டமாக முடியும். உண்டியல்களைக்காட்டிலும் தங்கம் நிலையான விலைமதிப்பையுடையதாக விளங்குவதனால் எல்லாத் தேசத்தவர்களும் தங்கத்தையே இருப்பாக வைக்க முயலுகிறார்கள்.

10

யுத்தத்திற்குமுன்னுள்ள விலைநிலை

(The Pre-war Price Level)

‘தங்கத்திட்டத்தின்கீழ் நாணயமாற்று’ என்னும் தலைப்பிடப்பட்ட இவ்விரண்டாம் பகுதியின் முதற் கட்டுரையில் (பக்கங்கள் 53-58) தங்கத்திட்டம் என்னும் பெயருடன் யுத்தத்திற்குமுன் வழங்கப்பெற்ற நாணயத்திட்டம் இத்தன்மையது எனவும், அத்திட்டம் செவ்வனே இயங்கிவந்ததற்குக் காரணங்கள் இவையிவை (வரியற்ற வர்த்தகமும் தடையற்ற கொடுக்கல் வாங்கலும், எல்லாத் தேயத்தினரும் தம்முள் ஒருவர் ஒருவரிடத்து வைத்த நம்பிக்கையும்) எனவும் எடுத்துக்காட்டினோம்.

2. பின்னர் அதற்குமேல் வந்த கட்டுரைகளில் (7, 8, 9) அத்திட்டம் அங்ஙனமாக இயங்கி வந்தமையால் நாணயமாற்று விகிதங்கள் தங்க ஏற்றுமதி இறக்குமதி எல்லைகளுக்கு உட்பட்டு நின்றன எனவும்; நாணயமாற்றுப் பிரதிகூல

மாக மாறியகாலத்து, முதலில்லாத தேசங்கள் முதலுடைய தேசங்களிலிருந்து தங்கத்தை அல்லது இயந்திரக் கருவிகளைக் கடனாகப் பெற்று, அவற்றின் உதவியால் தம் விளைபொருள்களை மிருவித்து, ஏற்றுமதியைப் பெருக்கி, நாணயமாற்றை அநுகூலமாகத் திருத்தியமைத்துக்கொண்டன எனவும்; (நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறிய பொழுது) முதலுடைய தேசங்கள் தம் பாங்கி வட்டியை உயர்த்திப் பிறநாடுகளிலிருந்து தங்கத்தைத் தம்தேசத்துள் வரும்படிசெய்தும், அன்றித் தம் தலைமைப்பாங்கியில் இருப்பாக வைக்கப் பெற்றிருந்த வெளிநாட்டு உண்டியல்களை விற்றும் தம் நாணயமாற்றைக் கிரமப்படுத்திவந்தன எனவும் விளக்கிக் காட்டலாயிற்று.

3. சுமார் ஒரு நூற்றாண்டாக, நாம் மேற்கூறியவாறு, நாணயமாற்று எவ்வித இடையூறுமின்றி நடைபெற்றுவந்தது. இதற்குக் காரணங்கள் உலகநாணயத்திட்டங்களிலும் கொடுக்கல் வாங்கல்களிலும் வர்த்தகத்திலும் ஏற்பட்டிருந்த ஒற்றுமையும் அமைதியுமேயாம். இவற்றின் பயனாக உலக வர்த்தகத்தில் இணைந்திருந்த எல்லாப் பொருள்களும் எல்லாத் தேசங்களிலும் ஒரே விலைமதிப்புடையனவாக விளங்கின. உலக வர்த்தகப் பொருள்கள் எல்லாத் தேசங்களிலும் சம விலைமதிப்புடையனவாக இருந்தமையே நாணயமாற்று நிலைபெற்று விளங்கியதற்குக் காரணம் எனவும் கூறலாம். இக்கூற்றில் அடங்கிய கருத்துக்கள் பின் வருவனவற்றால் விளங்கும்.

4. வர்த்தகப் பொருள்கள் மூன்று வகைப்படும். அவையாவன:– (1) நிலம், தோட்டம், வீடு, முதலியனவற்றைப் போல அவற்றவற்றின் நிலையிடத்திலேயே பெரும்பான்மையும், அவ்வத் தேயத்தின்கண்மட்டுமே சிறுபான்மையும் வாங்கவும் விற்கவும்படுகின்ற சுதேச வர்த்தகப்பொருள்கள் (national goods) அல்லது உள்நாட்டு வர்த்தகப் பொருள்கள். (2) கம்பளி ஆடையைப்போலக் குளிர்மிகுந்த தேசங்களில்மட்டுமே வாங்கவும் விற்கவும்படுகின்ற ஒருசில தேச வர்த்தகப் பொருள்கள் (semi-international goods). (3) கோதுமை, பருத்தி, உலோகங்கள், தோல் முதலியனவற்றைப்போல எல்லாத் தேசங்களிலும் வாங்கவும் விற்கவும்படுகின்ற உலகவர்த்தகப் பொருள்கள் (international goods).

5. உள்நாட்டு வர்த்தகப் பொருள்களின் விலையில் ஒரு தேசத்துக்கும் மறுதேசத்துக்கும் அதிக வேறுபாடுண்டு. இதன் காரணங்களை நாம் இங்கு விரிவாய் விளக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் உலகவர்த்தகப் பொருள்கள்

எல்லாத் தேசங்களிலும் ஒரே விலைமதிப்புடையன வாக விளங்கிய காரணங்களை நாம் நன்கறிய வேண்டும்.

6. உலக வர்த்தகப்பொருள்களை உற்பத்தி செய்வதிலும், வாங்குவதிலும், விற்பதிலும் எல்லாத் தேசங்களுக்கும் எப்பொழுதும் பெரும் போட்டி இருந்துவருமாதலால் இப்பொருள்களின் விலை [ஒரு தேசத்திலிருந்து மறுதேசத்துக்குக் கொண்டுபோகும் செலவிற் காணப்படும் வேறுபாடு நீங்கலாக] எல்லாத் தேசங்களிலும் ஏறக்குறையச் சமமாக இருத்தல் இயல்பு.* எல்லாத் தேசங்களிலும் போட்டி காரணமாக இப்பொருள்களின் விலை இவ்வாறு சமநிலையை அடையக்கூடுமாயினும், நாம் முன்னர்க் கூறியபடி, சென்ற நூற்றாண்டு முழுவதும் நாணயத்திட்டங்களிலும், கொடுக்கல் வாங்கலிலும், வர்த்தகத்திலும் ஏற்பட்டிருந்த அமைதியும் ஒற்றுமையுமே உலக வர்த்தகப்பொருள்களின் விலை சமநிலையினின்றமைக்கு முக்கிய காரணங்களாம். ஆதலின் அவற்றைக் கீழே விளக்கிக்காட்டுவோம்.

*இதற்கு ஒரு சிறு உதாரணங் காட்டலாம். அமெரிக்காவில் பருத்திவிலை உயர்ந்தால் அச்செய்தி கிடைத்தவுடனே இந்தியாவிலும் பருத்திவிலை உயருகிறது.

7. சென்ற நூற்றாண்டு முழுவதும் ஏறக்குறைய எல்லாத்தேசங்களிலும் தங்கநாணயத்திட்டம் வழங்கப்பெற்றது. அதாவது தேச நாணயத்துக்கும் குறிப்பிட்ட நிறையும் மாற்றும் அடங்கிய தங்கத்துக்கும் எப்பொழுதும் மாறாத விலைமதிப்பு அறுதியிடப்பட்டிருந்தது. எனவே தங்கத்தின் விலை எப்பொழுதும் ஒரே நிலையாய் நின்றது. ஒவ்வொரு தேசத்திலும் செலாவணியான உலோக நாணயங்கள் தங்கத்தாலானவையாயிருந்தமையாலும், அவ்வத்தேசத்தில் வழங்கப்பெற்ற தாள்நாணயங்கள் அவ்வவற்றின் தலைமைப்பாங்கியில் இருப்பாக வைக்கப்பெற்றிருந்த தங்கத்தின் அளவைச் சார்ந்திருந்தமையாலும், ஒரு தேசத்தில் நாணயத்திற்கென்று உபயோகப்படுத்தக்கூடிய தங்கத்தின் அளவையொட்டியே அத்தேசத்தின் நாணயச் செலாவணி இருந்துவந்தது. தங்கம் மிகுந்தாலன்றி நாணயச் செலாவணி மிகாதும், தங்கம் குறைந்தாலன்றி நாணயச் செலாவணி குறையாதும் இருந்து வந்தது.

8. பொருள் உற்பத்தி நிலையாக இருக்கும் பொழுது நாணயச்செலாவணி மிகுந்தால் [பொதுவிதியாகக் கூறினால்] விலைகள் உயருவதும் அது குறைந்தால் விலைகள் குறைவதும் இயல்பு.

எனவே ஒரு தேச வர்த்தகப்பொருள்களின் விலையில் அடிக்கடி ஏற்றத்தாழ்வுகள் நிகழா திருக்கவேண்டுமானால் அந்தேசத்தின் பொருள் வளர்ச்சிக்கு ஏற்றவாறு நாணயச் செலாவணி மிகுந்தும் தாழ்ச்சிக்கேற்றவாறு அது குறைந்தும் வரவேண்டும். இவ்விதிக்கிணங்கத் தங்கத் திட்டத்தைக் கைக்கொண்டிருந்த காலத்தில், அதிர்ஷ்டவசத்தினால், (55-ம் பக்கம் பார்க்க.) பொருள் உற்பத்தியின் மிகுதிக்குத் தக்கபடி தங்கவுற்பத்தியும் மிகுந்துவந்தது. அதனால் உலக வர்த்தகப் பொருள்களின் விலைநிலையில் சமநிலை ஏற்பட்டிருந்தது.

9. தங்கத்திட்டத்தின் கீழ்ப் பொருள் உற்பத்தியின் மிகுதிக்கேற்ப நாணயச் செலாவணி மிகுந்துவந்தமையால் உலக வர்த்தகப் பொருள்களின் விலைநிலை எல்லாத் தேசங்களிலும் சமமாக இருந்ததெனக் கூறினோம். ஆயினும், நாம் முன்னரே விளக்கியுள்ளபடி, தங்கத் திட்டம் இவ்வாறு இயங்குவதற்குக் காரணமாக உதவிபுரிந்தவை தடையற்ற கொடுக்கல் வாங்கலும் வரித்தடையற்ற வர்த்தகமும் ஆம். தங்க நாணயச் செலாவணியும் தாள்நாணயச் செலாவணியும் (தேசத்துக்குள் மிகுதியான தங்கம் உட்புகுந்ததன் பயனாக) மிகுந்திருந்த தேசம் கடனை

வழங்கவும், அவை குறைந்திருந்த தேசங்கள் கடனைப் பெறவும் மறுக்குமானால் உலக வர்த்தகப் பொருள்களின் விலைநிலையில் தேசத்துக்குத் தேசம் வேறுபாடு தோன்றும் அன்றோ? மேலும், கானடாவிலிருந்து ஏற்றுமதியாக்கப் பட்ட கோதுமைக்கு ஆங்கிலேயரும், இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியாக்கப்பட்ட உருக்குக்குக் கானடியரும் வரிகளை விதித்தால் இப்பொருள்களின் விலைநிலையில் இருதேசங்களிலும் வேற்றுமை காணப்படும். இவ்வாறே எல்லாத் தேசங்களிலும் ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டால் உலக வர்த்தகப் பொருள்களின் விலைநிலை சமமாக இராதென்பது தேற்றம். விலைநிலை வேறுபட்டால், விலையேறியிருக்குந் தேசங்களின் ஏற்றுமதி குறையும்; இறக்குமதி மிகும்; நாணயமாற்றுப் பிரதிகூலமாக மாறும். விலை குறைந்திருக்குந் தேசங்களில் மேற்காட்டியவற்றிற்கு மாறான நிகழ்ச்சிகள் காணப்படும். இதனாலும் நாணயமாற்று விகிதங்கள் அடிக்கடி மாறுபடும்.

10. மாற்று விகிதங்கள் அடிக்கடி மாறுபட்டுத் தங்கஏற்றுமதிஇறக்குமதிஎல்லைகளைக் கடந்து போகும்பொழுது விலைநிலையில் மேன்மேலும் மாறுதல்கள் எழும். உதாரணமாக, ரூபாய்-பவுண்டு மாற்றுவிகிதம் 16 பென்ஸ் ஆக இருக்

கும்பொழுது ஒரு சாவரன் மதிப்புள்ள ஒரு ஆங்கிலப் பொருளின் விலை 15 ரூபாயாக இருக்கும்; ஆனால் அவ்விகிதம் 24-பெ. ஆக உயரும்பொழுது அப்பொருளின் விலை 10 ரூபாயாகக் குறையும்! இவ்வுதாரணத்திலிருந்து, இருதேசங்களிலும், அவ்வப் பொருள்களைச் செய்யும் செலவுகளில் வேறுபாடுகள் எழாமலிருக்க, மாற்று விகிதத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளால் விலைநிலை மாறுபடுகின்றது என்ற உண்மை தெளிவாகிறது.

11. நாம் இதுகாறும் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டியவற்றால் நாணயத் திட்டங்களிலும், கொடுக்கல் வாங்கல்களிலும், ஏற்றுமதி இறக்குமதி வரிகளை விதிப்பதிலும் ஏற்படும் குழப்பங்கள் நாணயமாற்றையும் அதன்மூலம் சமமான விலைநிலையையும் ஒழிக்கும் என விளங்கும். ஆதலால் உலக வர்த்தகப் பொருள்களின் விலைநிலை எல்லாத் தேசங்களிலும் சமமாக இல்லாவிடின் நாணயமாற்று விகிதங்களை நிலைபெறச் செய்ய இயலாதாம்.

மூன்றாம் பாகம்

நிலையற்ற நாணயமாற்று
(Free Exchanges)

'A regulation of exchanges is not something which is established: it establishes itself; otherwise it is incapable of establishment.'

(M. Witte, Russian Minister of Finance)

‘நாணயமாற்று நிலைபெறுத்தப்படுவதொன்றன்று ;
அஃது தானே நிலைபெறும்; அன்றேல்
அது நிலைபெறாதொழியும்.’

ருஷிய அரசிறை அமைச்சர்.

11

யுத்தகாலத்திலும் அதற்குப்பின்னும் உள்ள நாணயமாற்று.

(Exchanges During and After the War.)

இங்கிலாந்து தங்கத்திட்டத்தைக் கைக்கொண்ட காலத்திலிருந்து ஐரோப்பிய மகா யுத்தம் தொடங்கிய காலம்வரை, எல்லாத் தேசங்களின் தங்கநாணயங்களும் தாள்நாணயங்களும் குறிப்பிட்ட மாறாத விலைமதிப்பை உடையனவாக விளங்கினமையாலும், அவற்றை ஏற்றுமதி இறக்குமதி செய்வதில் தடையின்மையாலும், தடையற்ற கொடுக்கல் வாங்கலும் வரியற்ற வர்த்தகமும் நிலவிவந்ததன் காரணமாக உலக வர்த்தகப்பொருள்கள் எல்லாத் தேசங்களிலும் சம விலைமதிப்புடையனவாக இருந்தமையாலும்; நாண்யமாற்று விகிதங்கள் நிலைபெற்றுநின்றன என இரண்டாம் பாகத்தில் விரித்துரைத்தோம். ஆனால், ஐரோப்பிய மகா யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து இற்றைவரைக்கும் நாணயமாற்று

X:57
N35

நிலையற்றுக்கிடக்கின்றது. இதன் காரணங்களையும் இக்குழப்பத்தை நீக்கும் வழிகளையும் இம் மூன்றாம் பாகத்தில் எடுத்துக்காட்டுவோம்.

2. ஐரோப்பிய மகா யுத்தம் தொடங்கியவுடன், உணவுப்பொருள்களையும் போர்க்கருவிகளையும் கொள்வதற்குத் தங்கம் வேண்டப்பட்டமையால், யுத்தத்திற் கலந்துகொண்ட எல்லாத் தேசங்களிலும், குடிகள் தங்கநாணயங்களை வழங்கக்கூடாது எனவும், அவர்கள் அவற்றைத் தலைமைப் பாங்கியிற் கொடுத்துவிட்டு அவற்றிற்குப் பிரதியாகத் தாள்நாணயங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும், தங்கத்தைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது எனவும் சட்டம் இயற்றப்பட்டது.

3. ஆனால் யுத்தத்திற் கலந்துகொள்ளாது நடுநின்ற ஸ்வீடன், நார்வே, டென்மார்க்கு, ஸ்விட்ஜர்லாந்து தேசங்களில் தங்கம் உட்புகாதபடி தங்கஇறக்குமதிக்குத் தடையிடப்பட்டது. ஏனெனில், போர்க்கருவிகள், ஆடைகள், உணவுப் பொருள்கள் ஆகிய இவற்றைப் பெறுவதற்காக இத்தேசங்களுக்குப் பிறதேசங்களிலிருந்து தங்கம் மிகுதியான அளவில் அனுப்பப்பட்டது. அதனால் எல்லாப் பொருள்களின் விலைகளும் உயர்ந்து ஏழைமக்கள் பெரிதும் துன்புறலாயினர்.

இக்குறையைப் போக்குவதற்கே இத்தேசங்களில் குடிகள் தங்கத்தை இறக்குமதிசெய்யவும், தங்க நாணயங்களைப் பதிப்பிக்கவும், தலைமைப் பாங்கிகள் தம் தாள்நாணய வெளியீட்டுக்குத் தங்கத்தை இருப்பாக வைக்கவும் ஒண்ணாதெனச் சட்டமியற்றப்பட்டது.

4. இங்ஙனமாக யுத்தத்திற் கலந்திருந்த தேசங்களிலும் நடுநிலைத் தேசங்களிலும் யுத்தத்திற்குமுன் வழங்கப்பெற்ற தங்கத்திட்டம் நீக்கப்பட்டது. இக்காரணத்தாற்றான் நாணயமாற்று நிலைபெயர்ந்தது. அது எவ்வாறு நிலைபெயர்ந்தது, அதனால் விளைந்த கேடுகள் எவை என இனி விளக்கிக்காட்டுவாம்.

76987

5. வெளிநாட்டுக் கடன்களைத் தீர்க்கத் தங்கத்தை ஏற்றுமதி செய்வதற்குத் தடையிடாதிருந்தாற்றான் உண்டியல்களின் விலை தங்க ஏற்றுமதி எல்லைக்குட்பட்டு நிற்கும் என முன்ன
கூறினோம். (பக்கங்கள் 59-60). தனை
டால் உண்டியல்களின் விலை உயர்ந
போம். ஆனால் அவ்வாறு உ
'உண்டியல்களின் விலை மே
அவற்றை மேலும் அதிக வி
எனப் பாங்கர்களும் உண்டி

எண்ணி, அவற்றை விற்க மறுத்தால் (இதைச் சட்டாவர்த்தகம் = speculation என்பர்.) அவற்றின் விலை மேன்மேலும் உயருதல் இயல்பு. இக்காரணங்களினுல் யுத்தத்திற் கலந்துகொண்ட எல்லாத் தேசங்களின் நாணயமாற்றிலும் அடிக்கடி பெரும் மாறுதல்கள் எழுந்தன.*

6. தங்கம் மிகுயான அளவில் தேசத்துக்குட் புகுந்தால் தங்கநாணயங்கள் பெருகி, அது காரணமாக அவற்றின் மாற்று மதிப்புக் குறைந்து, நாணயமாற்று நிலைபெயரும் என அஞ்சி, நடுநிலைத் தேசங்கள் தங்க இறக்குமதியைத் தடுத்தன. ஆயினும், இத்தேசங்களின் பொருள் உற்பத்தியின் மிகையைத் தடுக்க ஒரு முறையும் கையாளப்படவில்லை. எனவே,

* இதை வேறுவகையாகக் கூறினுல் தங்க ஏற்றுமதிக்குத் தடையிடப்பட்ட தேச நாணயங்களின் மாற்று மதிப்புக் குறைந்தது என்னலாம். உதாரணமாக, 1914 நவம்பரில் [ஜெர்]மானியரின் மார்க்கு நாணயம், நியூயார்க்கில் நூற்றுக்குப் [பத்]தும் மதிப்பிழந்தது (The mark lost or fell by 10% [in New Y]ork); அதாவது ஜெர்மானியர் நியூயார்க்குக்கு [அனு]ப்ப ஒரு 100 மார்க்கு உண்டியலுக்கு 110 மார்க் [கொடு]க்கவேண்டியதாயிற்று. 1915-ல் ருஷியா[வின் ... 10]0-க்கு 18-முதல் 33-விகிதம் வரையும், [...]ம் 8-முதல் 30-விகிதம் வரையும் மதிப்[பிழந்தன. (M]odern Monetary Systems, P. 49.)

போர்க்கருவிகள், உணவுப்பொருள்கள் முதலியன மிகுதியான அளவில் உற்பத்தியாக்கப்பட்டபொழுது அவற்றின் உற்பத்தியின் மிகுதிக்குத் தக்கவாறு நாணயச் செலாவணி மிகாமையால் இத்தேசநாணயங்களின் மதிப்பு உயர்ந்து, மாற்று விகிதங்களும் உயர்ந்தன. உதாரணமாக, யுத்தத்திற்குமுன், இங்கிலாந்து தேசத்துப் பவுண்டு-ஸ்டெர்லிங் நாணயத்துக்கும் ஸ்வீடன் தேசத்துக் குரோன் நாணயத்துக்கும் மாற்று விகிதம் 1 : 18·16 சம்பந்தத்திலிருந்தது. ஆனுல் 1915-ஆறு மார்ச்சு மாதத்தில் அவ்விகிதம் 1 : 19·43 ஆக உயர்ந்தது. அதன்பின்னர், இந்நடுநிலைத் தேசங்களிலும், தாள் நாணயம் அதிகமான அளவில் வெளியிடப்படவே* இவற்றின் நாணயங்களும் யுத்தத்திற் கலந்திருந்த தேசங்களின் நாணயங்களைப்போலவே மதிப்பிழந்தன. எல்லாத் தேச நாணயங்களின் மாற்றுவிகிதங்களும் அலைவாய்த் துரும்புபோல ஒருநிலையிலவாயின.

*விரிவஞ்சி, இதன் காரணங்களை, இங்கு விளக்காது விடுகிறோம். கீழ்க்காட்டிய பகுதியிலிருந்து இக்காரணங்களிற் சிலவற்றை ஊகித்தறிந்து கொள்க. 'The increasingly insistent demands for credit on the part of the belligerent countries, together with the abnormally high state expenditure and a banking policy which maintained far too low rates of interest, necessitated the creation of artificial purchasing power to an ever increased degree' (Cassel, *Money After 1914*, P. 97.).

7. யுத்தத்திற் கலந்துகொண்டிருந்த தேசங்களின் நாணயமாற்று விகிதங்கள் ஒருநிலைபெறாமைக்கு வேறொரு காரணம் அவை தாள்நாணயங்களை அளவுக்கு மிஞ்சி வெளியிட்டமையேயாம். தாள் நாணயத்தை அச்சிட்டு, அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், போர்ச் சேவகர்களுக்கும், வேலை ஒப்பந்தக்காரருக்கும், (contractors) சம்பளமாகக் கொடுத்து விடுவது எவ்வளவு எளிது! ஆனால் அதனால் விளையுங் கேடுகள் எவ்வளவு அதிகம்! தாள்நாணயச் செலாவணி பெருகவே விலைகள் உயர்ந்தன; பின்னர் இத்தாள் நாணயங்கள் பாங்கிகளில் டிபாசிட்டுகளாகப் புகுந்தவுடன் (இட்டு வைக்கப்பட்டவுடன்) பாங்கிக் கடன்களும் (bank credits) அதிகப்படுத்தப்பட்டன. அதனால் விலைகள் மேன்மேலும் உயர்ந்தன! தாள் நாணயவெளியீடு வரம்புக்குட்படுத்தப் பட்டிருந்த அமெரிக்காவைத் தவிர மற்றெல்லாத் தேசங்களிலும் விலைகள் உயர்வினால் ஏற்றுமதி குறைந்து, வெளிநாட்டுக் கடன்கள் பெருகி, அவ்வவற்றின் நாணயமாற்று மதிப்பும் குறைந்தது. பிரான்சிலும், இத்தாலியிலும், ஆஸ்திரியா-ஹங்கேரியிலும், ஜெர்மனியிலும், ருஷியாவிலும் [விசேடமாக இறுதியிற் காட்டப்பட்ட மூன்று தேசங்களிலும்] உள்ள நாணயங்களின் மாற்றுமதிப்பு பூச்சியமாயிற்று. யுத்தத்திற்குமுன் சுமார் ஐந்து

மார்க்கு நாணயங்கள் ஒரு டாலருக்குச் சமமாக மாற்றப்பட்டன; 1924-ம் வருடத்திலோ 4215 கோடி மார்க்கு நாணயங்கள் ஒரு டாலருக்குச் சமமாக மாற்றப்பட்டன!

8. இங்ஙனமாக, யுத்த காலத்திலும் அதற்குப் பிற்பட்டகாலத்திலும் (1925-ம் வருடம்வரை) எல்லாத் தேசங்களிலும் நாணயங்கள் மதிப்பிழந்து, மாற்றுவிகிதங்கள் மேலும் மேலுங் குறைந்துகொண்டுபோனமையால் வெளிநாட்டு வர்த்தகமும் உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சியும் பெரிதும் இடர்ப்பட்டன.*

*நாணயமாற்று ஒருநிலையற்றிருக்குங்காலத்து எழும் இடர்ப்பாடுகள் இவையிவை என இந்நூலில் 65-ம் பக்கத்திற் காட்டப்பட்டுள்ளன.

12

மாற்றுவிகிதத்தை இணைத்தல்.

(The Pegging of Exchanges.)

1914-ம் ஆண்டுமுதல் 1924-ம் ஆண்டுவரை யுத்தத்திற் கலந்திருந்த தேசங்களிலும் கலவாதிருந்த தேசங்களிலும் நாணயங்கள்மதிப்பிழந்து, மாற்றுவிகிதங்கள் நிலைகெட்டு, உலகவர்த்தகம் இடர்ப்பட்டது என முன் கட்டுரையில் விரித்துக் கூறினேம். ஆனால் அக்காலமுழுவதிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நாணயமாகிய டாலர்மட்டும் அதிலடங்கிய தங்க மதிப்புப்படி உள்நாட்டிற் செலாவணியாகி வந்ததுமன்றி, வெளிநாடுகளுக்கும் தடையின்றி ஏற்றுமதி செய்யப்பட்டுவந்ததால் அதன் மதிப்பும் தங்க மதிப்பும் சமமாக நிலைபெற்றிருந்தன; [இதை வேறு வகையாகக் கூறினால் அமெரிக்காமட்டும் யுத்தத்திற்குமுன் வழங்கப்பெற்ற தங்கத்திட்டத்தைக் கைக்கொண்டிருந்தது] என்னலாம். ஆதலால்

டாலர் நாணயத்தின் மாற்றுவிகிதம்மட்டும் ஸ்திரமாக நிலைபெற்றிருந்தது. *

2. ஆனால் மாற்றுவிகிதங்கள் அடிக்கடி மாறிக்கொண்டுவந்த நாணயங்களையுடைய தேசங்கள் தத்தம் வர்த்தகத்துக்கு நேர்ந்த கேடுகளை ஒழிக்கப் பலவாறு முயன்றன. அம்முயற்சிகளுள் இங்கிலாந்தும் அதனைச்சேர்ந்த நேசதேசங்களும் கையாண்ட முறை மிகவும் புகழத்தக்கது. அஃது நாணயமாற்றுச் சரித்திரத்தில் ஒரு எல்லைக் கல்லைப்போன்றது.

3. இங்கிலாந்தும் அதனைச் சேர்ந்த நேசதேசங்களும் நடுநிலைத் தேசங்களினின்று போர்க்கருவிகளையும் உணவுப்பொருள்களையும் மிகுதியான அளவில் இறக்குமதி செய்யவேண்டியதாயிற்று. இவ்விறக்குமதிகளால் ஏற்பட்ட கடன்களைத்தீர்க்க அவை முதன்முதலாகத் தங்கத்தை ஏற்றுமதி செய்தன. அவ்வாறு செய்தும் கடன்கள் குறையவில்லை. ஆதலால் அனுப்பவேண்டிய உண்டியல்களின் விலை மேலும் மேலும் உயர்ந்து சென்றது. [நாணயமாற்று மதிப்புக் குறைந்தது

* டாலர் மாற்றுவிகிதம் (dollar exchange) ஸ்திரமாக நிலைபெற்றதற்கு அமெரிக்காவின் இறக்குமதியைக்காட்டிலும் ஏற்றுமதி மிகுந்திருந்ததுபோன்ற வேறு பலகாரணங்களும் உண்டு.

எனினும் பொருந்தும்]. இத்தொல்லையைத் நீக்குமாறு நேசதேசங்கள் அர்ஜென்டைன், ஸ்பெயின் முதலிய தேசங்களில் பற்று வரவு செய்யத் தொடங்கின. அன்றியும், தம்மிடத்திலுள்ள பிறநாட்டுக் கடன்பத்திரங்களையும் விற்றன. இவ்வாறெல்லாம் முயன்றபின்னரும் இறக்குமதிகள் மிகுந்துகொண்டேபோனமையால் மாற்று மதிப்பு மேன்மேலும் குறைந்தது; வர்த்தகமும் பெரிதும் இடர்ப்பட்டது. ஆதலால் ஆங்கிலேயர் இறுதியில் தமது பவுண்டு நாணயத்தை டாலர் நாணயத்துடன் ஒரு நிலையான விகிதத்தில் இணைத்துவிடுவதெனத் தீர்மானித்தனர். இம்முறைக்கு மாற்றுவிகிதத்தை இணைத்தல் (pegging of exchanges) என்று பெயர் வழங்கினர்.

4. இறக்குமதிகள் மிகுந்துகொண்டே போகுங்காலத்து நாணயமாற்றுக் குறைந்துகொண்டேபோவது இயல்பாயிருக்க இந்நாணயங்களை டாலர் நாணயத்துடன் ஒரு நிலையான விகிதத்தில் எவ்வாறு இணைக்கக்கூடும்? காற்றடிக்கும் திசைக்கு எதிர்த்திசையில் காற்றாடி பறக்கக்கூடுமோ? எனவே நேசதேசங்கள் இயல்புக்கு மாறாக நாணயமாற்றை இணைப்பதென்பது கூடாத காரியமெனத் தோற்றும். ஆயினும், அவை ஒரு சிறிய முறையைக்கையாண்டு அதனால்

தம் நாணயமாற்றை நிலைபெற்றுவரச்செய்தன. அம்முறை பின்வருமாறு.

5. ஆங்கிலேயர் நியூயார்க்நகரிலுள்ள மிகப் பெரும் பாங்கர்களான ஜே. பி. மார்கன் கம்பெனியாருடன் 1915-ல் ஒரு ஒப்பந்தஞ்செய்துகொண்டு, அவ்வொப்பந்தம்நீங்கும்வரை இங்கிலாந்திலிருந்து அனுப்பப்படும் உண்டியல்களையெல்லாம் ஒரு பவுண்டுக்கு 4.765 டாலர் என்ற நிலையான விகிதத்தில் டாலர் நாணயங்களுக்கு மாற்றிக்கொடுக்க ஒழுங்குசெய்தனர். மேலும், இங்கிலாந்திற்குள் பிறநாட்டாருடைய இறக்குமதிப் பெருக்கினால் பவுண்டு-டாலர் மாற்றுவிகிதம் 1:4.765க்குக் குறையும்போது அதற்கு ஜே. பி. மார்கன்கம்பெனியார் ஈடுசெய்துகொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு கொடுக்கப்பட்ட நஷ்டஈடு ஆங்கிலேயரால் மார்கன் கம்பெனியாருக்குச் செலுத்தவேண்டிய கடனாக ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. சுருங்கச்சொல்லில் ஆங்கிலேயர் தம் நாணயமாற்றுவிகிதத்தை ஒருநிலையில் நிறுவுதற்காக மார்கன்கம்பெனியாரிடமிருந்து பெருந்தொகையைக் கடனாகப்பெற்றனர் என்னலாம்.

6. இவ்வாறே, ஆங்கிலேயர் பிரான்சுக்கும் இத்தாலிக்கும் கடன் கொடுத்து, அத்தேச

நாணயங்களைத் தமது பவுண்டுநாணயத்துடன் இணைத்தனர். (பவுண்டு = 25·98 பிராங்குகள்; பவுண்டு = 30·12½ லயர்கள்) இதனால் எல்லா நேசதேச நாணயங்களின் மாற்றுமதிப்பும் ஒரே நிலையில் ஸ்திரமாக நிறுத்தப்பட்டது. இது நிற்க.

7. யுத்தத்திற்குமுன் முதலில்லாததேசங்கள் தம் நாணயமாற்றுப் பிரதிகூலமாகமாறிய பொழுது பிறநாடுகளிலிருந்து தங்கத்தைக் கடனாகப்பெற்று, அல்லது பிறநாட்டு உண்டியல்களை விற்று, நாணயமாற்றை அநுகூலமாகத் திருத்தியமைத்துவந்தமுறைக்கும் (6, 9 கட்டுரைகள்) யுத்தகாலத்தில் நேசதேசங்கள் அமெரிக்காவிலிருந்து கடனைப் பெற்றுத் தத்தம் நாணயமாற்றுவிகிதங்களை இணைத்த முறைக்கும் வேறுபாடில்லை. ஆயினும் மாற்றுவிகிதத்தை இணைத்ததில் அடங்கிய சிறப்பு யாதெனின் நேசதேசங்களின் நாணயங்கள் அவ்வத்தேயத்தில் வெவ்வேறான மதிப்பை உடையனவாக இருந்தபோதிலும் அவை எல்லாவற்றின் வெளிநாட்டு மதிப்பையும் டாலர்நாணயத்துடன் ஸ்திரமாக நிலைபெற்றுநிலவச்செய்ததாம்.

13

நாணயமாற்றை நிலைநிறுத்தல்.

(Stabilisation.)

1. நாம் முன்கட்டுரையிற்கூறியவற்றால், ஒரு தேசநாணயத்தின் உள்நாட்டுமதிப்பு எத்துணை நிலையற்றிருப்பினும், அதன் வெளிநாட்டுமதிப்பை வேறொரு தேசநாணயத்தின் வெளிநாட்டு மதிப்புடன் இணைத்து, அதன் மாற்றுவிகிதத்தை நிறுவலாம் என்ற உண்மை விளங்கும். உதாரணமாகப் பவுண்டு-டாலர் மாற்றுவிகிதம் 4.765 அல்லது 3.20 எனவும், ரூபாய்-பவுண்டு மாற்றுவிகிதம் 16 பென்ஸ் அல்லது 24 பென்ஸ் எனவும் நிலைநிறுத்தலாம். இப்படிக் கூறுவதனால் மாற்றுமதிப்பை நிலைநிறுத்த நமக்கிஷ்டமான ஏதேனும் ஒரு விகிதத்தைக் குறித்துக்கொள்ளலாம் எனத் தோன்றும்; ஆயினும் உண்மை அதுவல்ல. ஒரு தேச நாணயத்தின் மாற்றுமதிப்பை அதன் இயல்பான விகிதத்தில் (natural rate) நிலைநிறுத்தாவிட்டால் அது நிலைபெறாதொழிவது

மன்றி அதனல் அத்தேசத்துக்குப் பல கேடுகளும் வந்துறும்; ஆதலால் ஒருதேசநாணயத்தின் மாற்றுமதிப்பை எவ்விகிதத்தில் நிலைநிறுத்த வேண்டும்? அவ்விகிதத்திற்குக் குறைவாக அல்லது அதிகமாக நிலைநிறுத்தினல் விளையும் பலாபலன்கள் யாவை? என்பன போன்ற விஷயங்களை இக்கட்டுரையில் விவரிப்போம்.

2. தங்கத்திட்டம் நிலைபெற்றிருந்தகாலத்தில், எல்லாத்தேசநாணயங்களின் உள்நாட்டு மதிப்பும் எப்பொழுதும் ஸ்திரமாக இருந்ததனல் மாற்றுவிகிதங்கள் இயல்பாகத் தாமே நிலைபெற்று வந்தன. ஆனல் தங்கத்திட்டம் நீக்கப்பட்டபின் ஒரு நாணயத்தின் உள்நாட்டு மதிப்புக்கும் அதன் வெளிநாட்டு மதிப்புக்கும் உள்ள தொடர்பு அற்றதனல் மாற்றுவிகிதங்கள் நிலைபெயர்ந்தன. நிலையற்ற மாற்றுவிகிதங்கள் வர்த்தகர்களுக்கும், பாங்கர்களுக்கும் பல இடைஞ்சல்களை விளைவித்தமையால் நேசதேசங்கள் (இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா முதலியன) அவற்றை டாலர் நாணயத்துடன் இணைத்துச் சிலகாலம் நிலைபெறச் செய்தன. ஆனல் 1919-ம்வரு மார்ச்சுமாதத்தில் அவ்விணையொழியவும் (unpegging of the exchanges) மாற்றுவிகிதங்கள் மீண்டும் நிலைகெட்டன. ஆதலால் இறுதியில் எல்லாத்தேசங்களும்

தத்தம் நாணயமாற்றை ஸ்திரமாக நிறுவுமாறு பின்வரும் முறைகளைக் கையாண்டன.

3. 1925-ல் இங்கிலாந்து தனது பவுண்டு நாணயத்தை யுத்தத்திற்குமுன்னிருந்தபடி டாலர்நாணயத்துடன் 4.864 என்ற விகிதத்தில் இணைத்தது. ஆனல் வருடந்தோறும் அதன் ஏற்றுமதிகள் குறைந்தும் இறக்குமதிகள் மிகுந்தும் வந்தமையால் தங்கம் இங்கிலாந்தைவிட்டு வெளிப்போகத்தொடங்கிற்று. உள்நாட்டு நாணயச்செலாவணியும் பாங்கிக்கடன்களும் குறைந்தன. தொழில்முதலாளிகளுக்குக் குறைந்தவட்டியிற் பணங்கிடைப்பது அரிதாயிற்று. ஆதலால், தங்கத்தை வெளிச்செல்லவிடாதபடி தடுப்பதற்காக இங்கிலாந்துபாங்கி தன் வட்டிவிகிதத்தைச் சிறிதுசிறிதாக உயர்த்திற்று. இதனல் தொழில் முதலாளிகள் குறைந்த வட்டியிற் கடன்பெற இயலாது நஷ்டமடைந்தனர். தொழின் முயற்சிகள் குறைபடவும் வேலையாட்களின் சம்பளங்கள் குறைக்கப்பட்டன. இங்ஙனமாகச் சற்றேறத்தாழ நான்காண்டு இங்கிலாந்தின் பொருள்வளர்ச்சி மட்டுப்பட்டது. இயல்பாகக் குறைந்துநின்ற பவுண்டு மதிப்பை உயர்ந்தவிகிதத்தில் (higher parity) நிலைநிறுத்த முயன்றதனல் வந்த கேடுகள் இவையெனக் கொள்க. இது நிற்க.

4. 1926-ல் பிரான்சுதேசம் தனது பிராங்கு நாணயத்தின் மாற்றுமதிப்பை அதன் பழையவிகிதத்திற்குங் குறைவாக (lower parity) நிலைநிறுத்திற்று. யுத்தத்திற்குமுன் பவுண்டு-பிராங்குமாற்றுமதிப்பு 1:25-22½ என்றவிகிதத்திலிருந்தது; ஆனால் 1926-ல் அது ஏறக்குறைய ஐந்தில் ஒருபங்காகக் குறைக்கப்பட்டு 1: 124-2134 என்ற விகிதத்தில் நிறுவப்பட்டது. இவ்வாறுசெய்ததனால் பிரான்சு தேசத்தில் எவ்வகையான கேடுகளும் விளையவில்லை.*

---

*இவ்வாறல்லாது பிரான்சுக்காரர் தம் நாணயமாற்றை அதனினும் குறைவாக, உதாரணமாக 1: 130 என்ற விகிதத்தில், நிறுவியிருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்? பிரான்சின் ஏற்றுமதிகள் அதிகப்பட்டுவந்தால் நாணயமாற்று உயரும். அதாவது பிராங்கு நாணயத்தை டாலர்களுக்கு மாற்றினால் அதிக டாலர்கள் கிடைக்கும். ஆதலால், பிராங்கு, தேசத்தைவிட்டு வெளிச்செல்லத் தொடங்கும். 1917-ல் ரூபாயிலுள்ள வெள்ளி மதிப்பு (ரூபாய்க்குப் பதினாறு பென்ஸ் எனக் குறிக்கப்பட்டிருந்த விகிதத்துக்கும்மேல்) அதிகமாக உயர்ந்ததனால் ரூபாய்கள் உருக்கப்பட்டு வெள்ளியாக ஏற்றுமதியாக்கப்பட்டன. இம் மெய்ந்நிகழ்ச்சியிலிருந்து 'மாற்றுவிகிதத்தை' இயல்பாக நிற்கவேண்டியவிகிதத்துக்குங் குறைவாக நிலைநிறுத்தினால் நாணயங்கள் அத்தேசத்தைவிட்டு வெளிப்போம் என்றஉண்மை தெளிவாகிறது.

(18 பென்ஸ்) ரூபாய் மாற்றுமதிப்பை இப்பொழுது உயர்ந்த விகிதத்தில் நிறுவியிருப்பது நமது தேசத்துக்குப் பிரதிகூலம். 1925-க்கும் 1931-க்கும் இடையில் இங்கிலாந்தில் விளைந்த கேடுகளே இப்பொழுது நமது தேசத்திலும் காணப்படுகின்றன.

5. மாற்றுமதிப்பை உயர்ந்தவிகிதத்தில் நிலைநிறுத்தினால் நாணயச்செலாவணி குறைந்து (deflation) விலைநிலை இறங்கும்; குறைந்தவிகிதத்தில் நிலைநிறுத்தினால் நாணயச்செலாவணி மிகுந்து (inflation) விலைநிலை உயரும். விலைநிலை அடிக்கடி இறங்குவதும் உயருவதும் பொருளாதாரத்துறையிற் பல குழப்பங்களை விளைக்கும். இக்குழப்பங்களை ஒழிக்க முயன்றால் உயர்ந்த விகிதத்திலும் குறைந்த விகிதத்திலும் நிலைநிறுத்திய மாற்றுவிகிதம் நிலையொழியும். 'நாணயமாற்று நிலைபெறுத்தப்படுவதொன்றன்று; அது தானே நிலைபெறுவது; அன்றேல் அது நிலைபெறாதொழியும்' என ருஷிய அரசிறையமைச்சர் எடுத்துக்காட்டிய உண்மை இதுவேயாம்.

6. அப்படியானால், தானே நிலைபெறக்கூடிய மாற்றுவிகிதம் யாது? அதைக் கண்டறிவது எங்ஙனம்? இவ்வினாக்களுக்கு ஆசிரியர் கேசல் பின்வரும் விடையை அளிக்கின்றார்.

7. ஒரு தேசநாணயத்தின் உள்நாட்டு மதிப்பை அந்நாணயத்தைக்கொண்டு அத்தேசத்தினுட் கொள்ளப்படும் பொருள்களின் அளவால் நிர்ணயிக்கலாம். உதாரணமாக, 1918-ல் ரூபாய்க்கு 2 படி கோதுமையும், 1934-ல் 6படி கோதுமையும் கொண்டால் முந்தினவருஷத்தைக் காட்டிலும் பிந்தினவருஷத்தில்ரூபாயின் கொளல்

மதிப்பு (purchasing power) மும்மடங்காக உயர்ந்திருக்கிறது என்னலாம்; பொருள்விலைநிலை மும்மடங்காகக் குறைந்திருக்கிறது எனினும் பொருந்தும். அதேசமயத்தில் இங்கிலாந்தின் பொருள்விலைநிலையும் மும்மடங்காகக் குறைந்திருந்தால் நாணயத்தின் கொளல்மதிப்பு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் சமம் எனக்கூறலாம். [இவ்வாறிருப்பதை ஆசிரியர் கேசல் ' சமநிலைக்கொளல்மதிப்பு ' (purchasing power parity) என முதன்முதலாக வழங்கினர்.] அதே சமயத்தில் பிரான்சுதேசத்தின் விலைநிலை இருமடங்காகவும், அமெரிக்காவின் விலைநிலை நான்குமடங்காகவும் உயர்ந்திருந்தால் நாம் இங்குக்காட்டிய நான்கு நாணயங்களின் கொளல் மதிப்பும் 3 : 3 : 2 : 4 என்ற சம்பந்தத்தில் இருக்கின்றது என்னலாம். எல்லா நாணயங்களின் கொள்ல்மதிப்பும் சமமாயிருக்கும்படி (the equilibrium rate) மாற்றுவிகிதத்தை நிறுவினல் அது நிலைபெறும் என்பது ஆசிரியர் கேசலின் கோட்பாடு.*

* உதாரணமாக ஒருபொருளைச் செய்வதற்கு அடங்கும் செலவு இங்கிலாந்தில் ஒரு பவுண்டாகவும், அமெரிக்காவில் 4 டாலராகவும் இருக்குமானல் சமநிலை மாற்றுவிகிதம் (the equilibrium rate of exchange) 1:4 ஆம். 'If goods and services which cost £ 1 in England cost on the average § 4 in the United States, then, "the equilibrium rate of exchange" between the two currencies is § 4 to £ 1.' (A. Vallance in *What Everybody wants to know about Money*).

8. இக்கோட்பாடு ஒரு சிறந்த பொதுவிதியாயிருப்பினும் இதிலுள்ள சில குற்றங்களினலும், ஒருதேசத்தின் பொதுவான விலைநிலையை (general price level) அறுதியிடுதலில் ஏற்படும் தொல்லைகளாலும் இது ஏட்டுச்சுரைக்காயாகவே இருந்துவருகிறது. ஆயினும் இதிலடங்கிய மூலக்கருத்து என்னையெனின் ஒரு தேசநாணயத்தின் மாற்றுவிகிதத்தை நிலைநிறுத்தும்போது அத்தேசத்தின் பொருள்விலைநிலைக்கும் அம்மாற்றுவிகிதம் இணைக்கப்படும் தேசங்களின் பொருள்விலைநிலைக்கும் உள்ள சம்பந்தத்தை நன்கு ஆராய்ந்து கணக்கிட்டுக்கொள்ளல்வேண்டும் என்பதாம். அவ்வாறு செய்யாவிட்டால் நிலைநிறுத்திய மாற்றுவிகிதம் நிலைபெயர்ந்தொழியும். இவ்வுண்மை 1929-ம் வருடத்தில் உலக அநுபவமாக விளங்கிற்று. இதை அடுத்த கட்டுரையில் விவரித்துக் கூறுவோம்.

14

நாணயமாற்றும் உலகப் பொருளாதாரக் குழப்பமும்.

(Exchanges and the World Economic Crisis.)

1925-ல் இங்கிலாந்து பழைய மாற்று விகிதத்திலும், 1928-ல் பிரான்சு புதிய மாற்று விகிதத்திலும், 1925-க்கும் 1928-க்கும் இடையில் மற்றெல்லாத்தேசங்களும் இயல்பான மாற்றுவிகிதம் எது எது எனத் தாம் அபிப்பிராயப்பட்டனவோ அவ்வவமாற்று விகிதத்திலும், தத்தம் நாணய மாற்றை நிலைநிறுத்தின. தங்கத்திட்டம் புத்துயிர் பெற்றெழுந்தது. உலகிற் புதுயுகம் தோன்றிற்று எனப் பலரும் எண்ணலாயினர். இதற்கிணங்க உலகப் பொருளாதார நிலையிலும் அதி தீவிர அபிவிருத்தி காணப்பட்டது.

2. ஆனல், ஒருவரும் எதிர்பாராவண்ணம் 1929-ல் உலக நாணயமாற்றிற் பெருங் குழப்பங்கள் ஏற்பட்டு தங்கத்திட்டம் பிழைபட்டிருந்தது. அதன் காரணங்கள் பின்வருமாறு:—

3. யுத்தத்திற்குப்பின் ஐரோப்பாவில் அமைக்கப்பட்ட சில புதியதேசங்கள் (யூகோசிலோவியா, போலண்டு போல்வன) தாமும் தங்கத்திட்டத்தைத் தத்தம் தேசத்திலும் நிறுவ எண்ணித் தத்தம் தலைமைப்பாங்கிகளில் தங்கத்தை மிகுதியான அளவில் சேர்க்கத்தொடங்கின. தங்க உற்பத்தி குறைந்திருந்தகாலத்தில் எல்லாத்தேசங்களும் போட்டிபோட்டுத் தங்கத்தை வாங்க முயன்றமையால் தங்கவிலை மிக அதிகமாக உயர்ந்தது.

4. இங்கிலாந்து,பிரான்சு,இத்தாலி,முதலிய தேசங்கள் தாம் அமெரிக்காவிடமிருந்து பெற்றிருந்த யுத்தக்கடன்களை (War debts) திருப்பிச்செலுத்துவதற்காகத் தம்மிடத்துள்ள தங்கத்தை வருடந்தோறும் அமெரிக்காவுக்கு அனுப்பிவந்தன. ஜெர்மனி முதலான தேசங்கள் நஷ்ட ஈட்டுக்காக (reparations) பெல்ஜியம், பிரான்சு முதலான தேசங்களுக்குத் தம்மிடத்துள்ள தங்கத்தை அனுப்பிவைத்தன. இங்ஙனமாக யுத்தக்கடன்களையும் நஷ்ட ஈட்டையும் திருப்பிச் செலுத்தியதனல் உலகத்திலுள்ள தங்கத்தில் மூன்றில் இரண்டுபாகம் அமெரிக்காவிலும் பிரான்சிலும் போய்ப்புகுந்தது. இத்தேசங்கள் தம்மிடத்து வந்த தங்கத்தைப் பிற

நாடுகளுக்கு அனுப்பியிருந்தால் தங்கத்திட்டம் இயங்கியிருக்கும். அவை அவ்வாறு செய்யாமையால் தங்க இருப்புக் குறைந்த மற்றத் தேசங்கள் தங்கத்திட்டத்தைக் காக்கமுடியாது தடுமாறிக் கொண்டுநின்றன.

5. நாம் மேற்காட்டிய காரணங்களால் தங்க வியாபகத்தில் (gold distribution) எழுந்த குழப்பம் தங்கத்திட்டத்தை அலைத்துக்கொண்டிருந்தது. அவ்வமயத்தில் உலக வர்த்தகநிலையிலும், கொடுக்கல் வாங்கல்களிலும் காணப்பட்ட சில மாறுதல்கள் அத்திட்டம் முழுவதும் பிழைபட்டழியுமாறு ஒத்து உதவிபுரிந்தன.

6. யுத்தத்திற்குமுன் சீனா, பெர்சியா, இந்தியா முதலான ஏழைத் தேசங்களும் அர்ஜென்டைன், பிரேசில் (Brazil), கானடா முதலான புதியதேசங்களும் பெரும்பாலும் உணவுப் பொருள்களையும் மூலப்பொருள்களையும் விளைவித்து, அவற்றை ஏற்றுமதிசெய்து, அவற்றிற்குப் பதிலாக மேற்கு ஐரோப்பிய தேசங்களிலிருந்து இயந்திரங்களின் உதவியாற் செய்யப்படும் ஆடி, ஆடை முதலிய செய்பொருள்களைப் பெற்றுவந்தன. ஆனால் யுத்தகாலத்திலும் அதற்குப்பின்னும் இத்தேசங்கள் காப்புவரிகளினாலும் (protec-

tive tariffs) அரசாங்கஉதவியினாலும் (state aid) தம் இயந்திரக்கைத்தொழில்களை வளர்த்துத் தாம் முன் மேற்கு ஐரோப்பிய தேசங்களினின்றும் இறக்குமதிசெய்துவந்த செய்பொருள்களை வாங்க மறுத்தன; அன்றியும், அப்பொருள்களுக்கு உயர்ந்த இறக்குமதிவரிகளையும் (high import duties) விதித்தன. இவ்வாறு மேற்கு ஐரோப்பிய தேசங்களின் ஏற்றுமதி குறைவுபட அவை மற்றைத் தேசங்களின் உணவுப்பொருள்களையும் மூலப்பொருள்களையும் வாங்கமுடியாது அப்பொருள்களுக்கு இறக்குமதி வரிகளை விதித்தன. உலக வர்த்தகமும் கொடுக்கல் வாங்கலும் இங்ஙனமாக இடர்ப்பட்டுநின்றமையால் தங்கத்திட்டம் நீங்கும் நிலையிலிருந்தது.

7. அவ்வமயத்தில் (1929-ம் ௵ அக்டோபர்மாதத்தில்) அமெரிக்காவிலுள்ள மிகப்பெரிய நியூயார்க்குப் பங்குமார்க்கெட்டு நொடித்தது* (the Collapse of the New York Stock

* வர்த்தகக் குழாங்கள் (companies), தொழிற்சாலைகள், பாங்கிகள் முதலான ஸ்தாபனங்கள் தாம் வேண்டும் மூலதனத்தைச் சிறுசிறு பங்குகளாகப் பொதுமக்களிடமிருந்து பெறுகின்றன. இப்பங்குகளை (shares, stocks etc.) விற்பதற்கும் வாங்குவதற்கும் அமைக்கப்பட்டுள்ள ஸ்தாபனம் 'பங்கு மார்க்கெட்டு' (Stock Exchange) என்னப்படும். ஒரு தொழிற்சாலை அல்லது ஒரு பாங்கி அதிக இலாபத்துடன் நடைபெற்றால் அதன்

Exchange); அதனால் அநேகபாங்கிகள் பெருநஷ்ட மடைந்தன. இந்நஷ்டத்தைத் தீர்க்க அவை ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலுமுள்ள தலைமைப் பாங்கிகளுக்குத் தாம் கொடுத்திருந்த கடன்களைத் திருப்பிக்கொடுக்குமாறு கேட்டன. கடனைத் திருப்பிச்செலுத்த இயலாமல் ஆஸ்திரியாவின் தலைமைப்பாங்கியும் (Credit Anstalt) ஜெர்மன் தேசப் பாங்கிகளும் நொடித்தன.

8. இதற்கிடையில் இங்கிலாந்து பாங்கியினிடத்துத் தாம் கொண்டிருந்த நம்பிக்கை குறைந்ததனால்* பிறநாட்டார் அதில் இட்டு வைத்திருந்த தமது தங்கத்தை வரவழைக்க (withdraw)

பங்குகளின் விலை உயரும். 1925-க்கும் 1928-க்கும் இடையில் அமெரிக்காவிலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளும் வர்த்தகக் குழாங்களும் அளவற்ற இலாபத்தை அடைந்துவந்தமையால் அநேகர் இப்பங்குகளைப் போட்டிபோட்டு வாங்கினர்; ஆதலால் பங்குகளின் விலை அவற்றின் இயல்பான விலைக்குப் பன்மடங்கு அதிகமாய் உயர்ந்தது. ஆனால், இறுதியில் அத்தொழில் ஸ்தாபனங்களிற் பல நஷ்டப்பட்டபொழுது எல்லாரும் அப்பங்குகளை விற்க முயன்றனர். பங்குகளின் விலை தலைகீழாய் விழுந்தது. அவற்றை முதலில் அதிக விலைக்குவாங்கிப் பின் குறைந்த விலைக்கு விற்றதனால் பலர் நஷ்டமடைந்தனர்.

'* The British financial crisis of 1931 was... brought on...by a loss of confidence in the stability of the pound sterling on grounds which were mainly domestic. The British Labour Government then in

முயன்றனர். 1931-ம் ௵ ஜூலை, ஆகஸ்டு ஆகிய
இரண்டு மாதங்களில்மட்டும் சுமார் 20 கோடி
பவுண்டு தங்கம் இவ்வாறு வரவழைக்கப்பட்டது.
இங்கிலாந்து பாங்கியின் மொத்த இருப்புத்தங்கம்
குறைவாக இருந்ததனால் அது 130 கோடி
பவுண்டு தங்கத்தை அமெரிக்காவிலும் பிரான்சி
லுமாகக் கடன் வாங்கியது; அவ்வாறு செய்த
பின்னரும் தங்கம் மேலும் மேலும் இங்கிலாந்தை
விட்டு வெளிப்போகத்தொடங்கிற்று; பவுண்டு
தனது மதிப்பிழந்தது. ஆதலால் பழைய மாற்று
விகிதத்தை நிலைநிறுத்த இயலாதொழிந்தது;
1931, செப்டெம்பர், 21-ல் இங்கிலாந்து தங்கத்
திட்டத்தை நீக்கிற்று. அதேமாதத்தில் இங்கிலாந்
தைப் பின்பற்றிச் சுமார் 20 தேசங்களும், 1933
ஜூலை மாதத்தில் அமெரிக்காவும் தங்கத்திட்டத்
தைக் கைவிட்டன. பிரான்சு, இத்தாலி, பெல்
ஜியம், போலண்டு, ஸ்விட்ஜர்லாந்து, ஆகிய
இத்தேசங்கள்மட்டுமே இற்றைவரைக்கும் தங்கத்
திட்டத்தைக் காத்துவருகின்றன.

---

office was accused of extravagance in its administration of public funds; and the May Committee on National Expenditure produced in the summer of 1931 an alarmist report... At this stage the Bank of England made the disastrous mistake of borrowing short term assets from abroad' (Cole, *What Everybody wants to know about Money, P. 88*).

9. நாம் மேற்கூறியவாறு பெரும்பாலான தேசங்கள் தங்கத்திட்டத்தை நீக்கியமையால் நாணயமாற்று மீண்டும் நிலைகெட்டு, வர்த்தகம் பெரிதும் இடர்ப்பட்டது. இக்குழப்பங்களை ஒழிப்பதற்கு, சுமார் 2000 நிபுணர்கள் அடங்கிய பெரிய மகாநாடு ஒன்று லண்டன் மாநகரில் 1933-ம் ௵ ஜுன் ௴ 21௳ கூட்டப்பட்டது. தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவி, நாணயமாற்று விகிதங்களை ஒருநிலைப்படுத்துவதையே முழுநோக்கமாகக்கொண்டு, தொடங்கப்பட்ட இம்மகாநாடு ஒரு முடிவுக்கும் வராது, 1933-ம் ௵ ஜூலை ௴ 27௳ கலைந்தது.*

* (1) தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவுவதற்கு முன் நிபந்தனையாக யுத்தக்கடன்களைக் குறைக்கவேண்டும் என இங்கிலாந்து முதலிய கடன்பட்ட தேசங்கள் வேண்டியபொழுது அதை அமெரிக்கா ஒப்புக்கொள்ள மறுத்தது. (2) ஏற்றுமதி இறக்குமதி வரித்தடைகளை ஒழிக்கவேண்டுமென மேற்கு ஐரோப்பிய நாடுகள் பிரேரேபித்தபோது காப்புவரிகளால் தம் தேசக் கைத்தொழில்களை வளர்த்துவந்த யூகோசிலோவியா, எகிப்து முதலான பின்னடைந்த தேசங்கள் அப்பிரேரபணையை எதிர்த்தன. (3) தங்கள் கடன் பளுவைக்குறைக்க அல்லது தம் விளைபொருள்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமெனப் பின்னடைந்த தேசங்கள் வேண்டியபொழுது மேற்கு ஐரோப்பிய தேசங்கள் அதை அங்கீகரிக்கவில்லை. (4) இதற்கிடையில், முதலில் மாற்று விகிதத்தை ஸ்திரமாக நிறுவியபின் மற்ற விஷயங்களை ஆலோசிக்கலாம் எனத் தங்கத்திட்டத்தைக் கைக்கொண்டிருந்த தேசங்கள் கோரின; இதற்கு அமெரிக்காவும் இங்கிலாந்தும இணங்கவில்லை. இங்ஙனமாக, எல்லாத் தேசத்தவர்களும் தத்தம தேசீயப் பொருளாதாரநன்மையைமட்டும் கருதி ஒருவரோடொருவர் முரண்பட்ட கோட்பாடுகளையே சாதித்தனராதலால் இப்பொருளாதார மகாநாடு ஒருமுடிவுக்கும்வராது கலைந்தது.

15

எதிர்கால நாணயமாற்று.

(The Future of Foreign Exchange.)

உலகப் பொருளாதார மகாநாட்டில் தங்கத்திட்டம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது என்னலாம். அதை இனித் தோண்டியெடுத்து அதற்குப் புத்துயிர் அளித்து, அதை யுத்தத்திற்கு முன்னிருந்தவாறு இயங்கச்செய்தல் இயலாதகாரியம்.* தங்கத்திட்டம் அங்ஙனம் இயங்காதொழிந்தால் நாணயமாற்று நிலையற்றிருக்கும் என்பதில் ஐயமென்னை?

* 'தங்கம் ஒப்பற்ற விலையுள் பொருள்; அதனைச் சேமித்து வைக்கும் தேசம் பெருஞ்செல்வமுடையதாம்' என எல்லாத் தேசங்களும் எண்ணித் தங்கத்தைப் போட்டிபோட்டு வாங்குவதனால் அதன் விலை மேன்மேலும் உயர்ந்துகொண்டுபோகிறது; தங்க விலை ஸ்திரமாக இல்லாவிட்டால் அதன் ஆதாரத்தின் மேல் வெளியிடப்பெறும் தாள்நாணயங்கள் ஸ்திரமான மதிப்புடையனவாக இரா; நாணயமதிப்பு ஸ்திரயாக இல்லாவிட்டால் பொருள் விலைநிலை அடிக்கடி மாறுபடும்; அதன் விளைவாக வர்த்தகம் இடர்ப்படும்; நாணயமாற்றும் நிலைபெயரும். ஆதலால் தங்கவிலை ஸ்திரமாக நிறுவப்படுமுன் தங்கத்திட்டம்

2. ஆனால் உலகப் பொருளாதார மகாநாடு கலைந்தபின் இங்கிலாந்துதேசப் பிரதிநிதிகளும், மற்றும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பிரதிநிதிகளும் ஒட்டவா (Ottawa) நகரில் கூடி, எதிர்கால நாணய மாற்றைப்பற்றி ஓர் அறிக்கையை (manifesto) விடுத்தனர். இவ்வறிக்கை உலக நாணயச் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியதுபோற் கருதப்படுகிறது. அதிலடங்கிய முக்கிய அம்சங்கள் பின்வருமாறு.

3. முதலாவது:— இங்கிலாந்து தேசத்துத் தாள்நாணயமாகிய ஸ்டெர்லிங் ஏறக்குறையநிலையான கொளல்மதிப்பை உடையதாக நிறுவப்படும். [அதாவது அத்தேசத்தின் பொருள் விலைநிலை ஏறக்குறைய எப்பொழுதும் ஸ்திரமாக நிலைபெறும் என்பது. தங்கத்திட்டம் வழங்கப்பெற்ற

இயங்காதென்க. மேலும், தற்போது ஒவ்வொரு தேசத்திலும் வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்களுக்கு அதிகவரி விதித்தல் (abnormal import duties), அவற்றின் அளவை வரையறுத்தல் (import quotas), அவற்றை முற்றுந்தடுத்தல் (prohibition) முதலிய முறைகள் கையாளப்பட்டுவருகின்றன. உலகவர்த்தகம் இங்ஙனம் இடர்ப்பட்டுநிற்கையில் ஒருதேசத்திற்கும் மற்றைத் தேசங்களுக்கும் கொடுக்கல் வாங்கல் நடைபெறுவதும் கூடாதகாரியம். தங்கவிலை நிலைபெறாமை, வர்த்தகத்துக்குள்ள தடைகள், கொடுக்கல் வாங்கல் நிகழாமை ஆகிய இக்குறைகளை நீக்கினாலன்றித் தங்கத்திட்டத்தை இனி இயங்கச்செய்யல் இயலாதென்பது பல நிபுணர்களின் கோட்பாடு.

காலத்தில் தங்கவிலையை (பவுண்டு நாணயத்தால்) நிலைநிறுத்தி, அதனாற் பொருள் விலைநிலையை ஸ்திரப்படுத்தியதுபோல,இப்பொழுது ஸ்டெர்லிங்கின் கொள்மதிப்பை நிலைநிறுத்திப் பொருள் விலைநிலை ஸ்திரப்படுத்தப்படும்.*]

* ஸ்டெர்லிங் நாணய வெளியீட்டை ஒரு வரம்புக்குட்படுத்துவதினாலும், பொருள் உற்பத்தி மிகுந்தகாலத்து அந்நாணயச் செலாவணியைப் பெருக்குவதனாலும், அது குறைந்தகாலத்து அதனைக் குறைப்பதனாலும், இங்கிலாந்து பாங்கியின் வட்டி விகிதத்தை உயர்த்தல் அல்லது குறைத்தல், அரசாங்கக் கடன் பத்திரங்களையும் உண்டியல்களையும் நேரே வாங்கல் அல்லது விற்றல் (open market operations) போன்றமுறைகளைக் கையாளுவதனாலும், இங்கிலாந்தின் உள்நாட்டுப் பொருள்விலைநிலையை ஒருப்படியாக ஸ்திரப்படுத்தலாம். ஆனால், மற்றொரு தேசம் [உதாரணமாக, அமெரிக்கா] திடீரெனத் தன்னிடத்துள்ள தங்கத்தை அல்லது கடன் பத்திரங்களை இட்டுவைப்புக்காக இங்கிலாந்து பாங்கிக்கு அனுப்புதற்பொருட்டு ஸ்டெர்லிங் உண்டியல்களை மிகுதியான அளவில் வாங்கினால் ஸ்டெர்லிங் மதிப்பு உயர்தல்போன்ற வெளிநாட்டு நிகழ்ச்சிகளாலும் (external influences) இங்கிலாந்தின் பொருள்விலைநிலை ஏற்றத்தாழ்வெய்தும். இத்தகைய வெளிநாட்டு நிகழ்ச்சிகளினால் ஸ்டெர்லிங் மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைச் சமநிலைப்படுத்துவதற்காக ஆங்கிலேயர் இங்கிலாந்து பாங்கியில், தனி இலாகா ஒன்றை நிறுவி, அதற்கு 'நாணயமாற்றுச் சமநிலைநிதி' (Exchange Equilisation Account) என்று பெயர் வழங்கும் ஒரு நிதியையும் அளித்து, அதன் மூலமாக ஸ்டெர்லிங்கின் மதிப்பை ஒரு நிலையில் இருந்துவரச் செய்கின்றனர். ஸ்டெர்லிங் மாற்று மதிப்பு இயல்பான விகிதத்துக்குமேல் உயரக்கண்டால் அந்நிதி

4. இரண்டாவது:—மற்றைத் தேசங்கள் உள்நாட்டுச் செலாவணிக்குத் தம் தேசங்களில் தமக்கிஷ்டமான நாணயங்களை வழங்கிக்கொள்ளலாம். அந்நாணயங்களின் அளவைத் தம் தேசப் பொருள் விலைநிலைக்கேற்றவாறும் திட்டஞ்செய்து கொள்ளலாம். ஆனால் வெளிநாட்டு வர்த்தகம் இடர்ப்படாவண்ணம் அந்நாணயங்களின் வெளிநாட்டு மதிப்பு ஸ்திரமாக இருக்கவேண்டுமாதலால் அத்தேசங்கள் தம் நாணயமாற்றை ஸ்டெர்லிங்குடன் தமக்கிஷ்டமான ஒரு நிலையான விகிதத்தில் இணைத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும், ஸ்வீடன், நார்வே முதலிய நாடுகளும் நாம் மேலே விளக்கிக் காட்டியபடி ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டத்தைக் கைக்கொண்டுவருகின்றன.

5. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (U.S.A.) தலைவரான ரூஸ்வெல்ட் என்பவரும் தங்கத்திட்

யிலுள்ள பணத்தைக்கொண்டு வெளிநாட்டு உண்டியல்களை வாங்கி அவ்விகிதத்தைக் குறைக்கின்றனர்; குறையக்கண்டால் அவ்வுண்டியல்களை விற்று அவ்விகிதத்தை உயர்த்துகின்றனர். இவ்வாறு செய்வதனால் ஸ்டெர்லிங்மதிப்பு ஸ்திரமாக நிறுவப்படுகிறது. [ஆயினும் சில சமயங்களில் பொருள் விலைநிலையை அதிகமாய் உயர்த்தவேண்டுமென ஆங்கில அரசாங்கத்தார் தீர்மானித்தால் ஸ்டெர்லிங் மதிப்புக் குறையும்போது அதை உயர்த்துவதற்கு இங்கிலாந்து பாங்கி ஒரு முயற்சியும் செய்வதில்லை.]

டத்தைத் தம் தேசப் பொருள்விலைநிலை 1926-ம் வருடத்திலிருந்தபடி உயர்நிலை எய்துமாறு நாணயச் செலாவணியைப்பெருக்கல் முதலிய பலமுறைகளைக் கையாண்டுவருகிறார். ஆதலால் டாலர் நாணயமாற்றும் நிலையற்றுக் கிடக்கின்றது. ஸ்டெர்லிங்கிக்கும் டாலருக்கும் ஒரு நிலையான மாற்று விகிதத்தை நிறுவவும் அவர் மறுக்கிறார். இது நிற்க.

6. ஆனால் தங்கத்திட்டத்தைக் கைக்கொண்டுள்ள பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, ஸ்விட்ஜர்லந்து முதலிய தேசங்களோ யுத்தத்திற்கு முன்னிருந்தபடி தங்க நாணயங்களையே பிரதான நாணயங்களாக வழங்கி, அவற்றின் உள்நாட்டு மதிப்பும் வெளிநாட்டு மதிப்பும் சமமாக நிலைபெற்றுவரச் செய்கின்றன. ஆயினும் உலக வர்த்தகப்பொருள்களின் விலைநிலை குறைந்திருப்பதனாலும் எல்லாத் தேசங்களிலும் வரித்தடைகள் இடப்பட்டிருப்பதனாலும் இத்தேசங்களின் ஏற்றுமதிகள் குறைகின்றன. ஆதலால் இத்தேசநாணயங்களின் மாற்றுமதிப்புக் குறைகின்றது. இதைத் தடுப்பதற்காகவே இத்தேசங்கள் பிறநாட்டு இறக்குமதிகளைத் தடுத்தல், வரையறைசெய்தல் அல்லது அவற்றிற்கு அதிகவரி விதித்தல் முதலிய முறைகளைக் கையாண்டுவரு

கின்றன. இவ்வாறு செய்தல் இறுதியில் இத் தேசங்களுக்கே நஷ்டமாய் முடியும் என்பது உண்மை. ஆதலால் இவை இனித் தம் உள்நாட்டு நாணயமதிப்பைக் குறைத்து (devaluation) அல்லது தங்கத்திட்டத்தைக் கைவிட்டுத் தம் நாணயமாற்றை ஸ்திரப்படுத்தலாம்.

7. ஆனால், உலக வர்த்தகப் பொருள்விலைநிலை உயர்ந்தபின் இங்கிலாந்தும் அமெரிக்காவும், தங்கத்திட்டத்தைக் கைக்கொண்டுள்ள தேசங்களும் ஒரு மகாநாடு கூடிப் பொருள் விலைநிலை ஸ்திரமாக இருந்துவருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து, அதன் பின்னர், எல்லாத் தேச நாணயங்களுக்கும் ஒரு நிலையான மாற்று விகிதத்தை நிறுவலாம்.* இவ்வாறு செய்தால் உள்நாட்டு நாணயச் செலாவணியிலும் வெளிநாட்டு நாணய மாற்றிலும் இப்பொழுது காணப்படும் பல குறைகள் நீங்கும் என்பதற்கு ஐயமில்லை.

---

* 'If the United States of America and Great Britain could come to a firm understanding first to raise prices to the desired level and then to keep them at or very close to that level, the world would be assured of something very nearly equivalent to stability of world gold prices. All that is required is harmonious agreement and concerted action by London and New York to control gold in relation to an International Index of wholesale prices and to maintain stability of exchange between American dollars, British sterling, and gold' (Sir Basil Blackett, *Planned Money*, pp. 132, 133.)

8. எதிர்காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும் அவற்றுடன் வர்த்தகப்பழக்கமுள்ள வேறுநாடுகளும் தத்தம் நாணயங்களின் மாற்று மதிப்பை ஸ்டெர்லிங்குடனும், கானடா, மெக்ஸிகோ, முதலிய நாடுகள் தம்நாணயங்களின் மாற்று மதிப்பை டாலருடனும், லத்தீன் ஐக்கியநாடுகள் தம் நாணயங்களைப் பிராங்குடனும் இணைத்து வைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு இணைக்கப்பட்ட விகிதத்தைப் பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை அவை தத்தம் தேசப் பொருளாதார முன்னேற்றத்திற்கேற்றவாறு மாற்றிக்கொள்ளலாம். அப்படி மாற்றும் பொழுது, வெளிநாட்டு வர்த்தகப்பொருள்களின் விலைநிலையில் ஏற்படும் ஏற்றமும் தாழ்ச்சியும் உள்நாட்டுப் பொருள்விலைநிலையையும் நிலைபெயரச் செய்யுமாதலால் இக்கேடு விளையாவண்ணம் ஒவ்வொரு தேசத்திலும் பொருளுற்பத்தி (produchion), அதன் விலைநிலை, வேலையாட்களின் கூலி (wages), முதலிய எல்லாப் பொருளாதாரத் துறைக்கும் நீண்டகாலத் திட்டங்கள் (long-term economic planning) அமைக்கப்படவேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்டால் ஒவ்வொரு தேசத்தின் உள்நாட்டு நாணயச்செலாவணியும் வெளிநாட்டு நாணயமாற்றும் இடையூறின்றி இனிது நடைபெறும்.

X:57 76987
N35